
ஆகஸ்ட் 24 - 30, 2008 August 24 - 30, 2008 பக்கங்கள் - 28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வார மலர்



## வன்னிப் பேரவலம் சர்வதேச மயமாகிறது



# அதிகரிக்கும் முறுகல்நிலை

## பதவியைப் பறிகொடுக்க முன் வெளியேறிய பாக்.அதிபர்





# வன்னிப் பேரவலம் சர்வதேச மயமாகிறது

வன்னிக் களமுனையில் போர் தீவிர மாகும் நிலையில் -

அந்தப் போர் காரணமாக அகதிகளா கும் மக்களின் எண்ணிக்கையும் நிமிடத் துக்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டி ருக்கின்றது.

அகதிகள் விவகாரம் சர்வதேச மயப் பட்டுள்ள போதும், அகதிகளின் அவலம் எல்லைமீறிப் போய்க்கொண்டிருக்கின்றது என்று அரச அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

முகமாலை, வெலிஓயா, முல்லைத்தீவு, கிளிநொச்சி என திறக்கப்பட்டுள்ள போர் முனைகளில் போர்தீவிரமாகிக் கொண்டி ருக்கின்றது.

போர் நடைபெறும் பகுதியை மட்டு மல்லாது, முழுமையான வன்னிப் பிரதேசத் தையே போரின் பாதிப்பு பிரதிபலிக்கத் தொடங்கியுள்ளது.

போர் தீவிரமான மன்னார் மாவட்டத் தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை போர் கலைத்துக் கொண்டிருக்கின்றது.

மன்னாரில் இருந்து இடம் பெயர்ந்து முழங்காவில், ஜெயபுரம், நாச்சிக்குடாப் பகுதிகளில் தங்கியிருந்த அகதிகள் அங்கு வந்து விழும் ஷெல்களால் இடம் பெயர்ந்து கிளிநொச்சி நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். அகதிகள் பிரச்சினையால் கிளிநொச்சி நகரம் மற்றும் அண்டிய வட்டக்கச்சி, கல்மடு, கண்டா வளை ஆகிய பகுதிகள் பெரும் நெருக் கடிக்குள்ளாகியுள்ளன.

தமது உடைமைகள், வியர்வை சிந்தி வளர்த்த பயிர்கள், ஆசையாக வளர்த்த கால்நடைகள் எல்லாவற்றையும் கைவிட்டு, உடுத்த உடுப்புக்களுடன் கிளிநொச்சிக்கு வந்துள்ள ஆயிரக்கணக்கானவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க செயலக அதிகாரி களும் தொண்டு அமைப்புக்களின் பிரதி நிதிகளும் படாதபாடுபடுகிறார்கள்.

''உலக உணவுத்திட்டம் வழங்கிய பொருள் கள் ஓரளவு கையிருப்பில் உள்ளதால், நிலைமைகளைச் சமாளிக்கிறோம். ஆனால் எவ்வளவு நாளுக்கு இப்படி செயற்படமுடியும்'' என்று அலுத்துக் கொள் கிறார் கிளிநொச்சி அரச அதிபர் வேத நாயகன்.

''கிளிநொச்சிக்கு கடந்தவாரங்களில் வந்தவர்களை வன்னேரிக் குளத்தில் சிறு கொட்டில்கள் அமைத்துக் குடியமர்த்த நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு கொட்டில் அமைக்க பொருள்கள் வழங்கி னோம். அவர்கள் அங்கு கொட்டில் அமைத்து ஆற அமருவதற்கு முன்னர், அந்தப் பிரதேச மக்களுடன் இவர்களும் அள்ளுப்பட்டு மீண்டும் கிளிநொச்சிக்கு வந்துவிட்டனர்'' - என்கிறார் அவர்.

''இப்போது வட்டக்கச்சி, கண்டாவளை, கல்மடு பகுதிகளில் மக்களை குடியமர்த்த ஏற்பாடுகள் செய்கிறோம். அதுவும் எவ் வளவு காலத்துக்கு என்ற கேள்வியே அந்த மக்களிடம் உள்ளதை அவதானிக்கமுடி கிறது'' - என்றும் அவர் ஆதங்கப்பட்டார்.

மன்னார் பெரியமடுவில் இடம் பெயர்ந்த ஒருவர், ''ஷெல் கலைக்கக் கலைக்க ஓடிக் கொண்டிருக்கிறேன். பத்து இடங்களில் தங்கி இப்போது பதி னொராவது இடமாக கிளிநொச்சிக்கு வந்து விட்டேன். இனி எங்கே போவது?''- என்று கேள்வி எழுப்புகிறார்.

''ஆரம்பத்தில் இடம்பெயரும் போது ஓரளவு பொருள்கள் கையில் இருந்தன. இப்போது கொஞ்சம் கொஞ்சமாக ஒவ் வொரு இடங்களிலும் கைவிட்டுக் கைவிட்டு சிறுபொட்டலத்துடன் கிளிநொச்சிக்கு வந்துள்ளேன்'' - என்கிறார் மற்றொரு அகதியான குடும்பஸ்தர்.

''எங்களை யாரும் பலவந்தமாக இடம்பெயர வைக்கவில்லை. ஷெல்கள் தான் எங்களைக் கலைத்துக் கொண்டிருக் கின்றன'' - என்கிறார் விவசாயியான ஒருவர்.

## ........பத்து இடங்கள் இடம் பெயர்ந்தாச்சு பதினொராவது இடமும் செல்ல...........

## அகதிகள் ஆயத்தம்

அகதிகளின் வருகையால் நெருக்கடிக் குள்ளாகியுள்ள கிளிநொச்சி நகரும் அதை அண்டிய பகுதியும் சோகமயமாக் காட்சி யளிக்கின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்து என்ன? என்ற ஏக்கத்துடன் காலத்தைக் கழிக்கும் அகதிகளின் நிலை குறித்து அரச அதிபர் வேதநாயகன் கூறுகையில் -

''ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கும் மற்றொரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்குமாக தொடர்ந்து இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் அகதிகள் நிச்சயமற்ற பேரவலநிலையில் காணப்படு கின்றனர். எதிர்கால நம்பிக்கை எதுவும் இன்றி அவநம்பிக்கையுடன் உள்ளனர்'' என்கிறார்.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து ஒட்டுமொத்தமாக சகலரும் தென்மராட்சிக்கு, வடமராட்சிக்கு இடம் பெயர்ந்த அவலம் குறித்து, அப்போது சர்வதேச அமைப்புக்களோ, ஐ. நா. அமைப்புக்களோ வாய்கூடத் திறக்க வில்லை. அத்துடன் அந்த மக்களின் அவலங்கள் வெளியில் கூடத் தெரிய வில்லை.

ஆனால், அதற்கு மாறாக தற்சமயம் நடக்கும் வன்னி இடம்பெயர்வு சர்வ தேசத்தை சிந்திக்கவைத்துள்ளது.

ஐ.நா. அமைப்புக்கள் முதல் சர்வதேச மன்னிப்புச்சபை, மனித உரிமைகள் காப் பகம், செஞ்சிலுவை சர்வதேசக்குழு போன்ற அமைப்புக்கள் அகதிகள் விடயத்தை பகிரங்கப்படுத்தி விட்டன.

அகதிகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்த மோதல்களில் சம்பந்தப்பட்ட இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் உதவவேண் டும் என அவை பகிரங்கமாக கோரிக்கை களை விட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த மக்களின் அவலங்களை பட்டிய லிட்டு வெளிப்படுத்துகின்றன. தமது அமைப்புக்கள் எதிர்நோக்கி யுள்ள பிரச்சினைகளையும் வெளிப்படுத்து கின்றன.

அகதிகளுக்கு உதவிகளை வழங்க தாம் எதிர்நோக்கும் சிக்கல்களையும் அறிக்கைகள் மூலம் வெளியிடுகின்றன.

இதன் மூலம் அகதிகளின் பேரவலங்கள் சர்வதேசத்துக்கு வெளிப்பட்டு வர - அரசின் 'பொட்டுக்கேடு' வெளிவர -

## ......ஷெல்கள் கலைக்கக் கலைக்க ஓடிவந்தோம்...

## குடும்பஸ்தரான அகதியின் கருத்து

ஆரம்பித்ததும், இலங்கை அரசுத் தலைமை அகதிகளுக்காக 'நீலிக்கண்ணீர்' வடிப்பது போன்று காட்ட முனைந்து நிற்கின்றது.

வன்னியில் தமது நிர்வாக இயந்திரத்தை நடத்திக் கொண்டிருக்கும் அரச அதிபர்களை கொழும்புக்கு அழைத்தது.

அவர்கள் கொழும்பு வரும் வழியில் வவுனியாவில் வன்னிப் படைத்தளபதியை அவர்களுடன் சந்திக்க வைத்தது அரசுத் தலைமை.

அந்தச் சந்திப்பில், ஓமந்தை ஊடாக பொருள்களை எடுத்துச் செல்வதில் உள்ள சிக்கல்கள் குறித்து புதுக்கதை கேட்பது போல அரச அதிபரிடம் படைத்தளபதி கேட்டுள்ளார்.

மக்களின் நிவாரணப் பணிகளுக்கு என்ன உதவிவேண்டும், அதைசெய்யக் காத்திருக்கிறோம் என்ற பீடிகையுடன் அரச அதிபர்களிடம் விசாரித்த தளபதி, ஓமந்தை ஊடாக கூடுதலாக உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல உதவுவதாக உறுதிமொழி வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு வைத்தியசாலை வளாகப் பகுதி மீது மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலில் தாம் காயமடைந்த விடயத்தை முல்லைத்தீவு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தளபதியிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

போர் நடக்கும் வேளையில் அரச அதிபர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரமுடியாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக கூறிவிட்டார் தளபதி.

தளபதியின் சந்திப்பை முடித்துக்கொண்டு கொழும்பு சென்ற அரச அதிபர்களை, ஜனாதிபதியின் விசேட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ சந்தித்து, வன்னி நிலைமை குறித்து ஆராய்ந்தார்.

கூடுதலான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதிமொழி வழங்கினார்.

அதற்கு மேலதிகமாக வடக்கு விசேட செயலணிக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும் அரச அதிபர்களைச் சந்தித்து வன்னி நிலைமை குறித்து ஆராய்ந்தார்.

ஜனாதிபதியுடன் கலந்துரையாடி வன்னி மக்களின் அவலங்களைத் துடைக்க நடவடிக்கை எடுப்பார் என அவர் உறுதிமொழி வழங்கியுள்ளார்.

வன்னியில் அகதிகளின் அவலங்கள் அதிகரிக்க அதிகரிக்க சர்வதேசத்தின் அழுத்தங்களும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையை சமாளிக்க அரசு மட்டத்திலும் சரி, படைத்தளபதிகளின் மட்டத்திலும் சரி வாக்குறுதிகள் வழங்கப்படலாம். அதன் மூலம் அந்த அகதிகளின் துயரை துடைக்க முடியாது.

பயங்கரவாதிகளிடம் இருந்து வன்னியை மீட்கப் போவதாக அறிவித்து, வன்னி மீது பெரும் படையெடுப்பை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்ற அரசுத்

**யாழவன்**

தலைமை, வன்னி மக்களின் மனதை வெல்லும் வரை வன்னியை தமது கட்டுப் பாட்டில் கொண்டுவரவே முடியாது என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள்.

மக்களைத் துன்பத்துக்குள் ஆழ்த்தி, இடம் பெயரவைத்து பேரவலத்துக்குள் சிக்க வைத்துவிட்டுவன்னியை மீட்பதால் பயன்கிட்டப் போவதில்லை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

மழை காலத்துடன் அகதிகளின் பிரச்சினையும் விஸ்பரூபம் எடுக்கப் போகின்றது. வன்னியும் அதிரப்போகின்றது. இதற்கு அரசு தாக்குப்பிடிக்குமா என்பதே இப்போது எழும் கேள்வியாகும்.



PAATUKU PAATU
Super Sunday
MANJAL MAGIMAI
கலைஞர்
இதோ!
உங்கள் வீட்டின் வரவேற்பறைகளில்
கலை விருந்தளித்துக் களிப்பூட்ட,
டயலொக் தொலைக்காட்சியினூடாக
தமிழின்பம் சுமந்து வருகின்றது
கலைஞர் தொலைக்காட்சி.
இப்பொழுது டயலொக் தொலைக்காட்சியினூடாக நாடெங்கிலும்
நீங்கள் பார்த்து மகிழலாம்
திரைப்படங்கள், நாடகங்கள், நடன மற்றும் இசை நிகழ்ச்சிகள், பல்சுவை நிகழ்வுகள் என
நாள் முழுவதும் பார்த்து மகிழ தரமான நிகழ்ச்சிகளுடன் உங்கள் டயலொக் தொலைக்காட்சியின்
சின்னத்திரையில் கலைஞர் தொலைக்காட்சி
● ரூ. 500/- மாதாந்த கட்டண பக்கேஜில் இருந்து.
● மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 0777 679 679
SATELLITE
Dialog tv
Don't miss out
Call 0777 679 679
24 HOURS
ISLANDWIDE
HOT
SATELLITE TECHNOLOGY

# போர்க்கோலம் பூண்டு வரும் மின்மாற்றிகள்

''பாவியர் போன இடமெல்லாம் பள்ளமும் திட்டியும் தான்'' என்ற பழமொழி யாழ்ப்பாணத்து மக்களுக்காகவே தோற்றம் பெற்றதோ என எண்ணத் தோன்றுகின்றது. அந்தளவிற்கு ஒன்றன்மேல் ஒன்றாய், ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வடிவங்களுடன் முளைக்கின்ற பிரச்சினைகளே, யாழ்.மக்களின் தினசரி, 'முழுவிசனமாய்' மாறிவிட்டன. அதுவும் ஏ-9 பாதை மீளவும் அடைபட்ட பின்னர் நிலைமை இன்னும் மோசமாகிவிட்டது. பயண அனுமதி, பொருள்களுக்கான தட்டுப்பாடு, வெளியுலகத் தொடர்பில் மட்டுப்பாடு, மருந்து வசதியீனங்கள் என நிரந்தரமாகவே சில பிரச்சினைகள் யாழ்.மக்களிடையே குடியிருக்க ஆரம்பித்துவிட்டன. இப்போது மக்களின் அன்றாட வாழ்வுக்கு ஆதாரமாக விளங்குகின்ற மின்சாரமும் இராணுவக் கேடயமாக மாற்றப்பட்டு, மக்களுக்கான நுகர்திறன் தாக்கத்தை உண்டு பண்ணத் தொடங்கிவிட்டது.

கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணம் மின்மாற்றிகளால் அமளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. குடாநாட்டின் சில பகுதிகளில் நாலைந்து மின்மாற்றிகளுக்கு 'விஷமிகளினால்' அல்லது 'இனந்தெரியாதோர்களினால்' துப்பாக்கி வேட்டுகள் மூலம், ரயர்களை எரித்ததன் மூலம் 'கொள்ளி' வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து எல்லா மின்மாற்றிகளும் போர்க்களத்திற்கு போகாத குறைதான்! வெகுவேகமாக படைத்தரப்பின் கைவண்ணத்தில் குடாநாட்டிலுள்ள எல்லா மின்மாற்றிகளும் பணங்குற்றிகள், பச்சைநிற மண்மூடைகள் சகிதம் பூரண போர்க்கோலம் பூண்டு நின்றன. அதன்பின்னர்தான் பழமிருக்கச் சுளை விழுங்குவது போன்ற நிகழ்வுகள் அரங்கேறத் தொடங்கின.

காலையில் துப்பாக்கி ஏந்திய படையினரின் தீவிர கண்காணிப்போடு, பலமான காவலரணை ஒத்த அமைப்பின் பாதுகாப்போடு காட்சியளித்த மின்மாற்றிகள், மாலைவேளைகளில் மாயமாய் மறைந்து போகத் தொடங்கின. படையினரின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, இவ்வாறான கைங்கரியத்தை செய்தவர்கள் யார்? இதுவரையும் மனிதர்களைக் கடத்தியவர்கள் இப்போது மின்மாற்றிகளையும் கடத்தத் தொடங்கிவிட்டார்கள். சிலவேளைகளில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்ற பின்னர் மின்சாரத்தை வழங்கப்போகின்றார்களா? இவை போன்ற ஆயிரத்தெட்டுக் கேள்விகள் மக்களிடையே விஸ்வரூபமெடுத்தன. எனினும், அகற்றப்பட்ட மின்மாற்றிகள் அனைத்தும் படைமுகாம்களுக்குள் - பாதுகாப்புக் கருதி - நிறுவப்படப்போகின்றன' என்ற செய்தி வந்தது. பின்னரே கொஞ்சமாவது ஆசுவாசப்பட மக்களால் முடிந்தது.

இலங்கைத்தீவின் எல்லாப் பாகங்களையும் போலவே யாழ்குடாநாட்டு மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் பலவும் மின்சாரத்தை நம்பியே இருக்கின்றன. விவசாயத்துக்கான நீர்ப்பாசனத்திலிருந்து மாணவர்களின் கற்றல் தேவைக்கான ஒளியூட்டல் வரை ஏராளமான தொழிற்பாடுகளுக்கு மின்சாரமே ஆதாரமாக விளங்குகின்றது. அலைபோல் தொடர்ச்சியாய் வருகின்ற சவால்களை யாழ்.மக்கள் ஓரளவுக்கேனும் எதிர்கொண்டு, வாழ்க்கையை ஓட்டிச்செல்வதற்கு மின்சாரமே கைகொடுத்து வந்துள்ளது. எனினும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக முக்கியமான நேரங்களில் மின்சாரம் கைவிடுகின்ற கதையும் இடம்பெறத் தவறுவதில்லை.

எரிபொருளைத் தேவையான அளவு சேமித்து வைக்கக்கூடிய வசதிகள் யாழ்ப்பாணத்தில் இல்லைஎன்றும், குடாநாட்டில் இயக்கப்படுகின்ற மின்பிறப்பாக்கிகள் மூலம் பெறப்படுகின்ற மின்சாரத்தின் அளவு யாழ்.மக்களின் தேவைகளை பூர்த்திசெய்வதற்கு போதுமானதல்ல என்றும், காலந்தோறும் விதவிதமான காரணங்களைச் சொல்லி முன்னிரவு நேரங்களில் - மக்களுக்கும், மாணவர்களுக்கும் மின்சாரம் கட்டாயமாகத் தேவைப்படுகின்ற நேரங்களில் - அடிக்கடி மின்வெட்டு ஏற்படுத்தப்பட்டது. பின்னர் பல்வேறு இழுபறிகள், கோரிக்கைகள் என்பவற்றினைத் தொடர்ந்து மிக அண்மையில் சீனாவிலிருந்து புதிதாக மின்பிறப்பாக்கிகள் நேரடியாகக் காங்கேசன்துறைக்கு தருவிக்கப்பட்டன. இந்த மின்பிறப்பாக்கிகளின் வருகையுடன் யாழ்ப்பாணத்தின் தேரோடும் தெருவெங்கும் இருளகன்று ஒரே ஒளிமயமாகப் போகின்றது என்ற அறிவிப்புகள் வெளிவரத் தொடங்கின. எனினும், இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் இன்றுவரை புதிதாகத் தருவிக்கப்பட்ட மின்பிறப்பாக்கிகள் இயக்கப்படவேயில்லை. புதிய மின்பிறப்பாக்கிகள் வந்தபின்னர் மின்வெட்டு நேரம் இன்னும் அதிகநேரம் நீடிக்கப்பட்டது என்பதுதான் வேதனையான, வேடிக்கையான விடயமாகும்.

பிரமன்

இந்நிலையில், இம்மாத முற்பகுதியில் சில இடங்களில் அடுத்தடுத்து மின்மாற்றிகள் செயலிழக்கச் செய்யப்பட்டன. துப்பாக்கி பிரயோகத்தின் மூலமும் ரயர்களைக் கொளுத்தி போடுவதன் மூலமும் 'தானுண்டு, தன் பாடுண்டு' என்றிருந்த மின்மாற்றிகளின் கதை முடிக்கப்பட்டது. ஆரம்பத்தில் விஷமிகள் அல்லது திருடர்களின் கைவரிசையே இதுவென்று மக்களால் நம்பப்பட்டது. ஏனெனில், குடாநாட்டில் அண்மைக்காலமாக 'சினிமாப்படங்களில் வருகின்ற வில்லன்'களையும் விஞ்சுகின்ற அளவுக்கு கொடூரமான கொள்ளைக்கும்பல்கள் சுதந்திரப் பறவைகளாய் சிறகு விரித்து திரிகின்றன. ஏழை, எளியவர், பணக்காரர் என்ற பாகுபாடு இன்றி, சமத்துவ நோக்கோடு எல்லோரின் சொத்துக்களையும் சூறையாடுவதோடு, தம்மால் கொண்டு செல்ல முடியாத பொருட்களை உடைத்தும், எரித்தும் நர்சமாக்கிச் சென்றன. எனவே, இவ்வாறான கொள்ளைக்கும்பல்கள் தமது திருட்டு நடவடிக்கைகளை இன்னும் இலகுபடுத்திக் கொள்வதற்காகவே மின்பிறப்பாக்கிகளைச் சேதப்படுத்தி வருகின்றன என்று காற்றுவழியே கதைகள் கசிந்தன.

எனினும், மேலும் ஒருசில மின்மாற்றிகள் தொடர்ச்சியாகத் தகர்க்கப்பட, இராணுவ நோக்கங்கருதி விடுதலைப் புலிகளே இவ்வாறான தாக்குதல்களை மேற் கொள்கிறார்களோ என்ற சந்தேகம் மெல்ல மெல்ல முளைவிட்டு, வேர்பரப்பி, விருட்சமாகத் தொடங்கியது. ஏனெனில்; வன்னி மீதான இராணுவ நடவடிக்கைக்கு நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து மேலதிக படையினரைத் தருவிக்கும் நடவடிக்கைகள் நிறைவேறாத வண்ணம் விடுதலைப் புலிகள் தமது



தாக்குதல் இலக்குகளை பரவலாக்கி வருகின்றனர். அண்மைக்காலமாக அம்பாறைப் பகுதியில் வெற்றிகரமான முறையில் புலிகள் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்களால், கிழக்கிலிருந்து ஒரு சிப்பாயைத்தானும் வன்னிக்கு நகர்த்த முடியாத நிலை படையினருக்கு ஏற்பட்டுள்ளது. அப்படி நகர்த்தினால் காய்ந்த மாடு கம்பில விழுந்தது போல கிழக்கு மாகாணத்தை தளபதி ராம் தலைமையிலான புலிகள் படையணி மேய்ந்து, கபளீகரம் செய்துவிடுமென்று அரசுத்தரப்பு அஞ்சுகின்றது.

'கழுதை கெட்டால் குட்டிச்சுவர்' என்ற பழமொழிச் சூத்திரத்தின்படி கிழக்கிலிருந்து படைகளை நகர்த்த முடியாவிட்டால் யாழ்ப்பாணத்திலுள்ள படையினரையே வன்னிக்கு அனுப்ப அரசுப்பீடம் ஆலோசித்து வருகின்றது. ஏனெனில், வட - கிழக்கில் ஏற்கனவே, பணிபுரிந்த அனுபவமுள்ளவர்களால் தான் வன்னிக் களமுனைக்கேற்றவாறு போர்வியூகங்களில் செயற்படமுடியும். ஆனாலும், யாழ்ப்பாணத்திலிருந்தும் படையினரை நகர்த்தவிடாமல் செய்வதற்கே விடுதலைப் புலிகள் மின்மாற்றிகளை இலக்குவைத்துத் தாக்குதல் நடத்துகிறார்களோ என்ற எண்ணம் எல்லோரிடத்தும் ஏற்படத் தொடங்கியுள்ளது.

கிளாலி - முகமாலை - நாகர்கோவில் முன்னரங்க நிலைகளுக்கான சகல விநியோகங்களும் பலாலி, யாழ்ப்பாணப் பகுதிகளிலிருந்தே நடைபெறுகின்றன. இவ்விநியோகம் பகல்வேளைகளில் இடம்பெறும்போது - நீண்டுகொண்டு செல்கின்ற மின்வெட்டைப்போல - அடிக்கடி வீதிகளில் பொதுமக்களின் நடமாட்டம் தடைசெய்யப்பட்டு இராணுவ வாகனத் தொடரணிகள் பயணத்தை மேற்கொள்ளும். எனினும் இரகசியமானதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான பரிமாற்றங்கள் இரவுவேளைகளிலேயே இடம்பெறுகின்றன. இவை சீராக நடைபெறுவதற்கு மின்னொளி வீதியெங்கும் படையினருக்கு அவசியமாகின்றது. இல்லாவிட்டால் இருளின் துணையோடு விநியோகத் தொடரணிகள் புலிகளால் தாக்குதலுக்குள்ளாகும் சாத்தியங்களுமுண்டு. அத்தோடு, இராணுவ முகாம்களைச் சுற்றிவரவும் உள்ள உயர்மின்வலுக்கொண்ட மின்விளக்குகளின் துணையோடு புலிகளின் ஊடுருவல்களை அவதானிக்கும் செயற்பாடுகளும் படையினர் மத்தியிலுண்டு. எனவே, மின்மாற்றிகள் தகர்க்கப்படுவதால் இராணுவத்தினர் கடுமையான பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இவற்றைத் தவிர்ப்பதற்காக எல்லா மின்மாற்றிகளுக்கும் மண்மூடை, பனங்குற்றிகள் கொண்ட பாதுகாப்புக் கவசம் அணிவிக்கப்பட்டு ஒவ்வொரு மின்மாற்றிக்கும் பத்துப்படையினர் வீதம் காவலுக்கு வைக்கப்பட்டு, ஒரு முக்கிய பிரமுகர் பேன்று - வி.ஐ.பி. போல மின்மாற்றிகள் கௌரவ உயர்வுநிலையை அடைந்துள்ளன. இது புலிகள் எதிர்பார்த்த பலனைத் தந்ததெனக் கூறலாம். ஏனெனில், ஏறக்குறைய குடாநாட்டில் நிற்கின்ற படையினரில் பெரும்பாலானோர் புலிகளைத் தேடுவதை விடுத்து, மின்மாற்றிகளுக்கு காவலர்களாக மாறவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. மனித உயிர்களே மதிக்கப்படாத குடாநாட்டில் மின்மாற்றிகள் மவுசுகூடிய பொருட்களாகிவிட்டன.

பெருமளவு படையினர் மின்மாற்றிகளுக்கு போர்க்கோலம் பூணுவதில் வீணாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கொஞ்சம் காலந்தாழ்த்தி உணர்ந்துகொண்ட அரசுத்தரப்பு இப்போது புதிய திட்டத்தை அமுல்படுத்தத் தொடங்கிவிட்டது. அதன் விளைவே மாயமாய் மறைந்த மின்மாற்றிகள். இராணுவ முகாம்களுக்குத் தொலைவிலுள்ள மின்மாற்றிகள் அகற்றப்பட்டு, அவை அருகிலுள்ள இராணுவ முகாம்களுக்குள்ளே நிறுவப்படப்போகின்றன. ஆயினும், இராணுவ விநியோக மார்க்க வீதிகளின் இருமருங்கிலுமுள்ள - மின்மாற்றிகள் அகற்றப்படவேயில்லை. படையினருக்கான 'வழங்கல்' வீதிகள் வெளிச்சமாயிருக்க, மக்கள் வீடுகள் இன்னமும் இருளில் மூழ்கியபடியே இருக்கின்றன.

புதிய மின்பிறப்பாக்கிகளின் வருகையுடன் இதுவரையிருந்த மின்வெட்டு நீங்குமென்று மகிழ்ந்திருந்த மக்களுக்கு, மின்மாற்றிகளின் போர்க்கோலமும் இடம்பெயர்வும் கொஞ்சம் மிஞ்சியிருந்த வெளிச்சத்தையும் பிடுங்கிக்கொண்டுள்ளன. பட்டுவேட்டிக்கான கனவுடன் இருந்த மக்களின் கோவணங்களும் களவாடப் படுவதே யாழ்.மக்களின் வரலாற்று நீட்சி என்பது மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ✱





# அதிகரிக்கும் முறுகல் நிலை



புதுடில்லி - கொழும்பு இடையிலான இராஜதந்திர உறவு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு முறுகல் நிலையை அடைந்திருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

வெளியில் - அம்பலத்தில் - இருதரப்பினரும் ஆளுக்கு ஆள் 'முதுகு சொறிந்து' கொண்டாலும் உள்ளே அதிருப்தியும் அவநம்பிக்கையும், சீற்றமும் கனன்று கொண்டிருக்கின்றன எனத் தெரிகின்றது.

கொழும்பின் விட்டேத்தியான போக்குக் குறித்துத் தன்னால் எதுவும் செய்யஇயலாது என்ற கையாலாகாத்தனத்தை எண்ணி மனதுக்குள் பொருமிக்கொண்டிருக் கின்றது புதுடில்லி.

'சார்க்' மாநாட்டுக்காக வந்திருந்த இந்தியத் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே ஆர் நாராயணனை, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலிருந்து டாக்ஸியில் அலைய விட்ட விவகாரம், தவறுதலாக - ஒழுங்கு ஏற்பாட்டில் தெரியாமல் இடம்பெற்ற - ஒரு விடயமாகவே முன்னர் கூறப்பட்டு வந்தாலும், அதன் பின்னர் கட்டவிழ்ந்த நிகழ்வுகளும், நடவடிக்கைகளும் அது வேண்டுமென்றே அவரை அகௌரவப் படுத்திக், கீழ்மைப்படுத்தும் நோக்கோடு, திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட விடயமாக இருக்கலாம் என்ற கருத்தை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக வட்டாரங்களுக்கும் புதுடில்லிக்கும் ஏற்படுத்தியிருக்கின்றன எனக் கூறப்படுகின்றது.

அந்தச் சம்பவத்துக்காகப் பின்னர் இலங்கைப் பொலிஸ் தரப்பின் மூத்த அதிகாரி ஒருவர் கே ஆர் நாராயணனை நேரில் சந்தித்து மன்னிப்புக்கோரினார் எனினும், அதுமட்டுமே அந்த விடயத்தை அப்படியே மறந்து - புறமொதுக்கிவிட - இந்தியாவுக்கு போதுமானதாக அமைந்துவிடவில்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அத்தகைய அவலநிலை இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகருக்கு ஏற்பட்டமை தொடர்பாக, இலங்கை எடுக்கப்போகும் மேல் - தொடர் - நடவடிக்கைகள் என்னவென்பதை கொழும்பில் இந்தியத் தூதரகம் உன்னிப்பாகப் பார்த்துக் காத்திருக்கின்றது என்று தெரிகிறது.

நாராயணனின் வாகன அணி அன்றைய தினம் உரிய சமயத்தில் அவரை ஏற்றிச் செல்வதற்கு மாநாட்டு மண்டப முன்புறத்துக்கு வரமுடியாமல் போன தவறு ஏற்பட்டமைக்குப் பொறுப்பான இலங்கைக் காவல்துறை அதிகாரி குறித்து கொழும்பு என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது என்பதை அவதானிப்பதில் தூதரக வட்டாரங்கள் மிக 'ஸீரியஸாக' உள்ளன என்றும் கூறப்படுகின்றது.

தமது நாட்டின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகருக்கு இப்படி நேரப் போகின்றது என்று பத்து, பதினைந்து நிமிடங்களுக்கு முன்னரே இந்தியத் தூதரக அதிகாரிகள் கண்டுபிடித்துத் தெரியப்படுத்தியும் கூட, வாகன ஒழுங்கைச் சரிவர செய்யாமல் அசட்டையாகவும், 'திமிர்த்தனமாகவும்' நடந்துகொண்டார் எனக் கூறப்படும் இலங்கையின் மூத்த பொலிஸ் அதிகாரி சம்பந்தமாக கொழும்பு அரசு இதுவரை எந்த நடவடிக்கையுமே எடுக்கவேயில்லை என்ற உண்மை இந்தியத் தூதரக அதிகாரிகளைப் பெரும் எரிச்சலுக்குள்ளும் சீற்றத்துக்குள்ளும், விசனத்துக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது.

அதைவிட வேடிக்கை என்னவென்றால், சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரி மூலமே கொழும்பு அரசு பின்னர் எடுத்த காய்நகர்த்தல் நடவடிக்கையாகும். அதுவே தூதரக வட்டாரங்களை மேலும் எரிச்சலுக்கு உள்ளாக்கியிருக்கிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரி, இந்தியத் தூதரக வட்டாரங்களுடன் அண்மையில் தொடர்புகொண்டு தமக்கு ஒரு சான்றிதழ் கடிதம் பெறுவதற்கு முயன்றிருக்கின்றார்.

அடுத்த சில வாரங்களில் தமக்கு ஒரு பதவி உயர்வு கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாகவும்,'சார்க்' மாநாட்டு சமயத்தில் தமது பணியை மெச்சி ஒரு விதந்துரைப்புக் கடிதம் (Commendation Letter) இந்தியத் தூதர் மட்ட அதிகாரி தருவாரானால் அது தமக்குப் பேருதவியாக இருக்கும் என்றும் அந்தக் காவல்துறை அதிகாரி இந்தியத் தூதரக உயர்மட்டத்துக்கு விநயமாகத் தெரியப்படுத்தியிருக்கின்றார்.

ஆனால், உஷாரடைந்த இந்தியத் தூதரகம் எடுத்த எடுப்பிலேயே அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டது. அத்தோடு, அத்தகைய கோரிக்கை தொடர்பாக இந்தியத் தூதரகத்துக்கு இரண்டு விடயங்களில் எரிச்சலும்கூட.

ஒன்று - நாராயணனை டாக்ஸியில் அலையவிட்டதற்குப் பொறுப்பான காவல்துறை அதிகாரிக்கு, கொழும்பு அரசு தண்டனையோ, கண்டிப்போ வழங்காமல் இருப்பது மட்டுமல்லாமல், அது நிகழ்ந்த கையோடே அவருக்குப் பதவியுயர்வு கொடுப்பது குறித்தும் சிந்திக்கும் சூழ்நிலை காணப்படுவது.

அடுத்தது - அது தொடர்பாக, அந்த பதவியுயர்வு விடயத்தைக் காட்டியே இந்தியத் தூதரகத்திடமிருந்து சம்பந்தப்பட்ட அதிகாரியின் 'சார்க்' சமயப் பணியை மெச்சி, அவரது பணியை விதந்துரைத்து ஒரு சான்றிதழை 'நைஸாகப்' பெற்றுக்கொண்டால், எதிர்காலத்தில் இவ்விடயத்தில் எழக்கூடிய எந்தக் குற்றச்சாட்டையும் அந்தச் சான்றிதழ் கடிதத்தை வைத்தே 'மறுத்தான்' அடித்து விடலாம் என்ற எண்ணத்தில் கொழும்பு விரித்த வலையே அந்தச் சான்றிதழ் கடிதம் பெறும் எத்தனம் எனத் தூதரக வட்டாரங்கள் கருதுகின்றன.

'தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனுக்கு வாகன வசதி செய்துகொடுப்பதில் ஏற்பட்ட தவறுக்குக் கொழும்பை ஏன் சும்மா குற்றம் சாட்டுகின்றீர்கள்? அந்த விடயத்துக்குப் பொறுப்பான காவல்துறை அதிகாரியின் சேவையை - பணியை - பாராட்டி இந்தியத் தூதரக உயர்மட்டமே சான்றிதழ் அளித்து மெச்சியிருக்கும்போது எங்களை ஏன் குறைசொல்கின்றீர்கள்?' - என்று கொழும்பு நிர்வாகம் பின்னால் தட்டைப் புரட்டிப் போடலாம் என்ற எதிர்பார்ப்போடுதான் தூதரகத்திடமிருந்து அத்தகைய சான்றிதழைப் பெறும் முயற்சிக்கு வலை விரிக்கப்பட்டதாக தூதரகம் கருதுகின்றது.

இந்தியத் தூதரக அதிகாரிகள் அவ்வளவு என்ன விடயம் தெரியாதவர்களா அத்தகைய சான்றிதழை வழங்குவதற்கு? அவர்கள் அந்தக் கோரிக்கையை எடுத்த எடுப்பிலேயே புறக்கணித்து நிராகரித்து விட்டார்கள்.

''இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்குக் கொழும்பில் அளித்த அணிவகுப்பு மரியாதையின்போது அவரைத் துப்பாக்கியால் தாக்கிக் கொல்ல முயன்ற சிங்களச் சிப்பாய்க்கு நீதிமன்றம் தண்டனை கொடுத்தும், கொழும்பு அரசுத் தலைமை அவரை மன்னித்து விடுவித்து, 'தேசிய ஹீரோ' ஆக்கியது. அதுபோலத்தான் நாராயணனை டாக்ஸியில் அலைய விடக் காரணமாக இருந்த பொலிஸ் அதிகாரியையும் தண்டிக்காமல்

**வி.சிவராம்**

கண்டிக்காமல் - அதற்குப் பதிலாக பதவி உயர்வு அளித்து கொழும்பு மெச்சுகின்றதோ என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்பட்டுள்ளது'' - என்கிறார் இந்தியத் தூதரகத்தில் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர்.

கொழும்பில் நாராயணன் நடத்தப்பட்ட முறைமை தொடர்பான அதிர்ச்சி அலைகள் இன்னும் முடிந்தபாடில்லை. அவை தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றன.

அவை பற்றிய விடயங்களை கொழும்பில் இந்தியத் தூதரகமும் புதுடில்லியில் இலங்கை விவகாரங்களைக் கையாளும் பிரிவும் உற்று அவதானித்துக் கொண்டிருப்பது உண்மை.

* * *

அண்மையில் இந்திய நாடாளுமன்றில் மன்மோகன் சிங் அரசு கொண்டு வந்த நம்பிக்கைப் பிரேரணையை ஒட்டி கொழும்பு அரசு நடந்துகொண்ட விதம் 'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' - என்ற மாதிரி ஆகியிருப்பதாகப் புதுடில்லி வட்டாரங்கள் கூறுகின்றன.

அது, இந்தியாவின் உள்வீட்டு விடயம் என்று கருதி சும்மா இருப்பதை விடுத்து, அந்த நம்பிக்கைப் பிரேரணை வாக்கெடுப்பில் மன்மோகன் அரசு வெற்றி பெற்றதும் - இன்றைய நிலையில் புதுடில்லி அரசுத் தலைமைக்கு 'ஐஸ்'வைப்பதாக நினைத்துக்கொண்டு - அந்த வெற்றியை ஆரவாரமாக வரவேற்பது போல நடந்துகொண்டது கொழும்பு.

அதுவும் கொழும்பில் அரசை நிறுவியிருக்கும் பிரதானகட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரான மைத்திரிபால சிறிசேனாவே, கொழும்பு அரசின் சார்பில் மன்மோகன் சிங் அரசின் வெற்றியை வரவேற்று, புளகாங்கிதம் தெரிவித்துத் தேவையில்லாமல் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

புலிகளுக்கு எதிரான கொழும்பு அரசின் நடவடிக்கைக்கு வலுச்சேர்க்கும் ஓர் அம்சமாக மன்மோகன் சிங் அரசின் வெற்றியை அவர் அர்த்தப்படுத்தியிருக்கின்றார்.

மன்மோகன் அரசுக்கு தலையில் 'ஐஸ்' வைப்பதாகக் கருதியும் -

மன்மோகன் அரசு கவிழ்ந்து, இந்தியாவில் பொதுத் தேர்தல் வருமானால், அது யுத்த தீவிரப் போக்கில் செயற்படும் மஹிந்த அரசுக்கு எதிரான தரப்புகளைப் புதுடில்லியில் ஆட்சிப் பீடமேற்ற வழி வகுக்கும் எனக் கருதுகின்ற புலி ஆதரவுச் சக்திகளுக்கு நல்ல பின்னடைவு என்று கருதி, அந்தப் புளகத்தின் விளைவாகவும் -

மைத்திரிபால சிறிசேன அந்த வெற்றியை வரவேற்றுக் கொண்டாடும் அறிவிப்பை விடுத்திருக்கின்றார்.

ஆனால், அந்த அறிவிப்பு, மன்மோகன் சிங் அரசை அந்த நம்பிக்கைப் பிரேரணையில் தோற்கடிக்க வைக்க கங்கணம் கட்டிக் களத்தில் இறங்கிச் செயற்பட்ட பாரதீய ஜனதாக் கட்சியின் தலைமையை கடும் அதிருப்திக்குள் ஆழ்த்தி விட்டது என்று தெரிகிறது.

இந்நிலையில் எப்படியும் இந்தியாவில் விரைவில் பொதுத் தேர்தல் நடக்கப் போகின்றது. அங்கு காங்கிரஸுக்கு மாற்றாக புதிய அரசு அமைக்கக்கூடிய பிரதான சக்தி பாரதீய ஜனதாவுக்கே உண்டு என்றும் கருதப்படுகிறது.

புதுடில்லியில் அடுத்த அரசு பாரதீய ஜனதா தலைமையிலேயே அமையும் என்று இப்போதே அடித்துக் கூறுகின்றனர் இந்திய அரசியல் அவதானிகள் பலர்.

அப்படி இருக்கையில் -

புதுடில்லியில் ஓர் அரசு நீடிப்பது தொடர்பாக அங்குள்ள பிரதான கட்சிகள், தரப்புகளிடையே இழுபறி, மோதல் நீடிக்கும் சமயத்தில் -

அந்த விவகாரத்தில் தலையிட்டு, அதில் ஒரு பக்கத்திற்கு ஆதரவாகத் தான் நிற்பதாகக் கொழும்பு காட்டிக்கொண்டு, தன்னைத் தேவையில்லாத சிக்கலில் கொண்டு போய் மாட்டி விட்டுள்ளது என்கின்றனர் புதுடில்லி அவதானிகள்.

நம்பிக்கைப் பிரேரணை விவகாரத்தில் மன்மோகன் சிங் அரசுக்கு ஆதரவாகக் கொழும்பு நின்றது என்பதை உணர்ந்து பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் தலைமையும் கறுவிக்கொண்டிருக்கின்றன என்று ஒரு தகவல்.

'கொஞ்சம் பொறுங்கள் நாங்கள் அடுத்த அரசை விரைவில் ஸ்தாபித்து விட்டு கொழும்புக்கு நல்ல பதிலடி தருகிறோம்' - என்று முறுக்கிக்கொண்டு நிற்கிறார்களாம் பாரதீய ஜனதாக் கட்சியை, இலங்கை விவகாரத்தைக் கையாள்கின்ற சில புதுடில்லி வட்டாரங்கள்.

வீண் வம்பை விலைக்கு வாங்கிக் கட்டியிருக்கின்றார் ஆளும்தரப்பின் ஸ்ரீ.ல.சு.கட்சியின் பொதுச்செயலாளர்.

*

சுடர் ஒளி
ஒகஸ்ட் 24 - ஒகஸ்ட் 30, 2008
85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14 டெலிபோன் 0114734401—6
பாக்ஸ் 0114734404
E-mail: editorial@sudaroli.com

## தேர்தலும் யுத்தமாயையும்

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இடம் பெற்ற வன்முறைகளை விடவும் அதிகமான வன்முறைகள் தற்பொழுது வடமத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைத் தேர்தல்களில் இடம்பெறலாம் என்று தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் 'கபே' அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ள நிலையில் -

தேர்தல் நடைபெறும் மாகாணங்கள் இரண்டும் ஆயுதம் ஏந்திப் போராடும் களங்களாக மாறியுள்ளன. அங்குள்ள மக்களுக்கு சுதந்திரமாக வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் வன்முறை மற்றும் ஊடக அடக்குமுறைக்கு எதிரான சர்வமதப் பேரவை கண்டன அறிக்கை விடுத்துள்ள நிலையில் - வடமத்திய, சப்ரக முவ மாகாண சபைத் தேர்தல்கள் சனியன்று (23) நடைபெறுகின்றன.

31 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்படும் வடமத்திய மாகாணத் தேர்தலும் 42 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்படும் சப்ரகமுவ மாகாணத் தேர்தலும் நாட்டின் தேர்தல் வரலாற்றில் வன்முறைகள் நிறைந்த தேர்தல்களாக இருக்கப் போகின்றன என்று எதிர்வு கூறப்படுகிறது.

யுத்த மாயைக்குள் மூழ்கியிருக்கும் சிங்கள மக்களின் வாக்குப் பலத்தை நம்பியே ராஜபக்ஷ அரசு, இந்த மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைவதற்கு ஒருவருடம் இருக்கு முன்னரே அவற்றைக் கலைத்து தேர்தலை நடத்துகிறது.

தற்பொழுது உள்ள ஒன்பது மாகாணங்களிலும் கூடுதலான சிங்கள வாக்காளர்களைக் கொண்டவை இந்த இரு மாகாணங்களும். முற்றுமுழுதாக சிங்களவாக்குகளை நம்பியே ராஜபக்ஷ தலைமையிலான இந்த அரசு இந்த தேர்தல் களத்தில் இறங்கியது என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தத் தேர்தலில் அரச தரப்புத் தோற்றால் அது அரசுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுக்கும். தற்பொழுது அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பெயரிடப்படாத யுத்த நடவடிக்கையை சிங்கள மக்களுக்குக் காட்டியே அரசாங்கம் தனது பிரசாரங்களை இத்தேர்தல்களில் முன்னெடுத்துச் சென்றது.

நிறைவேற்று ஜனாதிபதியாக இருக்கும் ஒருவர் எதிர்வரும் ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை நிர்வாகங்கள் தனக்குச் சார்பாக இருக்கவேண்டும் என்று கருதுவதில் தப்பில்லை. ஆனால், அதை அடைவதற்கு கையாளப்படும் முறைகள் சட்ட வரம்புகளுக்கு அப்பாற்பட்டவையாகவே காணப்படுகின்றன. இந்த இரு மாகாணங்களிலும் தேர்தல் வன்முறைகள் குறித்து பதிவான முறைப்பாடுகளே இவற்றுக்குச் சான்று.

நீதிமன்ற உத்தரவு கிடைத்தும் அமைச்சர் மேர்வின் சில்வா தாமாகவே சென்று சரணடையும் வரை அவரைக் கைதுசெய்ய முடியவில்லை. இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கே.ஆர்.நாராயணனின் வாகன ஏற்பாட்டுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியைத் தண்டிக்க முடியவில்லை. இப்படியானநிலையில் இந்த இரு மாகாணங்களிலும் பதிவாகி உள்ள தேர்தல் வன்முறை முறைப்பாடுகளை பொலிஸார் விசாரிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

யுத்தத்தை போர்வெறித் தீவிரத்துடன் முன்னெடுக்கும் அரசு ஜனநாயகத் தேர்தல்களையும் அதே தீவிரத்துடன் வன்முறை, அராஜகங்களுடன் அரங்கேற்றி வருவதை கடந்த சில தினங்களாக அந்த இரு மாகாணங்களிலும் இடம்பெறும சமபவங்கள் கோடி காட்டுகின்றன.

அரசாங்கம் என்றுமில்லாத பொருளாதார நெருக்கடியில் இருக்கும்போது தனது அரசியல் லாபம் கருதி இத்தேர்தல்களை நடத்துகிறது.

யுத்த மாயையில் சிக்கி இருக்கும் சிங்கள மக்களின் வாக்குகளை இலகுவாகப் பெறலாம் என்று அரசாங்கம் கருதுகிறது. தமது படை நடவடிக்கை காரணமாக புலிகள் பலவீனம் அடைந்துவிட்டனர் என்று சிங்கள மக்களை நம்பவைப்பதில் வெற்றிபெறலாம் என்று அரசாங்கம் கருதுகிறது.

ஆனால், இந்த மாயை எவ்வளவு காலம் நீடிக்கப்போகிறது? தற்போதைய களமுனையில் புலிகள் வலிந்து தாக்கமுற்படும்போது இந்த மாயை களைந்துவிட்டால் சிங்கள மக்களின் வாக்குகளை - ஆதரவைப் பெறுவதற்கு இந்த அரசுக்கு ஒன்றுமே இல்லாமல் போய்விடும். ✱

# சந்தேகங்களைக் கிளப்பும் புலிகளின் அதீத மௌனம்!

விடுதலைப் புலிகள் ஏதோ பலமிழந்து போய்விட்டவர்கள் போலவும், இதோ முற்றாக அழித்து ஒழிக்கப்பட்டு விடுவார்கள் என்பது போலவும் தென்னிலங்கை மக்கள் மத்தியில் பிரசாரம் நடத்தி வரும் கொழும்பு அரசியல் தலைமை, ஒருநாள் தனது பிரசாரத்துக்குத் தானே இரையாகப் போகின்றது என எண்ணுகின்றார்கள் தென்னிலங்கை இராணுவ ஆய்வாளர்கள்.

தென்னிலங்கை ஊடகங்களுக்கு - குறிப்பாக சிங்கள, ஆங்கில ஊடகங்களுக்கு - எதிராகக் கொழும்பில் கட்டவிழ்ந்திருக்கும் எழுதப்படாத - பிரகடனப்படுத்தப்படாத - சட்டமாக்கப்படாத 'கடும் தணிக்கை விதிகள்' காரணமாக, பல இராணுவ ஆய்வாளர்களின் பேனாக்களின் மூடிகள் மூடிக்கொண்டுள்ளன. எஞ்சி எழுதுவோரும் கூட, கத்தியில் நடக்கும் தமது பணியை, சிக்கலின்றி ஒப்பேற்றுவதற்காகப் பட்டும் படாமலும் நடந்து கொள்கின்றார்கள்.

ஆனால், தனிப்பட்ட முறையில் உரையாடும் போது, இந்த ஒரு தலைப்பட்சமான இராணுவ நடவடிக்கைப் பிரசாரத்தின் விளைவு குறித்து அவர்கள் அச்சமும், அவநம்பிக்கையும், அதிருப்தியும், விசனமும் வெளியிடத் தவறுவதில்லை.

அவர்களில் ஒருவர் தெரிவித்த கருத்துக்களைத் தான் நான் இங்கு முன்வைக்கிறேன்.

புலிகளின் ஆளணி, படைவலு ஆகியவை குறித்து அரசு செய்யும் பிரசாரத்தின் உண்மைத் தன்மை எத்தகையது என்பது தெற்கில் சிறுபிள்ளைகளுக்கும் கூடத் தெரியும். ஆகவே, அந்த எண்ணிக்கை குறித்து ஒரு சர்ச்சையைக் கிளப்ப நான் விரும்பவில்லை. பல்லாயிரம் ஆளணியினரை - அதுவும் பெரும் எண்ணிக்கையான தற்கொலைப் படையினரை - புலிகள் இன்று கொண்டுள்ளனர் என்பது திண்ணம். அதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

அத்தகைய புலிகளின் அணியை கிளிநொச்சிக்கு [illegible] முடக்கி, கூண்டோடு அழிப்பதற்கான காலம் [illegible] நங்கிவிட்டது என்றும் -

கி[illegible]நாச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் முற்று[illegible] விடுவிக்கப்படுவதற்கான கால எல்லை இதோ நெருங்கிவிட்டது என்றும் -

இராணுவ ஊதுகுழல்கள் நடத்தும் பிரசாரம் உண்மையானால், புலிகள் இன்று விரக்தியின் விளிம்பில் - பேரச்சத்தில் - இருக்கவேண்டும்.

இவ்வாறு ஆளணி வசதிகளை வைத்திருக்கும் புலிகள் அமைப்பு, தனது கட்டுப்பாட்டில் தாயகப் பிரதேசம் ஒன்றை வலுவாக வைத்திருக்கும் தனது தகைமையை தான் இழக்கப்போகும் அவலம் இன்று உருவாகிவிட்டது என்று கருதுமானால் - உணருமானால் - அது எத்தகைய பிரதிபலிப்பைக் காட்டும்? அவற்றில் எதையும் புலிகள் வெளிப்படுத்தாமல் மௌனம் காப்பது ஒன்றே புலிகள் தமது வலிமை மீதும், எதிர்காலத்தில் தாம் கட்டவிழ்க்கப்போகும் தமது இராணுவத் தந்திரோபாய நடவடிக்கைகள் மீதும் கொண்டுள்ள அதீத நம்பிக்கையை வெளிப்படுத்தப் போதுமானது.

புலிகளின் வன்னித் தாயகத்தில் பெரும் பகுதியைத் தாங்கள் தொடர்ந்து கைப்பற்றி வருகின்றார்கள் - பு[illegible] அப்பிரதேசங்களை விட்டு ஓடி ஒளிந்து வருகின்றார்கள் - என்றெல்லாம் இராணுவம் பிரசாரம் செய்கையில் -

தென்னிலங்கையில், தன்னும் ஒருசிறு துரும்பை அசைக்காமல் புலிகள் அதீதமௌனம் காக்கிறார்கள்.

உண்மையில் இராணுவம் கூறுவது போல புலிகள் விரக்தியின் விளிம்பில் நிற்கிறார்கள் என்றால் -

வடக்கு இராணுவ நடவடிக்கைகளுக்கு பழிதீர்க்க ஆக்குறைந்தது தென்னிலங்கையில் ஏதேனும் ஒருதாக்குதலுக்காவது-குறைந்த பட்சம் 'சிவிலியன்' இலக்குகளையாவது-புலிகள் குறிவைத்திருக்கலாம்.

வன்னியில் இராணுவ நடவடிக்கைகளினால் லட்சத்துக்கும் அதிகமானோர் இடம்பெயரும் மனிதப் பேரவலம் நிகழும்போது கூட, அதற்குப் பழிதீர்க்கும் எந்த எத்தனத்திலும் தெற்கில் புலிகள் அண்மைக்காலத்தில் ஈடுபடவில்லை.

புலிகளின் தென்னிலங்கை உற[illegible]குநிலைக்கு, தெற்கில் பாதுகாப்புக் கெடுபிடிகளே காரணம் என்ற வாதம் ஏற்கக் தக்கதேயல்ல என்பது விடயம் அறிந்தவர்களுக்கு நன்கு புரியும்.

அதேசமயம் கடலிலும் புலிகளின் தாக்குதல் எத்தனங்கள் எதுவும் அண்மைக்காலத்தில் இடம்பெறவில்லை. பெரும கடல் சமருக்கான முயற்சி எதுவும் எடுக்கப்படவேயில்லை என்று காட்டுவது போன்ற ஒரு வியூகமே புலிகளால் அண்மைக் காலத்தில் புலப்படுத்[illegible]பட்டு வருகின்றது.

அதேசமயம், இ[illegible]ணமடுவில் உள்ளதற்கு மேலதிகமாக மற்றொரு விமான ஓடுபாதை தளத்தை, கனரக விமானங்கள் இறங்கக்கூடியதாகப் புலிகள் விஸ்தரித்து வருகின்றார்கள் எனத் தென்னிலங்கை ஊடகம் ஒன்று அண்மையில் வெளியிட்ட செய்திக்கு அப்பால், புலிகளின் விமானப்படை உறங்குநிலையில் இருப்பது போன்ற போக்கே வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதுமட்டுமல்லாமல், மன்னார் மாவட்டத்தைத் தாண்டி கிளிநொச்சி மாவட்டத்தின் முன்னரங்க நகரங்களைக் கைப்பற்றிவரும் அரசபடைகளை ஆங்காங்கே எதிர்த்து தற்காப்பு யுத்தங்களில் ஈடுபடுகின்றமை போல மோதிவிட்டுத் தந்திரோபாயமாகப் புலிகள் பின்வாங்குகின்றார்களே தவிர, அந்த இடங்களில் வலிந்த பெரும் எடுப்புத் தாக்குதலை நடத்தி, முன்னேற முயலும் படைகளை



பெரும் தூரத்துக்குப் பின்னே தள்ளிக்கொண்டு போய்விடும் பாரிய படையெடுப்புக்களில் புலிகள் முனையவேயில்லை.

இவ்வளவும் -

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்குள் புலிகளை மடக்கி, அவர்களின் கழுத்தை இறுக்கி,

**அதிரடி ரங்கு**

நசுக்கத் தயாராகிவிட்டோம் எனப் படைத்தரப்பு மீண்டும் மீண்டும் அறிவித்து உறுதிப்படுத்தி, வரும் சூழ்நிலையிலும் தொடரும் நிலைமையாகும்.

யாழ்மாவட்டத்தின் தென்முனையில் கிளாலி, முகமாலை நாகர்கோயில் எல்லையிலும், வன்னியின் தெற்கில் ஓமந்தை மற்றும் அதற்கு கிழக்கே மணலாறில் பரந்துகிடக்கும் எல்லைப் புறங்களிலும் இராணுவ முன்னேற்ற முயற்சிகளை முடக்கித் தடுப்பதில் தொடர்ந்து உறுதியாக நிற்கும் புலிகள், மேற்கு எல்லையில் மன்னாரைத் தாண்டி கிளிநொச்சி மாவட்டத்திற்குள் முன்னேற முயலும் படையினர் விடயத்தில் மட்டும் சற்றுவிட்டுப் பிடித்து வருகின்றனர். அங்கு தமக்கு - தமது ஆளணி மற்றும் படைவலிமைக்கு - பேரிழப்பு ஏற்படாதவகையில் ஒரு தற்காப்புத் தாக்குதல்களை - யுத்தத்தை நடத்தியவாறு, முன்னேற முயலுகின்ற அரசபடைகளுக்கு - ஒரு தடுப்புக்கட்டை போட்டு தேரின் நகர்வை அவ்வப்போது முடக்குவது போல - இடக்குப் போட்டு வருவதோடு அடக்கிவிடுகின்றனர்.

இவற்றை எல்லா[illegible] நாக்கும் போது - கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது - புலிகள் தமது ஆளணி, படைபல வலிமையைத் தக்கவைத்துக்கொண்டு, அரச இராணுவம் வகுக்கும் தந்திரோபாயத் திட்டங்களுக்கு நல்லதோர் பதிலடி கொடுக்கும் வியூகத்தை வகுத்திருக்கின்றனர் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

- இப்படி அந்தத் தென்னிலங்கை விமர்சகர் குறிப்பிட்டார்.

1999இல் 'ஜெயசிகுறு' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட துருப்புகளுக்கு ஏற்பட்ட கதி, தற்போது பெயரிடப்படாமல் பொதுவாக 'மனிதாபிமானத்தை நிலைநாட்டும் யுத்தம்' என்ற பெயரில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசுத் தலைமை முன்னெடுக்கும் படை நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்ற துருப்புகளுக்கும் ஏற்படலாம் என்ற அச்சமே எனக்குள்ளது என்கிறார் அவர்.

இராணுவத்தின் வடக்கு நோக்கிய தற்போதைய நகர்வு முயற்சியின் ஒருநோக்கு, மன்னார் - பூநகரி - சங்குப்பிட்டி - கேரைதீவு ஊடாக யாழ். குடாநாட்டுக்கு ஒரு தரைவழிப் பாதையைத் திறப்பதாகும். இந்தத் தரைவழிப்பாதை திறக்கப்பட்டாலும் கேரைதீவு - சங்குப்பிட்டி இடையே உள்ள நீரோட்டத்தை, சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தை 'பாதை' மூலமாகவே கடந்து பயணிக்க வேண்டியிருக்கும்.

இத்தகைய தரைப் போக்குவரத்து மார்க்கத்தைத் திறப்பதை இலக்கு வைத்ததாக மேற்கொள்ளப்படும் இராணுவ நகர்வு முயற்சிக்கு விட்டுக் கொடுத்தும் கொடுக்காததும் போல புலிகள் பின்நகர்ந்து அனுமதித்துவரும் தந்திரோபாயத்துக்கும் வலிதான காரணம் இருக்கலாம் என்கிறார் அந்தத் தென்பகுதி இராணுவ ஆய்வாளர்.

யாழ்.குடாநாட்டில் சுமார் நாற்பதாயிரத்துக்கும் அதிகமான அரச துருப்புகள் இன்று நிலை கொண்டுள்ளன.

யாழ்.குடாநாட்டை இலக்கு வைக்கும் புலிகளின் எத்தனம் நிறைவேறுமானால், குடாநாட்டுக்குள் சிக்கிக் கொள்ளும் பல்லாயிரம் படையினரை உடனடியாகக் கொழும்பு அரசு மீட்பது அவ்வளவு இலகுவான விவகாரமாக இருக்காது. அத்தகைய நிலையில் குடாநாட்டுக்குள் சிக்கிக் கொள்ளும் படையினர், வெளியேற முடியாத நிலையில் - குடாநாட்டைத் தக்க வைப்பதற்காக - மூர்க்கத்தனமாகப் போராடுவார்கள். கடுமையாக எதிர்த்து நிற்பார்கள். வாழ்வா, சாவா என்ற போராட்டமாக அது இருக்கும். குடாநாட்டுக்கே பேரழிவு நேரும். அதனால் குடாநாட்டை மீட்கும் புலிகளின் நோக்கமும் சீர்குலைந்து போகும்.

ஒரு நாயை மூடிய அறைக்குள் அடைத்து வைத்து விட்டு உள்ளே புகுந்து அதைத் தாக்கினால் அது உயிர் பிழைப்பதற்காக வேறு வழியின்றி மூர்க்கமாக எதிர்த்துப் போராடி களேபரம் பண்ணும். அதே சமயம் தப்பிப்போக ஒரு பாதை இருப்பதை உணர்த்திக்கொண்டு அந்த நாயைத் தாக்க முற்பட்டால் அதன் சிந்தனை சிரத்தை எல்லாம் திருப்பி எதிர்ப்பதில் இருக்காது. வாசல் வழியாக ஓடித் தப்பும் மார்க்கத்தில்தான் அதன் முழுக் கவனமும் இருக்கும்.

இந்தத் தத்துவத்தை குடாநாட்டில் நிலை கொண்டுள்ள படையினர் விடயத்தில் பொருத்துவதற்காக, குடாநாட்டுக்கு ஒரு தரை மார்க்கப் பாதை கிட்டக்கூடிய வாய்ப்புப் கொடுத்து, விலகி நிற்கிறார்களோ புலிகள் என்றும் சந்தேகம் வருகின்றது என்கிறார் அந்த ஆய்வாளர்.

சாங்குப்பிட்டி - கேரைதீவு மார்க்கத்தைப் பயன்படுத்தப் புறப்பட்டால் அத்துண்டை - அங்குள்ள கடல் நீரேரியை - படகுகள், பாதைகள் மூலமே கடக்கவேண்டி நேரும். அதுவும் நீண்ட - ஒடுங்கிய - ஒரு வீதி மார்க்கத்தையே அப்பகுதியில் பயன்படுத்தவேண்டியிருக்கும்.

படை அணி ஒன்று வேகமாக - குறுகிய காலத்தில் - அந்த மார்க்கத்தில் வெளியேறவோ, அல்லது வாபஸாகி விலகவோ நேருமாயின் தன்னோடு தனது கனரக ஆயுதங்கள், பெரிய வாகனங்கள், யுத்த தளபாடங்கள் போன்றவற்றைத் தக்கவைத்து எடுத்துக்கொண்டு செல்வது என்பது இயலாத காரியமாக இருக்கும். அத்தகைய கனரக ஆயுதங்களை மற்றும் யுத்ததளபாடங்களை இலை அங்கு கைவிட்டுவிட்டுத்தான் அப்பாதை ஊடாகப் பயணிக்க வேண்டியிருக்கும்.

யாழ்.குடாநாட்டைக் கைப்பற்ற இலக்கு வைக்கும் புலிகள் இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டுதான், தற்போதைய மன்னார், கிளிநொச்சி மாவட்ட யுத்த களங்களில் பொறிவைத்து, வியூகம் அமைக்கின்றார்களா என்பது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய விவகாரம் என்கிறார் அந்தத் தென்னிலங்கை இராணுவ ஆய்வாளர்.

மொத்தத்தில் யுத்தமுனையில் புலிகள் காட்டும் அதீதத் தந்திரோபாய மௌனம் அவர்களின் இலக்கு, நோக்கங்கள் ஆகியவை தொடர்பாக இராணுவ நோக்கர்களுக்கு பலத்த சந்தேகங்களையும், கேள்விகளையும் எழுப்பியிருக்கின்றன என்பது நிச்சயம். ✱

# சமர்க்கள செய்திகளின் பின்னணியில்

# புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு வேண்டிய புரிதல்கள்

ப.தெய்வீகன்

வடபோர் அரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் அணுகுமுறை தொடர்பாக அதிருப்தியடைந்த கூட்டமாக புலம் பெயர்ந்து வாழும் மக்களின் ஒரு பகுதியினர் தமது ஆதங்கங்களை பல்வேறு வழிகளிலும் கொட்டித் தீர்ப்பதை உணரக் கூடியதாக உள்ளது.

போகிற போக்கில் கிளிநொச்சியும் படையினர் வசம் போய் விடுமா?

புலிகளின் தற்காப்பு நிலைக்கு ஒரு வரையறை வேண்டாமா?

படையினரின் அறிக்கைப்படி இந்த வருடத்துக்குள் புலிகளை அழித்து விடுவார்களா?

- இப்படி பல்வேறு சந்தேகங்கள் இந்த அதிருப்தியாளர்கள் மத்தியில் முளைத்துள்ளன.

விடுதலைப் புலிகள் தமது வெற்றிகரமான தாக்குதல்கள் நடந்து முடிந்த பின்னர் வென்றோம், முடித்தோம் என்று நீட்டி முழங்கும் எழுத்தாளர்கள் எல்லாம் தற்போது ஏன் போர் தொடர்பான உன்னிப்பான ஆய்வை செய்வதில்லை. வேறு விடயங்களை அலசி, தப்பியோடும் எழுத்துக்களுக்குள் ஒளிந்துகொள்கிறார்கள் என்ற ஒரு விமர்சனம் இந்த மட்டத்தினரிடமிருந்து எழுந்துள்ளது.

உண்மைதான். அதற்கு, தற்போதைய களநிலைவரம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதிலும் பார்க்க அதன் உண்மைநிலை குறித்து ஆய்வின் ஊடாக கள நிலைவரத்தின் யதார்த்தத்தை தெளிவுபடுத்துவது இங்கு சரியான அணுகுமுறையாக இருக்கும்.

விடுதலைப்புலிகளின் வடபோர் அரங்கில் தற்போது காண்பிக்கும் அணுகுமுறையை அவர்கள் சண்டையிடும் சந்தி சந்தியாக விவரிப்பதிலும் பார்க்க, அவர்களது ஒட்டுமொத்த போர் அணுகுமுறை குறித்த விமர்சனங்களை இங்கு நோக்குதல் பொருத்தமாக இருக்கும்.

விடுதலைப் புலிகளின் இராணுவ இயந்திரம் அரச படைகளுக்கு எதிராக வடபோர் முனையில் சமரிடும் இக்காலப் பகுதியில் புலிகள் குறித்து இராணுவத் தரப்பு வெளியிட்ட கருத்துக்களின் ஊடாக எழுப்பப்படக்கூடிய கேள்விகளே இந்த விளக்கத்தை அளிக்கக்கூடியவை.

1) விடுதலைப் புலிகளிடம் உள்ளது சிறிய வான்படைதான். ஆனால், அவற்றை வைத்து போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அரச படை நிலைகளின் மீது பாரிய தாக்குதல்களை நடத்தமுடியாது என்று படையினர் கணிப்பினும் அவற்றைக்கொண்டு பலாலியிலோ திருகோணமலையிலோ மற்றும் ஸ்ரீலங்காவின் ஏனைய பிரதேசங்களில் தெரிவுசெய்யப்பட்ட இராணுவ இலக்குகள் மீதோ தற்கொலை தாக்குதலைக் கூட நடத்தமுடியாது என்று கூறிவிடமுடியாது. அப்படிப்பட்ட புலிகளின் வான்படையில் உள்ள வானூர்திகளில் எத்தனையை தற்போது வடபோர்முனையில் புலிகளை அழிக்கும் தறுவாயில் நின்றுகொண்டிருப்பதாக தெரிவிக்கும் அரசபடைகள் அழித்துள்ளன?

2) சம்பூரிலும் பூநகரியிலும் வைத்து - இராணுவத்தின் முக்கிய தளங்களை புலிகள் இலக்கு பிசகாமல் தாக்கும்போது அவர்களிடம் 30 ஆட்லறிகள் உள்ளன என்று ஸ்ரீலங்கா இராணுவம் தகவல் வெளியிட்டிருந்தது. இராணுவத்தின் புள்ளிவிவரத்தை அடிப்படையாகக் கொண்டாலும் அவற்றில் எத்தனையை இதுவரை வடபோர்முனையில் - புலிகளின் எத்தனையோ தளபாடங்களை கைப்பற்றியதாகக் கூறும் - இராணுவம் கைப்பற்றியிருக்கிறது?

3) விடுதலைப் புலிகளிடம் உள்ள தற்கொலைப் படையணிதான் தமக்கு பாரிய சவாலான விடயம் என்று பகிரங்கமாகவே கடந்த காலங்களில் ஒப்புக்கொண்டு, அந்த அணி மூலம் நாட்டின் பல பாகங்களிலும் நினைத்துப் பார்க்க முடியாத இழப்புக்களை சந்தித்த ஸ்ரீலங்கா அரசு, விடுதலைப் புலிகளிடம் 3000 கரும்புலி வீரர்கள் உள்ளனர் என்று கணக்கு கூறியிருந்தது. அவர்கள் கூறிய இந்தத் தகவலின் அடிப்படையிலேயே பார்க்கப் போனால் கூட, கிழக்கை மீட்டுவிட்டதாக கூறப்பட்ட காலப்பகுதி முதல் இன்று வன்னிக்களமுனை வரை இந்த கரும்புலிகளில் எத்தனை பேரை ஸ்ரீலங்கா அரசபடைகள் அழித்துள்ளன? இராணுவத்தின் நடவடிக்கைக்கு சமாந்தரமாக களமுனையில் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் இதுவரை ஒரு கரும்புலி வீரனாவது தாக்குதல் நடத்தியிருக்கிறானா?

4) விடுதலைப் புலிகளுடன் ரணில் விக்கிரமசிங்க அரசு பேச்சு நடத்தியதால் அந்த அமைதிப் பேச்சுக்களை சாக்காக வைத்து விடுதலைப் புலிகள் கடல் வழியாக கப்பல் கப்பலாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்துவிட்டனர் என்று இதே மகிந்த தலைமையிலான கூட்டத்தினர் அப்போது எதிர்க்கட்சியிலிருந்துகொண்டு கூக்குரலிட்டனர். அப்படியானால், அவ்வாறு புலிகள் கொள்வனவு செய்த ஆயுதங்கள் அனைத்துமே புலிகளின் தற்காப்பு தாக்குதல்களிலேயே முடிவடைந்துவிட்டனவா? இல்லையென்றால் அவற்றில் எவ்வளவை ஸ்ரீலங்கா படையினர் கைப்பற்றியிருக்கிறார்கள்?

5) களமுனையில் பாரிய வெற்றிகளை ஈட்டி வருவதாக தினமும் அறிவித்துவரும் ஸ்ரீலங்கா அரசும் இராணுவத் தலைமையும் அரச ஊடகங்கள் தவிர கொழும்பில் வெளிவரும் எந்த ஊடகத்திலும் இராணுவ நடவடிக்கை தொடர்பாக செய்திகளையோ விமர்சன கட்டுரைகளையோ ஆய்வுகளையோ வெளிவரவிடாமல் மறைமுக தணிக்கை ஒன்றை அமுல்படுத்தி வருவது ஏன்? தம் வெற்றிகளை தனியே களத்தில் கண்டுவருவது உண்மையான விடயம் என்றால் அதனைப் பகிரங்கமாக ஆய்வுசெய்ய அனுமதிப்பதில் என்ன பிரச்சினை அல்லது அச்சம் இருக்கிறது?

6) புலிகளின் தரைப்படையுடன் சமரிட்டு அதை வென்றால் அது புலிகளின் ஒட்டுமொத்த அழிவு என்று கணக்குப் போட்டு அறிக்கைவிடும் ஸ்ரீலங்கா அரசு, கடற்புலிகளின் பலத்தில் எவ்வளவை இதுவரை அழித்திருக்கிறது? விடத்தல் தீவின் வீழ்ச்சியை கடற்புலிகளின் வீழ்ச்சியாக ஸ்ரீலங்கா அரசு கூறுவதை கேட்பதற்கு இன்று வெளிநாடுகளே தயாரில்லை.



இவை போன்ற பல்வேறு கேள்விகளுக்கு, பெரிய படை நடவடிக்கையை மேற்கொண்டு புலிகளின் அழிவுக்கு நாள் குறித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசிடம் இன்று மட்டுமல்ல என்றுமே பதில் இருக்கப் போவதில்லை. இதுதான் யதார்த்தம்.

இன்று பாரிய படை நடவடிக்கையை மேற்கொள்வதாகக் கூறும் இராணுவம், அதற்குப் பெயர் வைக்கவே அஞ்சி, வெறும் மனிதாபிமான நடவடிக்கை என்று வெளிநாடுகளின் காதுகளில் பூ சுற்றிக் கொண்டிருகிறது.

வடபோர் முனையின் உண்மை நிலைவரங்களை ஆழநோக்கினால், இராணுவத்தின் களத் தளம்பல்கள் புரியும்

1) புலிகள் பின்வாங்கிச் சென்ற இடங்களை கைப்பற்றியதாக அறிவிக்கும் நாட்களை ஊடகங்களில் அறிவிக்கும் இராணுவத்தின் பாணியானது அதன் அச்சத்தை மொழிபெயர்க்கும் சரியான எடுத்துக்காட்டு. மடு முதல் பல்வேறு இடங்களை கைப்பற்றியதாக இராணுவம் அறிவித்த நாட்கள் வேறு. உண்மையில் கைப்பற்றிய நாள் வேறு.

அதன் காரணம், புலிகள் குறித்த இடத்துக்கான ஆட்லறி ஆள்கூறுகளை குறித்துவிட்டு, வேண்டுமென்றே பின்வாங்கிவிட்டு தம்மை பொறிக்குள் சிக்கவைக்கும் விதமாக மீண்டும் திடீர் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற அச்சம் இராணுவத்துக்கு இன்றுவரை தொடர்கிறது.

'அக்கினிச்சுவாலை' முதல் கடைசியாக இடம்பெற்ற முகமாலை முறியடிப்புச் சமர் வரை புலிகள் மேற்கொண்ட இந்தத் தாக்குதல் வியூகமே படையினருக்கு இந்த தீராத அச்சத்தை புலிகள் மீது ஏற்படுத்தியிருக்கிறது.

2) குடாநாட்டுக்கான கைத்தொலைபேசிகளுக்கான இணைப்புக்களை அடிக்கடி துண்டித்துவிட்டு பாதுகாப்புக் காரணங்களைக் கூறும் படையினரின் மறைமுகமான நோக்கம் தனது படைத்துறை சார்ந்த சுயநலம் மிக்கது என்பது அடுத்த விடயம்.

குடாநாட்டில் கைத்தொலைபேசிகள் தொழிற்பட்டால் அங்குள்ள படையினர் தென்னிலங்கையிலுள்ள தமது குடும்பத்தினருடனும் உறவினருடனும் நேரடியாக தொடர்புகொள்வது தவிர்க்கமுடியாதது. அவ்வாறு தொடர்பிலுள்ள படையினரை போர் சிந்தனைக்குள் திணிப்பது இராணுவத் தலைமைக்கு சிக்கலான விடயம். அங்குள்ள படையினரில் முழுப்பேருமே தமிழ் மக்கள் போல உரிமைக்காக போராடுபவர்கள் அல்லர். ஊதியத்துக்காக போராடுபவர்கள்.

இவ்வாறு பல்வேறு கள யதார்த்தங்களைபுரிந்துகொள்ளாதவர்களாக ஸ்ரீலங்கா அரசின் 'ஊதக' பரப்புரைகளை நம்பி தமிழ் மக்கள் தமது இன விடுதலைப் போராட்டம் தொடர்பாக இரண்டாவது சிந்தனை வலயத்திற்குள் சென்றுவிடக்கூடாது.

2000இல் ஏற்பட்ட அமைதிப் பேச்சுக் காலத்திற்குப் பின்னர் விடுதலைப் புலிகளுடன் முன்னரை விட நெருங்கிப் பழகும் வாய்ப்பு எல்லா மக்களுக்கும் கிடைத்தது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. இதனால், நாங்கள் நினைத்ததையே புலிகள் செய்வார்கள் என்ற ஒருவித பிரமையும் புலிகளின் ஒட்டுமொத்த முடிவுகளை எதிர்வுகூறக்கூடிய தன்மை எமக்கு வந்துவிட்டது என்ற ஓர் எண்ணமும் பலருக்கு இருக்கலாம். அதன் அடிப்படையில் தற்போது புலிகள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்ற ஓர் அதிருப்தி தமிழ் மக்களில் ஒருபகுதியினருக்கு எழலாம்.

அது முற்றிலும் தவறான விடயம் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் எல்லோரும் மிகவும் எதிர்பார்க்கிறார்கள் என்பதற்காக களத்தில் அவசரமாக புலிகள் ஒரு வெற்றிச் சண்டையை செய்துகாட்டவேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கு அங்கு நடைபெறுவது ஒன்றும் வித்தைக் காட்சி அல்ல என்பதையும் -

எத்தனையோ சர்வதேச சதிகள், சிக்கல்கள் ஆகியவற்றுக்கு ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஓர் இனத்தின் விடுதலைப் போராட்டம் இது என்பதையும் -

சரியான தருணங்களில் முறையான முடிவுகள் எடுக்கப்பட்டு தமிழ் மக்களின் இருப்பு உறுதிப்படுத்தப்படும் என்பதையும் -

புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் உட்பட அனைவரும் நன்கு அறிவர். தமிழினப் போராட்டத்தின் கடந்தகால வரலாறு இதையே சான்று பகர்ந்து நிற்கிறது.

ஆகவே, இன்று அக்கினிக் களமாக விரிந்திருக்கும் வடபோர் முனையில் நாளை தமிழ்மக்கள் ஈட்டப்போகும் வெற்றிகளுக்கு தாங்கள் செய்யக்கூடிய அடுத்தகட்டப் பணிகளை நோக்கி புலம்பெயர்ந்த மக்கள் இப்பொழுதே தம்மை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இதுவே இக்காலப் பகுதிக்குரிய இன்றியமையாத வேலைத்திட்டமாக அமையும். ✱

*நன்றி: தமிழ்நாதம்.*






# பதவியை பறிகொடுக்க முன் வெளியேறிய பாக். அதிபர்

ரஜீவன்

ஒன்பது வருடங்களுக்கு முன்னர் மிகவும் பரபரப்பான ஒரு சூழ்நிலையில் பாகிஸ்தானிய ஆட்சியை இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் கைப்பற்றியவர் முஷாரப்.

1999 ஒக்ரோபர் 12 இல் இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டுவிட்டு நாடு திரும்பிக் கொண்டிருந்த முஷாரப்பிற்கு அவரது இராணுவ தளபதி பதவி பறிக்கப்பட்டமை நடுவானிலேயே தெரியவந்தது.

அப்போதைய பிரதமர் நவாஷ்ஷெரீவ் முஷாரப்பின் விமானம் தரையிறங்குவதை தடுப்பதற்காக கராச்சி விமான நிலையத்தை மூடிவிடுமாறு உத்தரவிட்டார்.

இதன் காரணமாக முஷாரப்பின் விமானம் மிகக் குறைந்தளவு எரிபொருளுடன் கராச்சியை சுற்றி வட்டமிடவேண்டிய நிலைக்குள்ளானது.

நவாஷ்ஷெரீப், முஷாரப்பிற்கு பதிலாக பாகிஸ்தான் உளவுத் துறையின் (ஐ.எஸ்.ஐ) தலைவர் ஜியாஷன் பட்டினை இராணுவ தளபதியாக நியமித்ததை நிராகரித்த இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் நவாஷ் ஷெரீப் அரசாங்கத்தை பதவி கவிழ்த்ததுடன் கராச்சி விமான நிலையத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததும் முஷாரப்பின் விமானம் தரையிறங்கியது.

இதன் பின்னரே முஷாரப் ஆட்சியை பொறுப்பேற்றார்.

ஒரு தசாப்தகாலத்திற்கும் மேலாக பாகிஸ்தானின் அதிகூடிய வலிமைமிக்க மனிதராக விளங்கியவர் பேர்வெஸ் முஷாரப்.

பாரிய பொருளாதார, பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் நாட்டின் ஒரு யுகம் முஷாரப்பின் இராஜினாமாவுடன் முடிவிற்கு வருகின்றது. முஷாரப் பல விடயங்களுக்காக நினைவுகூரப்படுவார்.

முஷாரப் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமொன்றை இராணுவப் புரட்சியின் மூலம் பதவி கவிழ்த்தவர். பாகிஸ்தான் இந்தியாவுடனான யுத்தத்தை நோக்கி இட்டுச் சென்றன. எனினும், சில வருடங்களுக்குப் பின்னர் அதே இந்தியாவுடன் சமாதான முயற்சியொன்றை ஆரம்பித்தார். செப்ரெம்பர் 11 இற்கு பின்னர் அமெரிக்காவுக்கான தனது ஆதரவை வழங்கி பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் மிக முக்கியமான நபராக மாறினார்.

பாகிஸ்தான் சமூகத்தை நவீனமயப் படுத்தியவர் என்ற சாதகமான பக்கமும் முஷாரப்புக்குள்ளது.

எனினும், எவ்வித எதிர்ப்பையும் சகித்துக்கொள்ள முடியாதவராக காணப்பட்ட முஷாரப் நாட்டின் முக்கிய ஜனநாயக கட்டமைப்புகளை பலவீனப்படுத்தினார்.

தற்போது காணப்படுவதை விட வரலாறு அவரை எதிர்காலத்தில் சிறப்பாக மதிப்பிடும் என்ற கருத்து அவரது ஆதரவாளர்களிடம் காணப்படுகின்றது.

அவரது கண்காணிப்பின் கீழ் நிறைய நல்ல விடயங்கள் இடம்பெற்றன என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை ஜனநாயகத்தை பொறுத்தவரை வரலாற்றாசிரியர்கள் முஷாரபை மன்னிக்கமாட்டார்கள் என்ற கடுமையான விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன.

தேர்தல்களை தனக்கு சாதகமாக பயன்படுத்தினார். எதிரிகளை வேட்டையாடினார். சர்வாதிகாரியாக மாறினார். அவரிற்கு என பாரம்பரியம் எதுவுமில்லை என்ற கருத்தும் வெளியாகியுள்ளது.

செப்ரெம்பர் 11 இற்குப் பின்னர் அமெரிக்காவிற்கு ஆதரவளித்தமையே அவரது முக்கியமான சர்வதேச முடிவாக கருதப்படுகின்றது.

அவர் தலிபானை கைவிட்டு இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எதிராக அமெரிக்காவுடன் கைகோத்தார். இதற்கு பிரதியுபகாரமாக வாஷிங்டன் இஸ்லாமாபாத்திற்கு 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை வழங்கியுள்ளது. அநேகமாக இராணுவ உதவியாகவே இது அமைந்துள்ளது.

பாகிஸ்தான் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் உதவ மறுத்தால் அதனை கற்காலத்திற்கு கொண்டு சென்றுவிடப் போவதாக புஷ் நிர்வாகம் எச்சரித்ததாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

முஷாரப் பதவிவிலகியது குறித்து பயங்கரவாதத்திற்கு எதிரான போர் நிபுணர்கள் திருப்தி வெளியிட்டுள்ள விடயம் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும். முஷாரப் முழுமையான ஆதரவு வழங்கவில்லை அல்லது நேர்மையாக செயற்படவில்லை என அவர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்காவுடன் கூட்டுவைத்துக் கொண்டதன் மூலம் அவர் பெற்ற நன்மைகளும் சிறிதுகாலத்தில் இழக்கப்பட்டுவிட்டன.

ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் எல்லையிலுள்ள பழங்குடிகள் பகுதி தலிபானின் புதிய எழுச்சியின் மையப்பகுதியாக மாறியுள்ளது.

அமெரிக்காவுடன் இராணுவ ஒத்துழைப்பு என்ற விடயத்திற்கான ஆதரவும் பாகிஸ்தானில் குறைந்துள்ளது.

முஷாரப் இன்னொருவரின் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளார் என்றே ஆரம்பம் முதல் பாகிஸ்தான் மக்கள் கருதினர்.

பாகிஸ்தான் தனது நன்மைக்காகவே பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ளது என்ற உணர்வை ஏற்படுத்துவதற்கு அவர் ஒருபோதும் முயலவில்லை.

இதன் காரணமாக பாகிஸ்தானிய மக்களின் பார்வையில் பாகிஸ்தான் இராணுவம் இன்னொருவருக்காக பணியாற்றுகின்றது என்ற எண்ணம் காணப்பட்டது. முஷாரப்பின் முக்கிய தோல்விகளில் இதுவுமொன்று.

அவரது பதவிக் காலத்தில் இந்தியாவுடனான உறவுகளும் பதட்டமானவையாகவே காணப்பட்டன.

இராணுவத் தளபதியாக பதவி வகித்த வேளை கார்கில் யுத்தத்தை ஆரம்பித்தவர் முஷாரப். இது முஷாரப் ஆட்சியை கைப்பற்றும் முன்னர் இடம்பெற்றது. பின்னர் 2001 இல் இடம்பெற்ற இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதல் மீண்டும் இருநாடுகளையும் யுத்தத்தை நோக்கி நகர்த்தியது.

எனினும், 2004 முதல் இருநாடுகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன. நம்பிக்கையை கட்டிஎழுப்பும் இப்படியான முயற்சிகள் மூலம் முஷாரப் தனது தனிப்பட்ட கௌரவத்தை உயர்த்திக் கொண்டார்.

எனினும், முஷாரப் பதவிவிலகும் காலப்பகுதியில் இருநாடுகளுக்கும் இடையிலான உறவு மீண்டும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆப்கானில் உள்ள இந்திய தூதரகம் மீதான குண்டு வெடிப்பே இதற்குக் காரணம்.

என்றாலும் முஷாரப் பதவி விலகுவது மூலம் பாகிஸ்தானில் ஏற்படுத்தக் கூடிய ஸ்திரமின்மை குறித்து புதுடில்லி அச்சம் வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டில் பொருளாதாரத்தை தாராளமயப் படுத்தியவர், ஊடகங்களை தாராளமயப்படுத்தியவர், கல்வித் தரத்தை உயர்த்தி பெண்களை வலுப்படுத்தியவர்.

மேலும் ஊழல் குற்றச்சாட்டுகள் எதுவுமில்லாமல் பதவிவிலகும் ஒரேயொரு பாகிஸ்தான் தலைவர் முஷாரப்.

எனினும், கடந்த 18 மாதங்களில் அவர் அளவுக்கதிகமாக செயற்பட்டார். நீதித்துறை, நாடாளுமன்றம் என தன்னுடன் முரண்பட்ட அனைவருடனும் மோதினார் எனினும், அதனால் பலன் ஏற்படவில்லை.

உயர்நீதிமன்ற நீதிபதியை நீக்கினார். அவசரகால நிலையை பிரகடனம்செய்து தான் மீண்டும் தெரிவுசெய்யப்படும் சூழலை உருவாக்கினார். அவர் அளவுக்கதிகமாக நம்பிக்கை கொண்டிருந்தார் எனினும், யதார்த்தம் அவர் நினைத்தமாதிரி காணப்படவில்லை.

பாகிஸ்தானின் ஜனநாயக கட்டமைப்புகளை முஷாரப் புறக்கணித்தார். அது பாகிஸ்தானையே பலவீனப்படுத்தியது என்ற குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. பாகிஸ்தானின் சகல அம்சங்களிலும் இராணுவத்தின் செல்வாக்கினை ஊக்குவித்தார். சீருடை அணிந்தவர்களுடன் பணியாற்றுவதே அவருக்கு சுலபமாகத் தோன்றியது. இராணுவம் தவிர வேறு கட்டமைப்புகளின் முக்கியத்துவத்தை அவர் உணரவில்லை. 16கோடி மக்களைக் கொண்ட நாட்டை தனி ஒரு மனிதனால் ஆளமுடியாது என்பதை அவர் புரிந்துகொள்ளவில்லை என்கிறார் விமர்சகர் ஒருவர். ✱





# குரங்கிலிருந்து மனிதன்

விலங்கினங்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் தற்போது மிக மிக முன்னேறி விட்டன. ஆகவே, குரங்குகளுக்கும் மனிதனுக்கும் உள்ள உயிரியல் ரீதியான ஒற்றுமைகளை இன்று நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், அந்தக் காலத்தில் இந்த 'ஒற்றுமை' பற்றி மிகப்பெரிய அளவில் விவாதங்கள் நடைபெற்றன.

ஆச்சரியமாக இருக்கும். உலகப்பெரும் சிந்தனையாளர்களான ப்ளேட்டோ, அரிஸ்டாடில், மார்க்கஸ் அரேலியஸ், பாஸ்கல், டெகார்ட், ஸ்பினோஸா போன்றவர்கள்கூட மனிதனை 'தனிப்பெரும் படைப்பாகவே' கருதினார்கள். 'உயிரினங்கள் அத்தனையும் ஒரு பக்கம் - மனிதன் இன்னொரு பக்கம்' என்று அவர்கள் அடித்துச் சொன்னார்கள். 'சிந்தனைத்திறன், பகுத்தறிவு, புரிந்துகொள்ளுதல்' இவற்றைக் காரணமாகக் காட்டி, 'மனிதன் ரொம்ப விசேஷமானவன்' என்று வாதிடப்பட்டது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் நிலவுகிற விஞ்ஞான உண்மைகளை அடிப்படையாகக் கொண்டுதான் தத்துவ மேதைகள் சித்தாந்தங்களை உருவாக்கினார்கள் என்பதால் அவர்களை நாம் ரொம்பத் தப்பாகச் சொல்லமுடியாது.

குரங்குக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசங்கள் ரொம்பக் குறைவு (A Few degrees) என்கிற கருத்தை ஒப்புக்கொண்டவர்கள் (தீர்க்கதரிசிகள் ?) ப்ரெஞ்சு சிந்தனையாளர் ரூஸோ, பிரிட்டிஷ் தத்துவ மேதை டேவிட் ஹ்யூம் போன்ற மிகச் சிலரே!

'குரங்கிலிருந்து மனிதன்...' என்கிற டார்வின் சித்தாந்தத்துக்குக் கடுமையான எதிர்ப்புக் கிளம்பிய காலகட்டம் அது.

'மனிதனைத் தவிர வேறு எந்த உயிரினமாவது எழுத்துக்களைக் கோத்து வாக்கியம் அமைக்க முடியுமா?'-இது ஒரு கேள்வி!

'முன்கூட்டியே உபகரணங்களைத் தயாரிக்கும் அறிவு மனிதனுக்கு மட்டுமே உண்டு. உதாரணமாக, எவரெஸ்ட் மலை ஏறவேண்டுமானால் கையோடு ஆக்ஸிஜன் சிலிண்டரை எடுத்துச் செல்லவேண்டும் என்கிற முன் அறிவு மனிதனுக்கு மட்டுமே உண்டு! பிறகு எப்படி மனிதனை குரங்கோடு ஒப்பிடலாம் ?' என்றும் அவர்கள் கேள்வி கேட்டார்கள்.

'கலாசார, வரலாற்று நினைவுகள் மனிதனுக்கு மட்டுமே உண்டு!' என்கிற கருத்தும் முன்வைக்கப்பட்டது. 'மனிதன் என்கிற உன்னதமான படைப்புக்கு உதவியாக இருக்கவும், அவன் வாழ்க்கை வண்ணமயமாக இருக்கவும் மற்ற உயிரினங்களை இறைவன் படைத்தார்!' என்று உணர்ச்சிகரமாக வாதிட்டவர் பலர்.

டார்வின் சுருக்கமாக இதற்கெல்லாம் பதில் சொன்னார் 'அடிமையாக்கப்பட்டவர் யாரையும் மனிதன் தனக்குச் சரிசமமாகக் கருதுவதில்லை!' என்று.

அதாவது, நம்முடைய அடிமையாக ஒரு மனிதனே இருந்தால்கூட அவனை நாம் சரிசமமாகக் கருதமாட்டோம் என்றார் டார்வின்.

வெள்ளையர்கள் ஆபிரிக்க கறுப்பர்களை வேட்டையாடிக் கைப்பற்றி கயிறுகளால் பிணைத்து நாயைப்போல இழுத்துச் சென்று அடிமைகளாக நடத்தி வேலைவாங்கினார்கள். அந்த அடிமைகள் வேறொரு உயிரினமாகவே வெள்ளையர்களால் கருதப்பட்டார்கள். அப்படியிருக்க, குரங்குகளை நம் 'கஸின் பிரதர்' என்று மனிதன் ஏற்றுக்கொள்வான் என்று எப்படி எதிர்பார்க்க முடியும் ?!

மொத்தத்தில், மேலைநாடுகளில் பரவலாக நடந்த 'மனிதன் - குரங்கு' பட்டிமன்றங்களும் அதற்காக நிகழ்ந்தேறிய வாதங்களும் பிரதிவாதங்களும் சுவையாகவும் சூடாகவும் அமைந்தன. 'மனிதன் என்பவன் மிகப் பிரத்தியேகமான தனிப் பிறவி' என்று வாதிட்டவர்களின் ஒவ்வொரு கேள்விக்கும் டார்வின் தரப்பு ஆராய்ச்சியாளர்கள் பதில் சொன்னார்கள்.

'பண்டமாற்றம் (Barter), வியாபாரம் (Trade) - இந்த இரண்டும் மனிதனை விசேஷமாக்குகின்றன. வேறு எந்த உயிரினமும் இதில் ஈடுபடுவதில்லை' என்றார் பொருளாதாரத் தத்துவங்களை உலகுக்குத் தந்த மேதை ஆடம்ஸ்மித்.

'நான் உனக்கு முதுகு தேய்த்து விடுவேன், தலையிலுள்ள பேன்களை அகற்றுவேன். பதிலுக்குச் சமர்த்தாக எனக்கு நீ 'செக்ஸ்' தர வேண்டும்' என்கிற அடிப்படை உடன்பாடு (அக்ரிமெண்ட்) சிம்பன்ஸிகளிடையே உண்டு!

ஒரு கூண்டுக்குள் சிம்பன்ஸி அருகே துடைப்பம் இருந்தது. விஞ்ஞானி ஒரு ஆப்பிளை நீட்டி, துடைப்பத்தை சிம்பன்ஸிக்குச் சுட்டிக்காட்டினார். சிம்பன்ஸி ஓடிப்போய்த் துடைப்பத்தை விஞ்ஞானியிடம் கொடுத்துவிட்டு ஆப்பிளை வாங்கிக்கொண்டது. 'இது பண்டமாற்றம் இல்லையா ?' என்று கேட்டார் அவர்.

இதை 'லஞ்சம்' என்று அலட்சியமாகச் சொன்னாலும், அதுவும் பொருளாதாரத்துக்கு உட்பட்டதே!

'மனிதன் மட்டுமே சமூக விலங்கு. அவன் மட்டுமே அரசியல் விலங்கும் கூட!' என்றார் அரிஸ்டாடில்.

நம்மைவிடக் கட்டுப்பாடான, கச்சிதமான சமூக வாழ்க்கையை எறும்புகளும், தேனீக்களும் கடைப்பிடிக்கின்றன! சிம்பன்ஸி உலகில் தலைவன், தொண்டன் உண்டு என்பதையும் நாம் முன்பே பார்த்தோம்!

மனிதனைப் போல குழந்தைப் பராமரிப்பு அவைகளுக்கு உண்டா?!

குரங்குகளும் யானைகளும் நமக்கு இணையாக குழந்தைகளைக் கவனித்துக் கொள்கின்றன!

'துணிவு, வீரம், தியாகம் - இவை மனிதனுக்கே உரியவை' என்றார்கள் பெருமையாக!

கழுதைப் புலிகளோ, நரிகளோ தன் குஞ்சுகளை நெருங்கினால், தாய்ப்பறவை தன் சிறகுகளை முறிந்தது போல நடித்து, தத்தித் தத்தி நடந்து, அவற்றின் கவனத்தைத் திருப்புவது பறவை ஆராய்ச்சியாளர்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்! இப்படி தாய்ப்பறவை நடந்தும், பறந்தும் எதிரியை நல்ல தொலைவு வரை ஏமாற்றி அழைத்துச் செல்வதில் புத்திசாலித்தனம், வீரம், தியாகம் எல்லாமேதான் இருக்கிறது!



'சிம்பன்ஸிகளிடம் முன்கூட்டியே 'திட்டமிடுதல்' (Planning) கிடையாது. செக்ஸ் விஷயத்திலேயே அதன் அவசரத்தைப் பாருங்கள்!' என்றார்கள். அவர்களைக் காட்டுக்கு அழைத்துக் கொண்டுபோன ஆராய்ச்சியாளர்கள், அங்கே சிம்பன்ஸிகள் எதிரிகளை நெருங்கிச் சண்டையிடுவதற்கு முன் தடிமனான மரக்கிளைகளை உடைத்துத் தங்கள் முதுகுக்குப் பின்னால் ரகசியமாக எடுத்துச் சென்றதைக் காட்டினார்கள் - மனிதர்கள் வீச்சரிவாளை முதுகில் வைத்திருப்பதுபோல! தவிர, சிம்பன்ஸிகள் போருக்குப் போவதற்கு முன் கற்களைச் சேகரித்து கையோடு எடுத்துச் செல்கின்றன! மனிதன் எதிர்க்கட்சிக் கூட்டத்தில் குழப்பம் ஏற்படுத்த லாரியில் கற்களை எடுத்துச் செல்வது போலவேதான்!

பழைய நினைவுகள் மனிதனைத் தவிர மற்ற உயிரினங்களுக்கு உண்டா ?! என்பது ஒரு கேள்வி.

யானையின் நினைவாற்றல் நமக்குத் தெரியும். பல நாட்கள் கழிந்த பிறகும் நாய் தன் எஜமானனை நினைவில் வைத்திருக்கிறது. பூனை ஒருமுறை அடுப்பில் சுட்டுக்கொண்டால், மறுபடி அடுப்பருகே போகாது! தவிர, பல உயிரினங்கள் தூங்கும்போது கனவுகாண்கின்றன என்பதையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்தாகிவிட்டது.

அழகை ரசிப்பதும், காதலுடன் முத்தமிடுவதும் மனிதன் மட்டுமே?!

சிம்பன்ஸிகள் செக்ஸ் இல்லாமல் சும்மா இருக்கும்போதும், எங்கேயாவது போய்விட்டுத் திரும்பிய உடனேயும், நிம்மதியாக அமர்ந்து நிறைய 'கிஸ்' பண்ணிக்கொள்கின்றன.

நேருக்கு நேர் பார்த்தவாறு உடலுறவு?!

'போனோபோ' (Bonobo) குரங்குகள் மனிதனைப் போலவே நேரில் கட்டிப்பிடித்து அணைத்தவாறு உறவு கொள்கின்றன!

'மனிதன் மட்டுமே 'ரேப்' செய்கிறான்!' என்றார்கள் சிலர் தலை தாழ்த்தியவாறு.

உராங் உடான், சிம்பன்ஸி மற்றும் கொரில்லா பலாத்காரம் செய்து (சில சமயம், 'நாலு பேர்' பெண்ணைப் பிடித்துக் கொள்ள!) உடலுறவு கொள்கின்றன.

சுத்தமாக இருக்கவேண்டும் (Hygiene) என்கிற ஆர்வம் மனிதர்களிடையே மட்டும் உண்டு என்கிற ஒரு வாதம் உண்டு. இது எவ்வளவு 'வீக்' ஆனது என்பது நமக்கெல்லாம் தெரிந்ததே! நம்மைவிடச் சுத்தமாக இருக்கும் விலங்கினங்கள் நிறைய உண்டு!

சிரிக்கிற, அழுகிற ஒரே உயிரினம் மனிதன்தான் ?!

சிம்பன்ஸிகளும் சிரிக்கின்றன. குழந்தை இறந்தால் அழுகின்றன. சிரிப்பு என்பது மகிழ்ச்சியின் வெளிப்பாடே! பெண் சிம்பன்ஸி ஐஸ்வர்யாராய் மாதிரியே புன்னகைக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமல்ல!

ஒரே மனைவி?

கிப்பன் குரங்கு, ஓநாய் மற்றும் பல பறவைகளுக்குச் 'சாகிற வரைக்கும் ஒரே துணை' என்கிற கட்டுப்பாடு உண்டு!

டார்வினின் எதிர்ப்பாளர்கள் விடவில்லை! 'மனிதன் ரொம்ப ஸ்பெஷல்' என்பதை வலியுறுத்த, அவர்கள் வீசிய ஒரு கேள்விக்கணை எல்லோரையும் சற்றுத் திகைக்கவைத்தது உண்மை! (இன்னும் வருவான்)




மனித இனத்தோடு வன்முறையும் கூடவே வளர்ந்து அரக்க ரூபம் எடுத்த வரலாற்றை நமது 'மனிதனுக்குள்ளே ஒரு மிருகம்' என்ற தொடரிலே தனக்கேயுரிய சிலிர்ப்பூட்டும் எழுத்து நடையில் தந்திருக்கின்றார் தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் மதன்.

'ஆனந்த விகடன்', 'ஜூனியர் விகடன்', 'ஜூனியர் போஸ்ட்' போன்ற பத்திரிகைகளின் இணை ஆசிரியராகப் பணி புரிந்த மதன் ஒரு புகழ்பெற்ற கார்ட்டூனிஸ்ட்.

மனித வரலாற்றில் கொடூரமாகப் புதைந்து கிடக்கும் 'வன்முறைக் கலங்களை' ஒரு நடைவைத் தேடி எடுத்து அதன் உண்மைத்தன்மைகளை அலசி இத்தொடரில் தந்தார்.


'ஆனந்த விகடன்' இதழில் வாசகர்களின் பெருமை தேவையைப் பெற்ற இந்தத் தொடர், இந்நூலில் மீண்டும் இங்கு இந்தத் தொடர் பிரசுரமாகின்றது.


மதன்

# நான் கண்ட பாரதி

4

*செந்தமிழ் நாடெனும்*
*போதினிலே - இன்பத்*
*தேன் வந்து பாயுது*
*காதினிலே.........*



பாரதியார்



எஸ். டி.சிவநாயகம்

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை உலகில் தன்னிகரற்ற ஜாம்பவானாக மதிக்கப்படுபவர் 'தினபதி', 'சிந்தாமணி', 'சூடாமணி' போன்ற பத்திரிகைகளின் ஸ்தாபக ஆசிரியராக மிளிர்ந்த அமரர் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள்.

ஈழத்துத் தமிழ் ஊடக உலகுக்குக் காத்திரமான பல பத்திரிகையாளர்களை வழிகாட்டி, உருவாக்கிவிட்ட பெருமைக்குரியவர் சிவநாயகம்.

27 ஆண்டுகளுக்கு முன்னர் - பாரதியார் நூற்றாண்டு சமயத்தில் - தமது 'சிந்தாமணி' வார இதழில் 'நான் கண்ட பாரதி' என்ற தலைப்பில் தொடராக அவர் வரைந்த கட்டுரைகள் பரபரப்பாகப் பேசப்பட்டவை. மகாகவி பாரதியை புதிய கோணத்தில் தமிழ் உலகம் தரிசிக்கச் செய்தவர் சிவநாயகம்.

அக்கட்டுரைத் தொடரை மறுபிரசுரம் செய்வதன் மூலம் பெருமையடைகிறது 'சுடர் ஒளி'.

இக்கட்டுரைத் தொடருக்குள் புகமுன் வாசகர்களுக்கு ஒரு நினைவூட்டல். இத்தொடர் 27 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. இத்தொடரில் எஸ்.டி.சிவநாயகம் அவர்கள் கோடிகாட்டிச் செல்லும் பாத்திரங்கள் சில அச்சமயம் நம் மத்தியில் வாழ்ந்தவர்கள். அவர்கள் இப்போது இக்கட்டுரை மறுபிரசுரமாகும் சமயத்தில் நம்மத்தியில் இல்லாமல் மறைந்திருக்கலாம்.

எனவே, 27 ஆண்டுகளுக்கு முற்பட்ட பின்புலத்திலே உங்கள் நினைவுகளைச் சுழலவிட்டபடி இந்தத் தொடருக்குள் நுழையுங்கள்!

- ஆசிரியர் -

## தமிழ் இலக்கணம் அறியாத மட்டரகப் புலவனா பாரதி?

என்ற பாரதியினுடைய பாடலில் கருத்துப் பிழையும், இலக்கணப் பிழையும் இருப்பதாக தமிழ்ப் பண்டிதர்கள் வாதிட்டார்கள்.


தேன் காதிலே வந்து பாய்ந்தால் அது இன்பமளிக்காது. எறும்புதான் வந்து கடிக்கும் என்று கேலி செய்தார்கள்.

''தேன் வந்து பாயுது''

என்றும் -

''புத்தம் புதிய கலைகள்
மெத்த வளருது மேற்கே''

என்றும் பாரதியார் பாடியிருக்கிறார். இங்கே பிரயோகிக்கப்பட்டிருக்கும் ''பாயுது, வளருது'' என்னும் சொற்கள் இலக்கண வழுவுடையன. இவை, ''பாய்கின்றது'' என்றும், ''வளருகின்றன'' என்றும் வந்திருக்க வேண்டும் - இப்படியும் பண்டிதர்கள் எடுத்துக் கூறி, பாரதி இலக்கணம் அறியாத மட்டரகப் புலவன் என்று வாதிட்டார்கள்.



விபுலாநந்தர்

இந்தக் கூற்றுக்களுக்கெல்லாம் தக்க பதில் கொடுத்தார் சுவாமி விபுலாநந்தர். அண்ணாமலைப் பல்கலைக்கழக வகுப்புகளே, பாரதியை ''டிபண்ட்'' பண்ணி அவர் பதில் கொடுக்கும் அரங்கங்களாக அமைந்தன.

விபுலாநந்தர் அளித்த விளக்கங்களின் சாரமும் திரட்டும் பின்வருமாறு:

பாடல்களுக்கு யாப்பு இலக்கணம் மட்டும் அல்ல, அணி இலக்கணம் என்றும் இலக்கணம் உண்டு. பாடல்கள் எப்படி அமைய வேண்டும் என்பதைக் கூறுவது பாட்டிலக்கணமான யாப்பு இலக்கணம். பாட்டின் சிறப்பு அம்சங்களை, பாட்டின் உள்ளே பொதிந்து கிடக்கும் அழகு ரசனைகளை, அலங்கார சோடனைகளை அறிந்து கொள்வதற்குப் பயன்படுவது அணியிலக்கணம்.

சில கவிதைகளின் சரியான பொருளை அறிவதற்கு அந்தக் கவிதை வரிகளில் உள்ள சொற்களை இடம் மாற்றி வைத்துப் பொருள் கொள்ள வேண்டும். இது ஒரு சிறப்பு அணியாகும்.

''செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே'' என்பது யாப்பு முறை வைப்பு. இதை அணி முறை வைப்பாக மாற்றினால், அது, ''செந்தமிழ் நாடெனும் போதினிலே தமிழ் இன்பம் வந்து பாயுது காதினிலே'' என்று ஆகும்.

தமிழைத் தேன் சுவையுடைய தமிழ் என்று முதன் முதலில் வர்ணித்தவர் கவிச் சக்கரவர்த்தி கம்பர் தான்.

பாரதி பாட்டில் சொன்னபடி காதில் வந்து பாய்வது தேன் அல்ல. பாய்வது இன்பம்தான். அது தேனுடைய இனிய சுவையைப் போன்ற இன்பம் என்று பொருள் தரும்.

கர்த்தபத்தின் கனைப்புக் கர்ண கடூரமானது.

மாங்குயிலின் பூங்குரல் மதுரமானது.

பசுங்கிளியின் பனிமொழி பாகு போன்றது.

என்றெல்லாம் சொல்லும்போது கடூரம், மதுரம், பாகு என்ற சொற்கள் எப்படிப் பொருந்துகின்றன?

கர்த்தபம் என்றால் கழுதை. கழுதை கத்தும் போது காதில் கொடுமை பிறக்கிறதாம். குயில் கூவும் போதும், கிளி பேசும் போதும் நாவில் மதுரமான சர்க்கரைப் பாகு போன்ற தித்திப்புத் தோன்றுகிறதாம். எப்படி கற்பனை? இது ஆச்சரியமாக இல்லையா?

ஆதியில், சுவைப்பதென்பது நாவினால் சுவைப்பதையே குறித்து நின்றது. செவியினால் சுவைப்பதென்று சொல்லப்படவில்லை. பின்னர் நாவின் சுவை செவிக்கும் ஏற்றப்பட்டது. இப்போது மனதாலும், சிந்தையாலும் கூடச் சுவைக்கலாம் என்று ஆகிவிட்டது. ஒரு கதையை, ஒரு கவிதையைப் படித்து ரசிப்பவர்களை இன்று நாம் சுவைஞர்கள் என்று சொல்லி விடுகிறோம்.

மதுரம் என்பதும் நாவினால் சுவைக்கப்படும் ஒரு சுவைதான். அப்படியிருக்கையில் மாங்குயிலின் பூங்குரல் மதுரமானது என்று எப்படிச் சொல்ல முடியும்? குயிலின் அழகான குரலை நாவினால் சுவைக்கலாமா?

உண்ணப்படுவது ஊண். கேட்கப்படுவது ஒலி அல்லது நாதம்.

ஊண் என்பதிலிருந்து வந்த சொல்தான் உணவு. உணவு வாயால் உண்ணப்படுவது; செவியால் உண்ணப்படுவதல்ல.

அப்படியிருந்தும் -

*செவிக் குணவு இல்லாத போழ்து சிறிது*
*வயிற்றுக்கும் ஈயப்படும்*

என்று வள்ளுவர் பாடியிருப்பது வேடிக்கை அல்லவா? இலையில் உணவைப் படைத்துச் செவி சாப்பிடுகிறதா என்று கேட்கலாமா?

இது செவி சமாச்சாரம்.

புரட்சிக் கவி பாரதிதாசன் தாம் பாடிய ஒரு பாடலில், ''இளம் பெண் ஒருத்தியின் அழகை ஒரு வாலிபன் கண்ணால் உண்ணத் தலைப்படும் வேளையிலே...'' என்று பாடுகிறார். அவர் கவிதையில் கண் கூட உணவு உண்கிறது!

இப்படியெல்லாம் கவிதைச் சுவை, கவிதை இன்பம் கரை புரண்டு ஓடுகையில் செந்தமிழ் நாடு என்று வாயினால் கூறும் போது தமிழ்த் தேனின் இன்பம் காதில் வந்து பெருக்கெடுக்கிறது என்று பாரதியார் பாடியது எப்படி வழுவுடையதாகும்?

கவிதை அமைப்பின் இமயச் சிறப்பை அல்லவா இங்கு அவர் எடுத்து வழங்குகின்றார்!

இப்படியெல்லாம் வாதிட்டு பாரதியின் கவிதா விலாசத்தை வெகுவாகச் சிலாகித்தார் சுவாமி விபுலாநந்தர்.

*

இனி, பாரதியார் ''பாயுது, வளருது'' என்றெல்லாம் பேச்சு வழக்குச் சொற்களை வைத்துப் பாடிய விவகாரத்துக்கு வருவோம்.

இப்படிப் பாடலாமா? சுவாமி விபுலாநந்தர் கூறிய விளக்கம் என்ன?

''ஓம்'' என்பது பிரணவம். ''ஆம்'' என்பது ஒப்புதல். ஆம் என்பதற்குப் பதிலாக இலங்கையில் நாம் ''ஓம்'' என்று சொல்கிறோம். இலங்கை நாட்டில் ஓம் என்பது பேச்சு வழக்குச் சொல். பாரதத்திலே, வில்லிபுத்தூரார் ஓர் இடத்தில் ஆம் என்பதற்குப் பதிலாக ''ஓம் என்றுரைத்தருளி'' என்று பாடியிருக்கிறார். அதனால் பேச்சு வழக்குச் சொல்லை இலக்கண சுத்தமான பாடல்களில் அப்படியே வைத்துப் பாடலாம் என்பதற்கு

- எஸ்.டி.சிவநாயகம் -

ஆதாரம் கிடைக்கிறது:

இதேபோல கம்பராமாயணத்தில் பின்வரும் பாடல் காணப்படுகிறது:

*குமுத விட்ட*
*குலவரைக் கூத்தரின்*
*திமிதமிட்டுத்*
*திரியும் திரைகடல்*
*துமித மூர்புக*
*வானவர் துள்ளினார்*
*அமுதம் இன்னும்*
*எழுமெனும் ஆசையால்*

இந்தப் பாடலில் ''துளி'' என்று வரவேண்டிய இடத்தில் ''துமி'' என்ற நாட்டு வழக்குச் சொல்லைக் கம்பர் கையாண்டிருக்கிறார்.

''நீர்த்துளி'' என்று சொல்வதுதான் சரி. ''நீர்த்துமி'' என்று சொல்வது வழுவுடைய பிரயோகம் என்று கூத்தன் வாதிட்டான். சரஸ்வதிதேவியே தோன்றி, வழக்குச் சொற்களைக் கவிதையில் பயன்படுத்தலாம் என்று (Poetic Licence) (கவியுரிமை) வழங்கினாள் என்பதற்கு கர்ண பரம்பரை ஆதாரம் உண்டு.

எனவே, ''பாயுது, வளருது'' என்பனவெல்லாம் ''பொயற்றிக் லைசென்ஸ்'' பெற்ற சொற்களேயாகும்.

மேலும், பாரதி யாருக்காகப் பாடினான்? எதற்காகப் பாடினான்? இதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவன் பாடியது பண்டிதர்களுக்காகவல்ல. சாதாரண மக்களுக்காக. பாடியதன் நோக்கம் இலக்கியம் படைக்கவல்ல.

அவன் பாடியதன் நோக்கம் மூன்று:


முதலாவது, இலட்சியம் ஒன்றை உருவாக்க.

இரண்டாவது, இலட்சியம் ஒன்றை வளர்த்தெடுக்க.

மூன்றாவது, இலட்சியம் ஒன்றை அடைய.

அந்த இலட்சியம் என்ன?

இந்தியாவின் சுதந்திரம், பாரத மாதாவின் விடுதலை.



கம்பர்

இந்த இலட்சியத்தை அடைவதற்கு எந்த வகையான மொழி, எந்த வகையான பாடல், எந்த வகையான சொற்கள் தேவைப்பட்டனவோ அவற்றையே அவன் பயன்படுத்தினான்.

அவன் பாடல்கள் அலங்காரப் பாடல்கள் அல்ல. ஆணித்தரமான கருத்தை வலியுறுத்தும் செயலூக்கப் பாடல்கள்.

வயிறு புடைக்கப் பாலும் பழமும், தயிரும் மோரும், நெய்யும் பாகும், பிசைந்த சோறும் உண்டு விட்டுத் திண்டுத் தலையணையில் உறங்கும் உல்லாச புரியினருக்குத் தாலாட்டுப் பாட்டாக அவன் காமரசக் கவிதை எழுதவில்லை.

ஒட்டிய வயிற்றோடு, உலர்ந்த உடலோடு, வற்றிய இரத்தத்தோடு, வாடிய முகத்தோடு பாடுபட்டு உழைத்த பாட்டாளியைத் தட்டியெழுப்பித் தேசிய விடுதலைப் படையின் முன்னோடி ஆக்க வேண்டும் என்றே பாரதி பாடினான்.

அதற்கான தமிழையும், மொழியையும், சொற்களையும் அவன் தேர்ந்தெடுத்துப் பிரயோகித்ததில் என்ன தவறு உண்டு?

இப்படியெல்லாம் சுவாமி விபுலாநந்தர் வாதிட்டபோது சிதம்பரத்து மாணவர்கள் இதயம் பூரித்துப் போனார்கள். நறுமலரை மொய்க்கும் வண்டினம் போல இளைஞர்கள் சுவாமிகளைச் சுற்றி வட்டமிட்டார்கள்.

அந்த மாணவர் கூட்டத்தில் ஒருவராக இருந்தார் திரு.பூ.ஆலாலசுந்தரம் என்பவர்.

இவரே பின்னர் தாம்பரம் கிறிஸ்தவ கல்லூரியில் திரு.பூ.ஆலாலசுந்தரம் செட்டியார் எம்.ஏ.பி.ஓ.எல். என்ற பெயரில் பேராசிரியராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அப்போது பிறந்த பாரதி யுகத்தைப் பற்றி எழுதிய ஒரு

(27 ஆம் பக்கம் பார்க்க)

# பி.ஜே.பியுடன் கூட்டணி வைப்பதை தள்ளிப்போடும் ஜெயலலிதா!

அடுத்த பொதுத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைக்கத் தயார் என பா.ம.கவும், பி.ஜே.பியும் சூசகமாக



தெரிவித்திருக்கின்றன. அம்மாவுக்கு

**எஸ்.சுரேந்திரஜித்**

அத்வானியுடன் நெருக்கமான நட்பு இருப்பதாலும் பிராமணப் பின்னணி அம்மாவுக்கு இருப்பதாலும் அம்மாவுடன் கூட்டணி வைக்க பி.ஜே.பி. விரும்புகிறது.

ஆனால், பி.ஜே.பியுடன் கூட்டணி வைப்பதாயின் மத்தியில் பி.ஜே.பி ஆட்சிக்கு வந்ததும் தி.மு.க. ஆட்சியை கலைக்கவேண்டும் என்ற நிபந்தனையை அம்மா வைக்க விரும்புகிறார். 1998 இலும் இவ்வாறே வாஜ்பாயுடன் கூட்டணி வைத்த போதும் ஒப்பந்தப்படி தி.மு.க. ஆட்சியை கவிழ்க்க வாஜ்பாய் மறுத்துவிட்டார். திரும்பவும் இவ்வாறு ஏமாற அம்மா தயாரில்லை. அத்துடன், காஞ்சி சங்கராச்சாரியாரை அம்மா கைதுசெய்தபோது பி.ஜே.பி. காட்டிய அளவுகடந்த எதிர்ப்பும் அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. இவ்விரு விஷயங்களிலும் பி.ஜே.பியிடமிருந்து பகிரங்கமாக வாக்குறுதிகளைப் பெற அம்மா முடிவுசெய்துள்ளார். இரு நிபந்தனைகளில்



பத்தாம் வீடு

சங்கராச்சாரியாரை கைவிடவேண்டும் என்ற நிபந்தனையை பி.ஜே.பி. ஏற்கக்கூடும். ஆனால், அடுத்த நிபந்தனையான தி.மு.க. ஆட்சியை கவிழ்ப்பது என்பது சாத்தியப்படாத ஒன்று. இந்தியாவில் கூட்டாட்சி என்பது இன்றைய காலகட்டத்தின் நியதியாகிவிட்டது. கூட்டாட்சியில் பல்வேறு மாநிலக் கட்சிகளும் பிரதான பங்கு வகித்து வருகின்றன. இதனால், இன்னொரு மாநிலத்தின் ஆட்சியை கவிழ்க்க இந்த மாநிலக் கட்சிகள் ஒப்புக்கொள்ளமாட்டா. கடந்தகாலங்களில் தனித்து அரசமைத்து கோலோச்சியபோது காங்கிரஸ் கட்சி தனது எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் ஆட்சியை ஈவிரக்கமின்றி கவிழ்த்து வந்தது. ஆனால், தற்போது காங்கிரஸ் தலைமையில் உள்ள ஆளும் கூட்டணி தனது நாலரை ஆண்டு பதவிக்காலத்துள் எதிரிகள் ஆளும் எந்த ஒரு மாநில அரசையும் கலைக்க இயலவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும்.


அரசமைப்பின் 356ஆவது ஷரத்தைப் பயன்படுத்தி மத்திய அரசு மாநில அரசுகளை கலைக்கும் காலம்



மலையேறிவிட்டது.

இப்படியிருக்க தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்போம் எனப் பகிரங்கமாக அம்மாவுக்கு எப்படி வாக்குக் கொடுப்பது என பி.ஜே.பி. கைகளைப் பிசைந்து கொண்டிருக்கிறது. ஆனால், 1998 இல் தி.மு.க. ஆட்சியை கவிழ்க்க மறுத்த

(18ஆம் பக்கம் பார்க்க)

# Study in the USA

The Experience of a Life Time

16-22 வயதிற்கு உட்பட்ட மாணவர்கள் மிக இலகுவாக VISA வை பெற்று அமெரிக்காவின் மிகச்சிறந்த Top 10 Colleges ஒன்றில் கற்பதற்கான ஒரு அரிய சந்தர்ப்பம்.

ஆகக்குறைந்த தகைமை G.C.E. O/L

TOEFL அவசியமில்லை

- நியாயமான மற்றும் குறைந்த டியூசன் கட்டணம்
- இலவச ஆலோசனை / வழிகாட்டல்
- VISA நேர்முகப்பரீட்சைக்கான இலவசப்பயிற்சி
- மாணவர்களின் தகைமைக்கேற்ப VISA வை இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பொருத்தமான கற்கைநெறி தெரிவு செய்து தரப்படும்.
- பண ஒழுங்குகளும், Sponsor வசதிகளும் செய்து தரப்படும்.

எமது நிறுவனத்தின் புதிய அணுகுமுறை மற்றும் திட்டமிடலினால் இறுதியாக விண்ணப்பித்த அனைத்து மாணவர்களும் Visa பெறுவதில் 100% வெற்றிப் பயணத்தை அடைந்துள்ளனர்.



அமெரிக்காவில் உள்ள சில பிரபல கல்லூரிகள் 16-22 வயதிற்கு உட்பட்ட சர்வதேச மாணவர்களை அதிகூடிய கவனத்தில் எடுத்துக்கொள்வதனால் Visaவை பெற்றுக்கொள்வதில் சலுகை வழங்கப்படுகின்றது. மேலதிக தகைமைகளைக் கொண்ட 22 வயதிற்கு மேற்பட்ட மாணவர்களும் இலகுவில் Visaவை பெற்றுக்கொள்ளலாம்.

உடன் அழையுங்கள் - 071 5820779

SBS Sydney Business School (Pvt) Ltd

130, Galle Road, Dehiwela, Tel : 011 4208094 /011 2718836



# தன்னையே கொல்லும் சினம்
# காப்பது புத்திசாலித்தனம்!

**கேள்வி:** ஆண். வயது 25. எனக்கு அடிக்கடி கோபம் வருகின்றது. முக்கியமாக எவரும் மிகவும் உரக்க, சத்தமாக பேசினால் கோபம் வரும். எங்கள் பரம்பரையில் அநேகமாக எல்லோருமே சாதாரணமாக உரத்த சப்தத்தில்தான் பேசுவார்கள்; திடீரென்று உணர்ச்சி வசப்பட்டு விடுவார்கள். மற்றவர்கள் சொல்லும் கருத்தை காதில் கேட்க மாட்டார்கள்; கடந்த 3 - 4 வருடங்களாகத்தான் நான் இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றேன். எனது தந்தையார் என்னோடு உரத்த சத்தத்தில் பேசினாலோ, அல்லது திரும்ப திரும்ப ஒரே வேலையை, நினைவுபடுத்தினாலோ, நான் பொறுமையை இழந்து விடுகிறேன். நான் செத்துபோனால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று கூட சில வேளைகளில் சிந்திக்கின்றேன். இரவில் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. தலைமாட்டில் யாரோ நின்றுகொண்டு, ஒரே விஷயத்தைத் திரும்ப திரும்ப சொல்வது போல உணர்கின்றேன். அந்த குரல் எனது மூளையை அதிரவைப்பது போல் உணர்கின்றேன். அறிவுரை தரவும்.

**பதில்:** துக்கம், மகிழ்ச்சி, ஏமாற்றம் எரிச்சல் போல் கோபம் ஒருவகை உணர்வே. சாதாரண உணர்ச்சிகள் காலத்துக்கு, வேளைக்கு ஏற்றவாறு ஏதோ ஒரு காரணம் நிமித்தம் வெளிப்படுவதும் சாதாரணமானதே. ஆனால், சரியான காரணம் எதுவும் இல்லாமல் (Out of Context), உணர்ச்சிகள் வெளிப்படுத்தப்படுவது அசாதாரண நிகழ்வு. அதேபோல் ஒரு நிகழ்வு நிமித்தம் வெளிப்படுகின்ற உணர்ச்சி, அது கோபமோ, அல்லது மகிழ்ச்சியோ எதுவோ இருந்தாலும், நீண்டநேரம் உங்களை ஆக்கிரமிக்குமானால் அதுவும் அசாதாரணமானதே.

கோபம் அல்லது சினம் என்ற உணர்ச்சி மற்றைய உணர்ச்சிகளை விட பயங்கரமானது. அழிவுகளை ஏற்படுத்தக் கூடியது. குடும்ப உறவு, நட்பு, தொழில் உறவு போன்றவற்றில் கசப்பான நிகழ்வுகளைத் தரக்கூடியது. அகிம்சைவாதியான மனிதன் தன்நிலையை மறந்து கோபத்தில் - கொலை கூட செய்யத் துணிவான். மனிதனின் புத்தியை மழுங்க வைத்து - 'இவனா இதைச் செய்தான்?' என்று எண்ணக்கூடிய காரியங்களை ஆற்ற வல்லது. ஆத்திரத்தில் அறிவு மழுங்கி கோவலனுக்கு தண்டனை கொடுத்த அரசனும், தவறான தண்டனை கொடுத்த அரசனை தண்டிக்க ஆத்திரம் கொண்ட கண்ணகி - அப்பாவி - மதுரையை எரித்ததும் சினம் பற்றி சிலப்பதிகாரம் தந்த படிப்பினையல்லவா? ''ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்'' என்றும் -

''தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற் தன்னையே கொல்லும் சினம்'' என்று குறளும் - கோபத்தின் விளைவுகளை அருமையாக கூறுகின்றன. இப்படியான உணர்ச்சியை அடக்கியாள்வது எப்படி?

முதலில் கோபத்தை பற்றி உணர்ந்து கொள்ளுங்கள். இந்த உணர்வு அசாதாரணமானது, இந்த சூழ்நிலைக்கு ஏற்றதல்ல (Out of Context). அளவுக்கு அதிகமானது என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள். இந்த உணர்ச்சி ஏற்பட காரணமாக இருந்த சூழ்நிலை, காலநேரம், சம்பவம், சம்பந்தப்பட்ட நபர்கள் என்பவற்றை நினைத்துப் பாருங்கள். இந்த உணர்ச்சி பீறிட்டு வரும் முன்னர் உங்கள் எண்ணம், சிந்தனை எப்படி இருந்தது என்பதையும் சிந்தித்துப் பாருங்கள். இவற்றை குறிப் பெடுத்து எழுதி - ஒரு வாரத்தில் இந்த குறிப்பேட்டுடன் - (Clinical Psychologist) என்கின்ற விசேட மருத்துவரை சந்தித்து ஆலோசனை பெறுங்கள் Anger Management Techniques என்ற சிறந்த சினம் காக்கும் பயிற்சிகளை அவர் கீழ் பழகி - பயிற்சி செய்துவர - சாந்த நிலை பெறுவீர்கள். சிலவேளைகளில் கோபம் என்பது, வேறுசில அடிப்படை காரணங்களின் வெளியீடாகக் கூட இருக்கும். மன இறுக்கம் (Stress) Burnout என்கின்ற உள்ளம், உடல் இரண்டும் 'களைத்து' போகும் நிலை, கவலை, மனச்சோர்வு (Depression ) உறவுகளில் ஏற்படும் தோல்வி என்பவை இப்படியான காரணங்கள். இவற்றின் சிகிச்சை முறை காரணங்களுக்கு ஏற்ற மாதிரி மாறுபட்டவை. சில வேளைகளில் இவற்றின் சிகிச்சைக்கு மருந்துகளை உபயோகிக்க வேண்டிக் கூட நேரிடும்.

* * *


**கேள்வி:** ஆண். வயது 30. திருமணமாகவில்லை. சிலவேளைகளில் பால் உணர்வு ஏற்படும்போது அதனை அடக்கி வைப்பேன். அதற்காக சுய இன்பத்தில் ஈடுபடுவதில்லை. இதனால் எனது விதைகளில் சிலவேளை வலி ஏற்படுகின்றது. இந்த வலி சில மணி நேரம் இருந்து விட்டு மறைந்து விடும். நான் இந்த சினைக்கு மருத்துவ உதவியை வது அவசியமா?


**பதில்:** தாரண, தாங்கக்கூடிய விதைவலி (Orchalgia) பால் சம்பந்தப்பட்ட உறுப்புகளான விந்து உற்பத்தி செய்யும் Prostate Glands, விந்துப்பை - Seminal Vesicles என்பவை பாலுணர்வு தூண்டப்படும் போது - இவற்றில் இரத்தோட்டம் அதிகரிப்பதால் - ஏற்படுவது சாதாரணமானதொன்றே. என்றாலும் நீங்கள் ஒரு சத்திரசிகிச்சை நிபுணரின் நேரடி பரிசோதனை, ஆலோசனை என்பவற்றை பெறுவது சிறந்தது என்று நான் எண்ணுகின்றேன். விதைகளில் உருவாகும் கட்டிகள், விதைப்பைகளினுள் ஏற்படும் குடலிறக்கம் (Hernia), விதைகளுக்கு வருகின்ற இரத்த நாளங்களின் வீக்கம் (Varicocele) என்பவற்றால் கூட இம்மாதிரியான வலி ஏற்படலாம். இவற்றிக்கு மருத்துவ சிகிச்சை மிகவும் அவசியம்.

* * *

**கேள்வி:** எனது மகள் வயது 8. அவருக்கு ஆக்கிரோஷமான (Aggresive) மனோநிலை. ஏதாவது வேலை சொன்னால், பாடசாலை வேலைகளை செய்யச் சொன்னால், படுக்கை, படிக்கும் மேசை என்பவற்றை ஒழுங்காக அடுக்கி வைக்கச் சொன்னால், எதிர்த்து சத்தம் போட்டு - அலறி குழறுவாள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, சாப்பிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் சோகமாக இருப்பாள். அவரின் உடல் கொஞ்சம் பெருப்பம். இதனால் விளையாடப் போக மாட்டாள். அயல் வீட்டு குழந்தைகளுடன் அரட்டை அடித்துப் பொழுதைப் போக்குவாள். எங்கள் குடும்பத்தில் இப்படியான குணங்களுடன் எவரும் இல்லை. வயது ஏற இந்தக் குணங்கள் மாறிவிடலாம் என்று எண்ணினோம். ஆனால் இது வரை இந்த பிரச்சினை அதிகரிக்கின்றதே ஒழிய குறைவதாகத் தெரியவில்லை. அவரது சாதகம் பார்த்தபோது அவள் சிங்க இராசி என்பதால்தான் இப்படி இருப்பதாக கூறினார்கள். இவரை எப்படி கையாளுவது என்பது பற்றி உங்கள் மேலான அபிப்பிராயத்  கேட்க விரும்புகின்றேன்.

**பதில்:** ஒரு சிறிய பிரச்சினையை பூதாகரமான வடிவம் எடுக்க நீங்கள் இடம் கொடுத்து விட்டீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். கடந்த நாலு வருடங்களுக்கு முன்னர் இருந்தே இந்த பிரச்சினையை கட்டுப்படுத்த தவறிவிட்டீர்கள். குழந்தைகளின் (Persona - lity) எனப்படும் ஆளுமைத் தன்மை அதன் நான்கு வயதிலிருந்து உருப்பெற ஆரம்பிக்கின்றது. தனக்கு ஏற்படும் பிரச்சினைகள் - தனக்கு வேண்டியவற்றை செய்வதை, தான் நினைத்த படி நடப்பதை, தான் மற்றவர்களை கவர்வதை, தான் மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதை, தான் மற்றவர்களை கட்டுப் படுத்துவதை, தனக்கு மற்றவர்களிடமிருந்து எப்படி மரியாதை பெறுவது என்பதை (Trial and error) என்ற முறையில் பிரளி பண்ணியோ, அடம் பிடித்தோ, குழப்படி செய்தோ, அழுது புரண்டோ - எந்த வகையில் பெறலாம் என்று மேற்படி உத்திகளை அவ்வப்போது சூழ்நிலைக் களுகேற்றவாறு கையாண்டு, வெற்றி அளிக்கும் உத்திகளை தொடர்ந்து கைக் கொள்வதும், தோல்வி பெறும் உத்திகளை விட்டு விடுவதுமாக குழந்தையின் உள வளர்ச்சி ஏற்படுகின்றது. பாவம் குழந்தை என்று பெற்றோரும், வளர வளர குணம் மாறி விடும் என்று உற்றோரும் - காலம் கடத்தி - பிரச்சினை பூதாகாரமாக உருவாகும்போது கன்னத்தில் கைவைத்து






கவலை கொள்வதில் பயனில்லை. 'குட்டி நாய்க்கும் குழந்தைப் பிள்ளைக்கும் செல்லம் கொடுக்கக்கூடாது' என்று பாட்டி மார் அறிந்தோ அறியாமலோ - குழந்தைகள் மனோதத்துவத்தை புரிந்துள்ளார்கள். இந்த 4 வயது முடிவடையும் தறுவாயில் (Discipline) என்கின்ற கண்டிப்பு - வாழ்க்கைக் கட்டுப்பாட்டை - குழந்தைக்குப் புரிய வைத்துக் கொள்ள வேண்டும். அடம் பிடித்து தனது காரியத்தை ஆற்ற முடியாது என்பதை குழந்தை புரிந்து கொள்ளவேண்டும். 4 வயதிலிருந்தே கண்டிப்புடன் - பாசத்தை மனதில் மறைத்து வைத்து - கனிவான கண்டிப்புடன் - உங்கள் குழந்தையை வளர்த்து வந்திருந்தீர்களென்றால் - இன்று இப்படி நீங்கள் கவலைப்பட்டிருக்க வேண்டிய அவசியம் வராது. இனி நடக்க வேண்டிய விஷயங்களை கவனிப்போம்.

முதலில் அவரது உணவு பற்றி கவனம் எடுங்கள்.

கொழுப்பு, எண்ணெய் அதிகளவில் சேர்த்த உணவுகளை தவிருங்கள். உணவுகள் கூட ஒரு பக்கத்தில் நோய்களுக்குக் காரணமாக இருக்கும் வேளையில் - உள வளர்ச்சிக்கும் காரணமாக இருக்கின்றன. கொழுத்த குழந்தைகள் - Obese Children, உள வளர்ச்சி குன்றியவர்களாக, நிறைய மனோநிலை நோய்களால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பது மருந்துவ ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது. உதாரணமாக, கொழுத்த குழந்தைகள் தமது உடல் பருத்ததை மனதிற் கொண்டு தனியே வாழ்வதும், மற்ற குழந்தைகளை Bully பண்ண - அடிமைப்படுத்த - நினைப்பதும் காணக்கூடிய தொன்று. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை - அதுவும் பொருத்தமானவற்றை, இருமணிநேரத்திற்கு அதிகமாக பார்க்க அனுமதிக்காதீர்கள். தொலைக்காட்சி நிகழ்வுகளில் வரும். Violence எனப்படும் குற்றச் செயல்கள் இந்த வயதினரை கவர்ந்து - அதனையே வாழ்க்கை முறையாகப் பின்பற்றத் தூண்டும். தொலைக்காட்சி பார்கும்போது திண்பண்டங்கள், உணவு உண்பதை நிறுத்துங்கள். தேகம் பருக்க இதுவும் ஒரு காரணம். மனதில் பாசத்தை வைத்து வெளியில் கண்டிப்புடன் இருங்கள். கொஞ்ச நாட்களுக்கு வீடே போர்க்களமாக இருக்கும். சினம் கொள்ளாதீர்கள். சிரித்த முகத்துடன் கண்டிப்பைக் காட்டவும். எதுவித சிறு முன்னேற்றமும் ஒரிரு மாதங்களில் தெரியாவிடில் Child Psychologist ஒருவரின் ஆலோசனை பெறவும்.

சோதிட சாஸ்திரத்தில் ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் தனித்தனியே தேக அமைப்பு, குணநலன்கள் தரப்பட்டுள்ளன என்பது உண்மைதான். ஆனால், இவை அடிப்படைப் பண்புகள். மனிதர் வளர வளர, இந்தப் பண்புகள் சூழ்நிலைக்குத் தக்கமாதிரி அனுபவங்களோடு சேர்ந்து - மனிதரை Adapt அதாவது இசைந்து வாழ - புதிய குணநலன்களை உருவாக்குகின்றன. எனவே, உங்கள் மகள் இந்த ராசிக்காரி என்பதால் - ஆக்கிரோஷம், தலைமைத்துவம், விடாமுயற்சி போன்ற பண்புகள் கொஞ்சம் அதிகமாகத்தான் இருக்கும். இவற்றை கட்டுப்பாட்டுடன் வளர்த்தால் - உலகிற்கு உபயோகமான - ஒரு பெண் உருவாகுவாள் என்பதில் சந்தேகமில்லை.

* * *



# நச்சுப் பொய்கை

## விஞ்ஞானச் சிறுகதை

பாண்டவர்களுடைய பன்னிரண்டு வருஷ வனவாசம் முடியும் காலம் நெருங்கிக்கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நாள், இன்னும் கொஞ்ச நாள் என்று மறைந்து மறைந்து, மருகி மருகிச் சீற்றமெல்லாம் வெடிக்கும் நேரம் வரக் காத்திருக்க அந்தக் கடைசி நாள்களில் இது நிகழ்ந்தது.

காட்டில் வசித்து வந்து ஓர் ஏழைப் பிராமணனின் அரளிக் கட்டையின் மேல் ஒரு மான் உடலை உராய்ந்துவிட்டுச் செல்லும்போது அதன் சிக்கலான கொம்பில் கட்டை மாட்டிக்கொண்டு விட்டது. மான் ஓடிப்போய்விட்டது.

அரளிக் கட்டையால்தான் அந்தக் காலங்களில் நெருப்பு உண்டாக்க முடியும். நெருப்பு இல்லாமல் அக்னி ஹோத்திரமில்லை. அக்கினிஹோத்திரமில்லாமல் பிராமணன் இல்லை - அந்த நாள்களில் பிராமணர்களுக்கு ஒரு சின்ன மானைத் துரத்திப் பிடிக்கவும் தெரியாது. எனவே, அந்தப் பிராமணன் பக்கத்துக் குடிசையில் வசித்து வந்த பாண்டவர்களிடம் ஓடிப்போய் முறையிட்டான்.

வேறு வேலை அதிகமில்லாத பாண்டவர்கள் ஐவரும் அந்த மானைப் பிடிக்க ஓடினார்கள். அந்த மான் இவர்களுக்குத் தண்ணி காட்டிவிட்டது. மேலும் சமீபத்திய வனவாசத்தில் அதிகம் மான் துரத்தும் பயிற்சி இல்லாததால் அதைப்பிடிக்க மிகவும் சிரமப்பட்டார்கள். மான் ஏதோ மாயமான் போலும். துள்ளிக் குதித்து அவர்களைக் காட்டில் வெகுதூரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் காணாமற்போய்விட்டது. இரைக்க இரைக்க ஓடினதுதான் மிச்சம்.

ஐந்து பேருக்கும் ஏகக் களைப்பு. ஒரே தாகம். ஓர் ஆலமரத்தடியில் உட்கார்ந்தார்கள். நாக்கு வறட்சி. நகுலன் நொந்துகொண்டான். "சே, அற்பம் ஒரு மானைக்கூடப் பிடிக்க முடியாத இந்த நிலைக்கு வநதது என்ன ஒரு தாழ்சசி " என்றான்.

இதைக கேட்ட பீமன் "திரௌபதியைச் சபைக்கு இழுத்து வந்து துகிலுரித்தபோது நீசர்களைக் கொல்லாமல் பார்த்துக்கொண்டே நின்றோம். அதைவிடத் தாழ்ச்சியா?" என்று மூச்சிரைப்புகளுக்கு இடையில் சொன்னான். அருச்சுனன், "அந்தத் தேரோட்டி மகன் சொன்ன சொற்களைக் கேட்டுக்கொண்டு சும்மா நின்றோம். அதை விடவா?" என்று வருத்தப்பட்டான்.

எல்லாரும் களைப்பினால் பொறுமை, தைரியம் எல்லாம் இழந்திருப்பதைப் பார்த்த யுதிஷ்டிரன் பேச்சை மாற்றுவதற்கு நகுலனைப் பார்த்து, "சும்மா பேசிக்கொண்டே இருக்காதீர்கள். இப்போது நம் எல்லார்க்கும் தாகம். அந்த மரத்தின் மேல் ஏறி எங்கேயாவது ஜலம் தெரிகிறதா பார்" என்று ஆணையிட்டான்.

நகுலன் "ஏன் இவன் ஏறமாட்டானோ! நான்தான் அகப்பட்டேனோ?" என்று முணுமுணுத்துக்கொண்டு மரமேறினான். பார்த்தான். சற்றுத் தூரத்தில் சில கொக்குகளும் ஜலத்தை அடுத்து வளரும் செடிகளும் தென்பட்டன. "அண்ணா! பக்கத்தில்தான் ஜலம் இருக்கிறது" என்றான் சற்று உற்சாகமாக.

"உடனே போய் ஜலம் எடுத்துக்கொண்டு வா."

நகுலன் தன் தாக மிகுதியினால் அங்கே விரைவாகச் சென்றான். எதிர்பார்த்தபடி அங்கே ஓர் அழகான பொய்கை இருந்தது. தன் தாகத்தைத் தணித்துக்கொண்டு அம்புத் தூணியிலும் நீர் நிறைத்துக் கொள்ளலாம் என்ற உத்தேசத்துடன் நகுலன் அந்தப் பொய்கையில் இறங்கினான். நிர்மலமான ஜலத்தில் கையை வைத்ததும் "நில்!" என்று ஓர் அசரீரி போல கேட்டது. நகுலன் சுற்றுமுற்றும் நோக்கினான்.

"சாகசம் செய்யாதே. இது என் வசமுள்ள குளம். மாத்ரி புத்திரனே! நான் சில கேள்விகள் கேட்பேன். அதற்கு விடையளித்துவிட்டுத் தண்ணீரைக் குடி." அந்தக் குரல் ஆகாயத்திலிருந்தா, மரங்களிலிருந்தா, எங்கிருந்து வருகிறது?

நகுலன் திடுக்கிட்டான். இருந்தும் ஒரே தாகம். தண்ணீர் குடித்துவிட்டுப் பிறகு பதில் சொல்லிக்கொள்ளலாம் என்று குனிந்து இரு கைகளிலும் அள்ளி அள்ளிக் குடித்தான். கரை ஏறினதும் மயக்கமாகக் கீழே விழுந்தான்!

தருமபுத்திரனுக்கு, 'என்ன இது! போனவன் திரும்பி வரவில்லையே' என்று கவலை உண்டாகி, "சகாதேவா! போய்ப் பார்த்து வா" என்று அனுப்பினான்.

சகாதேவன் சென்று சகோதரன் கீழே கிடப்பதைப் பார்த்து திடுக்கிட்டு... திரும்பிச் செல்லுமுன் பொய்கையைப் பார்த்தான். அதன் தண்ணீரின் கவர்ச்சி. அவன் அதீத தாகம் பொறுக்காமல் ஒரு மிடறு தண்ணீர் குடித்துவிட்டு ஓடிப்போய் செய்தி சொல்லி விடலாம் என்று பொய்கைக்கு அருகில் சென்றான்.



மறுபடி அசரீரி, "சகாதேவா, இது என் பொய்கை. கேள்விக்கு விடை சொன்ன பிறகே தாகம் தீர்த்துக்கொள்ளலாம்" என்றது. சகாதேவன் அந்த எச்சரிக்கையைப் புறக்கணித்து நீரெடுத்துக் குடிக்க, அவனும் உடனே மயங்கி விழுந்தான்.

சகாதேவனும் திரும்பி வராததைக் கண்டு கவலையடைந்த யுதிஷ்டிரன், "அருச்சுனா, நீ போயப் பார்த்து உடனே விவரம் அறிந்து வா" என்று அனுப்பினான்.

அருச்சுனன் விரைந்து சென்று பொய்கைக் கரையில் தம்பிமார்கள் கிடப்பதைப் பார்த்தான். திடுக்கிட்டுப் பொய்கையைப் பார்த்தான். அதை அணுகினான். மறுபடி அசரீரி, "அர்ச்சுனா, இது என் பொய்கை. நான் கேட்கும் வினாக்களுக்கு முதலில் விடை தா. பிறகே பொய்கையில் நீரருந்தலாம். இல்லையேல் உன் தம்பிகளைப் போல் நீயும் மாள்வாய்!" என்றது. அருச்சுனன் சத்தம் வந்த திசைகளில் அம்பு எய்து பார்த்தான். அசரீரி சிரித்து, "உன் பாணங்களை வீணாக்காதே. கேள்விகளுக்கு பதில் சொல்" என்றது. அருச்சுனன் அந்தக் குரலுடன் போராட ஆயத்தமாவதற்கு முன் அவன் தாகம் அவனை ஆட்கொண்டது. பெரிய யுத்தத்தில் இறங்கு முன் கொஞ்சம் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளலாம் என்று நீரில் இறங்கித் தண்ணீர் குடிக்கக் குனிய...

அவனும் விழுந்தான்.

யுதிஷ்டிரனுக்கு மூன்று தம்பிகளின் கவலை, தாகம். "அப்பா பீமசேனா, நீ போய்ச் சகோதரர்கள் என்ன ஆனார்கள் என்று பார். தண்ணீர் கொண்டுவா. எல்லாமே நமக்கு விரோதமாக இருக்கிறது. ஜாக்கிரதை!" என்ற அனுப்ப பீமன் விரைந்தான். பீமனுக்கும் ஏறக்குறைய அதேதான் நிகழ்ந்தது. கீழே விழுந்துகிடந்த சகோதரர்கள். திடுக்கிடுதல். அசரீரி. தாகத்தின் வேகம். தண்ணீர் குடித்தலில் மயக்கம்.

தனியான யுதிஷ்டிரனின் கவலை பல மடங்கு அதிகரித்தது. 'என்ன காரணம்? நால்வரையும் காணோம். ஏதேனும் சாபமா? ஜலத்தைக் காணாமல் நாலு பேரும் பிரிந்து திரிந்துகொண்டிருக்கிறார்களா...' என்று தானே போய்ப் பார்க்கத் தீர்மானித்து அவ்வழியே சென்றான்.

சந்தடியற்ற பிரதேசம். அழகான புள்ளிமான்கள் துள்ளுகின்றன. பறவைகளின் இனிய குரல். வசீகரமான பொய்கை அதன் கரையில்...

அய்யோ! என்ன இது? தம்பிமார்கள் நால்வரும் வெட்டிச் சாய்ந்த மரங்களைப் போல் கிடக்கிறார்களே? இறந்துவிட்டார்களா? பீமா, உன் சபதம் என்ன ஆயிற்று? நம் வனவாசம் முடியும் சமயத்தில் இந்தச் சோதனையா? எந்தப் பகைவனால் இப்படி நால்வரையும் கொல்ல முடியும்...? கிட்டப்போய்ப் பார்த்தான். உடல்களில் காயம் ஏதும் இல்லை. உறங்குகிறவர்கள் போல் முகத்தில் எவ்வித மாறுபாடும் இன்றிக் கிடக்கிறார்கள். அருகே விரோதிகள் காலடி ஏதும் காணவில்லை. இது துரியோதனனுடைய சதியாக இருக்கும். பார்க்கலாம். ஜலத்தைப் பார்த்தான். அதன் துல்லிய நீல நடனம் அந்தத் தாகத் தருமனை "வா வா! தம்பிகளை அப்புறம் கவனிக்கலாம். உன் தாகத்தை முதலில் கவனி" என்று வரவேற்றது. செலுத்தப்பட்டவன் போல் பொய்கையில் இறங்கினான். உடனே அசரீரி, "உன் தம்பிகள் என் பேச்சைக் கேளாமல் தண்ணீர் அருந்தினார்கள். நீயும் அப்படிச் செய்யாதே! தருமா! என் வினாக்களுக்கு விடை கொடுத்தப் பிறகு குடி. இது என் குளம்" என்றது.

யுதிஷ்டிரன் தன் தாகத்தைப் பொருட்படுத்தாமல் "சரி கேள்" என்றான். அசரீரி கனைத்துக்கொண்டது. கேட்டது.

"எது தினமும் சூரியனை உதிக்கச் செய்கிறது?"

"பிரம்மம்."

"மனிதனுக்கு எப்போதும் துணை எது?"

"தைரியம்."

"எதைப் படித்து மனிதன் புத்திசாலியாகிறான்?"

"எதையும் படித்தல்ல, சான்றோர்களைப் பின்பற்றியே!"

"பூமியைக் காட்டிலும் கனமானது எது?"

"மக்களைத் தாங்கும் தாய்."

"ஆகாயத்தைக் காட்டிலும் உயர்ந்தது?"

"தந்தை."

"அறிவைக் காட்டிலும் வேகமானது?"

"மனம்."

"புல்லினும் அற்பமானது?"

"கவலை."

"வெளிதேசம் போகிறவனுக்கு யார் தோழன்?"

"வித்தை."

"வீட்டில் இருப்பவனுக்கு?"

"மனைவி."

"சாகப் போகிறவனுக்கு யார் நண்பன்?"

"தானம்."

"எது சுகம்?"

"நல்லொழுக்கம்."

"எதைப் பிரிய வேண்டும்?"

"கர்வத்தை."

"எதை இழப்பதில் துயரம் இல்லை?"

"கோபத்தை."

"எதை இழப்பதில் மனிதன் செல்வனாகிறான்?"

"ஆசையை."

"பிராமணண் யார்?"

"குலமும் படிப்பும் பிராமணியத்திற்குக் காரணம் இல்லை. ஒழுக்கமே காரணம். ஒழுக்கத்தில் குறைபட்டவன் பிராமணன் ஆகமாட்டான். எவ்வளவு படித்தவன் ஆனாலும் நான்கு வேதங்களை ஓதியிருந்தாலும் கெட்ட நடத்தையுள்ளவன் இழிகுலத்தவன் ஆவான்."

"உலகத்தில் எது பெரிய ஆச்சரியம்?"

"நாள்தோறும் மக்களும் மாக்களும் இறப்பதைப் பார்த்துக் கொண்டே இருந்தும் மிஞ்சியுள்ள மனிதர்கள் தாம் சாஸ்வதமாக இருப்போம் என்று விரும்புகிறார்களே அதுதான்."

அசரீரி சற்றுத் தயங்கியது.

"தருமனே! நீ எல்லாம் அறிவாய் என்பது தெரிகிறது. உனக்கு எதிர்காலமும் தெரியுமோ?"

"தெரியும்" என்றான் தருமன்.

"உன் பதில்கள் என்னைத் திருப்திப்படுத்திவிட்டன. சகோதரர்களில் ஒருவன் பிழைக்கக்கூடும். நீ எவனை விரும்புகிறாயோ அவன் பிழைப்பான்!" என்றது அசரீரி.

தருமன் யோசித்தான். "அசரீரியே, யக்ஷனே! யாரும் பிழைக்க வேண்டாம்" என்றான்.

"என்னது?" என்று திடுக்கிட்டது அந்தக் குரல்.

"யக்ஷனே! நான் எல்லாம் அறிவேன். எதிர்கால விஞ்ஞானமும் ரசாயனமும் எனக்கு அத்துப்படி. என் சகோதரர்கள் இறக்கவில்லை. மயக்கத்தில் இருக்கிறார்கள். நான் சுனையில் இறங்கியபோதே தெரிந்துகொண்டேன். சுனையருகில் மிக லேசாக கார்பனொக்ஸைடு இருக்கிறது. மேலும் சுனைத் தண்ணீரில் லேசாக தயோமெண்ட்டோன் கலந்திருக்கிறது. இவை மிகக் குறைந்த அளவில் கலந்திருப்பதால் உயிருக்கு ஆபத்து இல்லை. கரைக்கு வந்து நல்ல காற்றை சுவாசித்தால் போதுமானது. தேவையென்றால் டெக்ஸ்ட்ரோஸ் அதிகப்படியாக உள்ள சில பழங்களைக் கொடுத்தால் குணமாகிவிடுவார்கள். மரத்தில் ஒளிந்துகொண்டு வெவ்வேறு திசைகளில் குரல் கொடுக்கப் பழகிய அசரீரியே, உன் கேள்விகள் சுவாரஸ்யமாக இருந்தன. நன்றி!" என்று கூறியபடி தன் சகோதரர்களைக் கவனிக்கச் சென்றான் தருமன். *



# அஜித்தை வைத்து ரீ-மேக்

பொதுவாக நட்சத்திரங்களையோ இமேஜ்களையோ நம்பாத இயக்குநர்களில் முக்கியமானவர் அமீர். ஆனால், அவர் ஒரு படத்தை ரீமேக் செய்ய ஆசைப்படுகிறாராம்.

அந்தப் படம் சிவாஜி கணேசன் நடித்த 'பலே பாண்டியா'.

அதுவும் அஜித்குமாரை வைத்து ரீமேக் செய்ய வேண்டும் என ஆசைப்படுகிறாராம் அமீர். சமீபத்தில் ஒருவிழாவில் அமீர் சொன்ன தகவல் இது.

அமீர் பேசுகையில் "நான் அஜித்தின் நட்சத்திர அந்தஸ்துக்காக இதைச் சொல்லவில்லை. அவரது உடல் தோற்றத்துக்கு மிகப்பொருத்தமான வேடம் இது. குறிப்பாக காமெடி ரோல்களில் ரஜினி மாதிரி அருமையாக நடிக்கும் திறமை அஜித்துக்கு உண்டு. அதற்கு அமைந்த வில்லன் திரைப்படமே சான்று" - என வெளிப்படையாகப் பேச, இதைக் கேள்விப்பட்ட அஜித்தும் ஆர்வமாக விசாரித்துள்ளாராம்.

நமக்குக் கிடைத்த தகவல்களின்படி, இப்படி ஒரு படம் செய்தால் என்ன என்ற யோசனையுடன் அமீரிடம் அஜித்தும் அவர் மனேஜரும் பேசினர் எனத் தெரிகிறது.

இந்தப் படத்தையும் நாங்களே தயாரிக்கிறோம் என தாம் களாகவே முன்வந்துள்ளனராம் ஐங்கரன் நிறுவனத்தினர்.

கருப்பு, வெள்ளையில் நடிகர் திலகம் நடித்த காதையை அஜித் கலர் புல்லாக நிகழ்த்தப்போகிறார்.

# 'தம்' வில்லி மும்தாஜ்

கவர்ச்சிக் குண்டாகக் கலக்க இனி வாய்ப்பில்லை என்பதைப் புரிந்துகொண்ட மும்தாஜ், இப்போது வில்லியாக புது அவதாரம் எடுத்துள்ளார்.

லோரன்ஸ் நாயகனாக நடிக்கும் 'ராஜாதி ராஜா' படத்தில்தான் வில்லியாகத் திறமைகாட்டப் போகிறார் மும்ஸ். அதுவும் ஆண்களைக் கண்டாலே வெறுக்கும் பாத்திரமாம்.

வில்லத்தனத்தை சாதாரணமாகக் காட்டினால் சரிவருமா...? அதனால் வாயில் எந்நேரமும் புகையும் சிகரெட்டோடு வேறு வருகிறாராம்.


அவர் கூறுகையில்:

இந்தப் படத்தில் முழுக்க முழுக்க வில்லியாகவே, அதிலும் ஆண்களைக் கண்டாலே வெறுக்கும் கரக்டரில் நடிக்கிறேன். இந்தக் கரக்டரை ரொம்ப தத்ரூபமாகக் காட்ட சிகரெட் பிடிப்பது போன்ற காட்சிகளை எடுத்துள்ளனர். விளம்பரத்துக்காக இவை பயன்படுத்தப்படும். ஆனால், படத்தில் அந்த மாதிரி காட்சிகள் வராது என நினைக்கிறேன்.

அடுத்து மைலா அரசி படங்களில் நடிக்கிறேன். அரசியில் என்கவுண்டர் பொலிஸ் வேடம்.

மலபார் பொலிஸ், வீராசாமி, பட்ஜெட் பத்மநாபன் போன்ற படங்களில் குடும்பப் பாங்காகவே நடித்தேன். ஆனால், கட்டிப்புடி கட்டிப்புடிடா .... போன்ற கவர்ச்சி ஆட்டத்தை மட்டுமே கர்கள் ஞாபகம் வைத்துள்ளனர். அது நான் என்ன செய்வது? - என்றார்.





# நயன் ரசிகர்களுக்

பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள 'சத்யம்' பட ஆடிப் பாடியிருந்த பாடல் படு ஆபாசமாக இருப்பதா செய்யச் சொல்லி விட்டதாம்.

விஷால் நடிப்பில் உருவாகியுள்ள முதல் பிரமாண் நயன்தாரா ஜோடியாக நடித்துள்ளார். படம் தமிழ் ம தணிக்கைக் குழுவினர் தமிழில் யுஏ சான்றிதழ் கிடைத்துள்ளது.

படம் முழுக்க நயன்தாராவின் கவர்ச்சியும் கன்மு என தணிக்கைக் குழு கூறிவிட்டதாம்.

இதில் முக்கியமான விடயம் 'செல்லமே' என்ற சுளிவுடன் ஆடியிருக்கிறார் என ஆட்சேபித்த தணிக் செய்யச்சொல்லி விட்டதாம். இதனால் மிச்ச சொச் குலையுயிருமாக மாறியுள்ளது.

இந்தப் பாடல் காட்சிக்காகவே நயன்தாராவும் வி நயன்தாரா டயட் இருந்து கடுமையாக உடற்பயிற் உடல் முறுக்கையும் காதல் நெருக்கத்தையும் பார் இதனால், பாடல் காட்சியில் பல இடங்களை கட் விட்டதாம். இப்படம் கடந்த ஓகஸ்ட் 14ஆம் திகதி

# வேலைக்காரியாக ஸ்ரேயா

'பயர்' புகழ் 'தீபா மேத்தா' படத்தில் பாலியல் கொடுமைக்கு உள்ளாகும் அப்பாவி வேலைக்காரப் பெண்ணாக நடிக்கிறாராம் ஸ்ரேயா.

இந்தப் படத்துக்குப் பெயர் 'காட்டேஸ் குக்கிங்'. ஒருசில பணக்கார வீடுகளில் வேலை பார்க்கும் அப்பாவிப் பெண்கள் எந்த மாதிரியெல்லாம் கொடுமைக்குள்ளாகிறார்கள் என்பதுதான் படத்தின் கதை.

பாலியல் கொடுமைகள், உடல் ரீதியான சித்திரவதைகள் என பலவற்றையும் தாங்கிக்கொண்டு பணக்காரர்களின் அதிகார பலத்துக்கு அஞ்சி வாழும் ஒரு வேலைக்காரப் பெண் பாத்திரமாம் ஸ்ரேயாவுக்கு.

கே.எஸ்.ரவிக்குமாரின் இயக்கத்தில் உருவாகும் 'ஜக்குபாய்' படத்துக்காக பாங்கொக் புறப்படும் முன் ஸ்ரேயா கூறியதாவது -

தீபா மேத்தா இயக்கும் காட்டேஸ் குக்கிங் படம் சர்வதேச அளவில் தயாராகிக் கொண்டிருக்கிறது. எனக்கு புதிய நம்பிக்கையைத் தந்துள்ள படம் இது.

தெலுங்கு பட விவகாரத்தில் என் பக்கம் யாரும் எந்தத் தவறும் கூறிவிடக்கூடாது என்பதற்காகத்தான் அட்வான்ஸை திருப்பிக்கொடுத்து விட்டேன்.

கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் 'ஜக்கு பாய்' படத்துக்காக இப்போது பாங்கொக் செல்கிறேன். 20 நாட்கள் அங்கு படப்பிடிப்பு நடக்கும். தந்தைக்கும் மகளுக்கும் இடையே நடக்கும் மோதல்தான் படம் என்றார் ஸ்ரேயா.




கந்தசாமி படத்தில் விக்ரம்-ஸ்ரேயா

# மீண்டும்

ஆமிர்கான் ஜோடி
ஹிந்திப் படம் இட
தெரியவில்லை.
காரணம் இன்று
வேண்டியிருக்கிற
புதிதாக அவர் ந
சல்மான்கான் இ
நீக்கப்பட்டுள்ளா
இந்த ஆண்டு
என்பதுதான் உ
ஆண்டு வெளிய
அவர் நடித்த
எனவே, மீ
லாவது நடிக்
அசின். அதற்
பரத்பாலா இ
தமிழ் - மலை
விஜயுடன் ஒ
வருவதாகத
விஜய் திற
படத்துக்கு
தயாரிக்கும்
முரட்டுக்கா
வைத்திரு
இதில் ந
கூறப்பட்ட
நயன்தார
அசினை
இதுகு
தமிழி
உண்ண
உறுதிய
கேட்ட



நான் ஒரு மாதிரி
இலியானா



## ளுக்கு ஒரு சோக செய்தி


த்யம்' படத்தில் விஷாலுடன் நயன்தாரா முழு நீள கவர்ச்சிகாட்டி
இருப்பதாகக் கூறி அதில் பல பகுதிகளை தணிக்கை சபை கட்

பிரமாண்டப் படம் "சத்யம்". அவரது சொந்தத் தயாரிப்பு இது. இதில்
தமிழ் மற்றும் தெலுங்கில் தயாராகியுள்ளது. படத்தைப் பார்த்த
திதழ் கொடுத்துள்ளனராம். தெலுங்கில் பக்கா ஏ சேர்டிபிகேட்

ம் வன்முறையும் தாண்டவமாடுவதால் யு சேர்டிபிகேட் தரமுடியாது

' என்று வரும் பாடல் காட்சியில் நயன்தாரா படுஆபாசமாக நெளிவு
த தணிக்கைக் குழு. அப்பாடலில் பல அசைவுகளை கட்
ச்ச சொச்ச அசைவுகளுடன் அந்தப் பாடல் குற்றுயிரும்

ாவும் விஷாலும் தங்களது உடல்பொலிவைக் கூட்டியிருந்தனர்.
டற்பயிற்சி செய்து படு செக்ஸியாக மாறியிருந்தார். ஆனால், அவரது
யும் பார்த்த தணிக்கைக் குழுவினர் மிரண்டுபோய் விட்டனராம்.
களை கட் செய்யச் சொல்லி விட்டதால் பாடலின் உயிரே பாதி போய்
ும் திகதி திரையரங்கில் வெளியிடப்பட்டது.


பந்தயக்கோழி படத்தில்
நரேன், பூஜா


பந்தயம் படத்தில்
சத்யா, சிந்துதுலானி


மகளுடன் சூர்யாவும் ஜோதிகாவும்


தூரி
படத்தில் சஞ்ஜீவ், றியா

## டும் விஜயுடன் அசின்

ான் ஜோடியாக அசின் நடிக்கும் கஜினி
படம் இப்போதைக்கு வருவதாகத்
ில்லை.
ம் இன்னும் இரு பாடல்கள் படமாக்க
பிருக்கிறதாம். இந்நிலையில் ஹிந்தியில்
அவர் நடிக்கவிருந்த பிரியதர்ஷன் மற்றும்
கான் ஆகியோரது படங்களிலிருந்து அவர்
ட்டுள்ளார்.
 ஆண்டு அவருக்குப் படங்களே இல்லை
துதான் உண்மை. அவர் நடித்த "தசாவதாரம்" இந்த
 வெளியானாலும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு
ந்நடித்த படம் அது.
வே, மீண்டும் குறைந்தபட்சம் இருதமிழ்ப் படங்களி
து நடிக்கவேண்டும் என்று முடிவு செய்திருக்கும்
ன். அதற்கான முயற்சிகளில் தீவிரமாகியிருக்கிறாராம்.
த்பாலா இயக்கத்தில் கமல்ஹாசனுடன் 19ஸ்டெப்ஸ்
ழ் மலையாளம் படத்தில் நடிக்கும் அவர், அடுத்து
யுடன் ஒரு படத்தில் நடிக்கப் பேச்சு நடந்து
வதாகத் தெரிகிறது.
ஜய் தற்போது நடித்துக்கொண்டிருக்கும் வில்லு
த்துக்குப் பின், ஏவி.எம்.பாலசுப்பிரமணியம் நிறுவனம்
ாரிக்கும் படத்தில் நடிக்கிறார். இந்தப் படத்துக்காக
ட்டுக்காளை என்ற பெயரையும் பதிவுசெய்து
வத்திருக்கிறார்கள்.
இதில் நயன்தாரா ஜோடியாக நடிப்பார் என முதலில்
றப்பட்டது. ஆனால் வில்லு படத்தில் விஜய்க்கு ஜோடி
யன்தாராதான். எனவே, ஏவி.எம்.படத்துக்கு நாயகியாக
அசினை ஒப்பந்தம் செய்யப் பேச்சு நடந்து வருகிறது.
இதுகுறித்து அசின் கூறுகையில்-
தமிழில் மீண்டும் இரு படங்களில் நடிக்கவிருப்பது
உண்மைதான். கமல் சார் படத்தில் நடிப்பது கிட்டத்தட்ட
உறுதியாகிவிட்டது. விஜய் படத்தில் நடிக்கக்
கேட்டிருப்பது உண்மைதான் இதுகுறித்து அவர்களே
முறையான அறிவிப்பு வெளியிடுவார்கள் - என்றார்.

மாதிரி படத்தில்
ா


மாலதி
படத்தில் அனுஷ்கா


சிம்பு

## பில்லா கெட்டப்பில் சிம்பு!

ரஜினியின் பில்லாவை ரீமேக் செய்து
தனது மார்க்கெட்டைச்
சரிசெய்துகொண்டார் அஜித்.
இப்போது அதே பில்லாவை தனது
மார்க்கெட் மறுசீரமைப்புக்கும்
பயன்படுத்திக்கொள்ள நினைக்கிறார்
சிம்பு.
ஆனால், இவர் காப்பியடிக்க
முயல்வது ஒரிஜினல் பில்லாவை
அல்ல. அஜித்தின் ரீமேக் பில்லாவை.
அந்தப் படத்தில் கறுப்புக் கண்ணாடி
அணிந்தபடி அஜித் ஸ்டைலாக
நடந்துகொண்டே இருப்பார்
அல்லவா....(!) அதேபோன்ற
கெட்டப்பில் இப்போது சிம்புவும்
நடிக்கிறார் தனது சிலம்பாட்டம்
படத்துக்காக.
படத்தின் ஒரு காட்சியில் சிம்புவும்
கறுப்புக் கண்ணாடி கோட் சகிதம்
"மைநேம் இஸ் பில்லா..." என
ஆடிப்பாடுத குறையாகத்
தோன்றுகிறாராம்.
பொல்லாதவன் படத்தில்
தனுஷுக்கு வில்லனாக நடித்த
கிஷோர்தான் இதில் சிம்புவுக்கும்
வில்லனாக நடிக்கிறார்.
பில்லா கெட் அப் மீது மிகுந்த
ஈடுபாடு இருந்ததால் சிம்புவால்
எளிதாக அந்தத் தோற்றத்துக்கு
மாறமுடிந்ததாம்.
இதுபற்றி சமீபத்தில் சிம்பு
கூறியதாவது:- நான் அஜித்தின் ரசி
கன். ஏற்கனவே என் படத்தில் கூட
அதைச் சொல்லியிருக்கிறேன்.
எனவே, அவர் நடித்த பில்லா கெட்
அப்பில் நடிப்பதில் எந்தத் தவறும்
இல்லை. இதை அஜித் ரசிகர்களும்
கூட விரும்புவார்கள் - என்றார்.

# கவிதைப்புனல்

## வாழும் தமிழ்

செந்தமிழ் என்று சொன்னாலே - எம்
சிந்தையில் இன்பம் பிறக்குதடா !
எந்தமிழ்க் கலைவளங் கண்டிடிலோ - உள
ஏக்கமுற் துயரும் பறக்குதடா ! -

தாயின் மதுரத் தாலாட்டும் - எம்
தந்தையர் அன்புச் சீராட்டும்
தோய்ந்தது தமிழிசைப் பாட்டாகும் - அது
தேவா மிர்தக் கூட்டாகும் !

குறுமுனி அகத்தியன் கருவினிலும் - திருக்
குறளடிப் பாக்கள் உருவினிலும்
உறுபுகழ் கண்டது நந்தமிழே ! - சுவை
உணர்திறன் பாங்கில் நல்லமிழ்தே !

பொதிகை மலையில் பிறந்தவளாம் - பழம்
புலவர் மடியில் சிறந்தவளாம் !
எதுகை, மோனை ஆண்டவளாம் - தமிழ்
எழிலார் அணிநயம் பூண்டவளாம் !

சங்கம் மூன்றும் கண்டதமிழ் - முது
சரித்திரம் அனைத்தும் கொண்டதமிழ்
பங்கம் பழிவினை அதற்கில்லை - இனி
பாரினி லுண்டோ அதற்கெல்லை ?

அகத்துறை புறத்துறை தோய்ந்தவளாம் - தமிழ்
அறவோர் உணர்விலும் மேய்ந்தவளாம்
இகத்தினில் தமிழே கற்கண்டு - நாம்
இலக்கியம் படைப்போம் சொற்கொண்டு !

கம்பன் காவிய நடைசார்ந்தும் - தமிழ்
கலிங்கப் பரணி படைசேர்ந்தும்
உம்பர் பதியிலும் உலவுகின்றாள்! - அவள்
உயிராய் உணர்வெலாம் நிலவுகின்றாள் !

பாரதி சுதந்திர கீதத்திலும் - பெரும்
பாவலர் உணர்வலை நாதத்திலும்
சீரது கண்டு சிறந்தவளாம் - தமிழ்
சுவைத்திட அமுதஞ் சுரந்தவளாம் !

சிலம்புடன் சீர்மணி மேகலையும் - ஒளிர்
சீவக சிந்தா மணிகளுமாய்
குலுங்கிட வளையா பதியுடனே - செவி
குழையினில் குண்டல கேசியுமாய்

இலங்கிடத் தமிழே ஒளிர்கின்றாள் ! - அவள்
இரும்புக ழோச்சி மிளிர்கின்றாள் !
நிலவிடும் கணினியும் ஆளுகின்றாள்! - தமிழ்
நித்திய ஆயுளில் வாழுகின்றாள் !

மொழிகள் பற்பல கிளைத்தாலும் - அவை
மருவியே கலப்பினை விளைத்தாலும்
அழியா மொழியாத் தழைத்ததுவாம் - தமிழ்
அகிலமெங்கும் செழித்ததுவாம்.

■ ஏறாவூர் அனலக்தர்.

## மழலைபெறும் இயந்திரம்

ஒருபிள்ளை நடந்திடும் ஒருபிள்ளை தவழ்ந்திடும்
ஒண்டோடி தாய்மைப்பே றடைவாள்; - ஆண்டாண்டு
'மருத்துவ மனை'க்கு வருவதும் போவதும்
மங்கையின் வாழ்க்கையாய் இருக்கும்!

கட்டிய கணவனே என்பதால் மற்றவர்
காணாமல் உறவுக்கு இசைவாள்; - மிருகம்
முட்டியே மோதிடும் மோகத்தைத் தீர்த்திடும்
மேளமாய் உதரமும் வளரும்!

மதுவிலே நித்தமும் மகிழ்வினைக் காண்பவன்
மங்கையில் திளைத்திட நினைப்பான் - கைப்பிடித்த
மாதுதான் இச்சைக்கு உடன்பட மறுத்திடில்
மாட்டைப்போல் அவளையே உதைப்பான்!

அறுசுவை அடிசிலை வாழ்விலே கண்டிடாள்
அவன்தேவை தீர்க்கின்ற பொறியாய் - நாளும்
சிறுகுடிசை தன்னிலே வாழ்வினை ஓட்டுவாள்
சிறுமைதான் தீர்ந்தவாழ் வறியாள்!

அயலிலே உள்ளவர் வாழ்வினைக் கண்டுமே
அரிவையோ மனதுக்குள் அழுவாள் - புருஷன்
புயலுருக் கொண்டுமே பூவையை வருத்துதல்
பிள்ளைகள் மட்டுமே தெரிவார்!

கடவுளை நொந்துமே காலங்கள் கழிந்திடும்
களிப்பில்லை; கலிபடர் வாழ்க்கை! - இந்த
மடமாது போலொரு 'மழலைபெறும் இயந்திரம்'
மடியும்வரை இதுதானா சாசனம்?

■ கவிஞர் அ.கௌரிதாசன், ஆலங்கேணி கிழக்கு.

## விதியை வெல்வேன்!

பணமில்லா ஏழையிவன் என்றுரைத்தாய் - நின்
பரதேசி நிலைகண்டு மனமிளகி
இணங்கிட்டேன் இனசனத்தார் விருப்பினோடு - உனை
ஏற்றவனாய் மாலையிட்டேன் பற்றினேன் கை!

மணமாகி ஆண்டுபல ஆகிவாழ்வில் - நல்
ஆனந்தம் பொங்கியினி வாழுங்காலம்
ரணமாகி எனைச்சாய்க்க எங்கிருந்தோ
சந்தேகக் கணைகள்பல வந்தனவே!

உணர்வின்றி உறக்கமின்றி உடலுருகி - நிதம்
உழல்கின்ற வதைசுமந்து பேதையானேன்
கணவனுக்கு என்னிலையை எடுத்துரைத்தும் - என்
கற்புநெறிக் கேதுமொரு நீதியில்லை!

இரவுகளில் இலவசமாய் இன்பம் ஈர்க்கும் - மட
இனங்களெனப் பெண்களினை எண்ணுவோரின்
வரவுகளே இங்கதிகம் வஞ்சனையும் - இனி
வாழ்வறுத் தோடுதலை என்னசொல்ல!

தாழ்பணிந்தேன் தாரமென்றும் தாதியுமானேன்
தாங்கொண்ணா வாழ்வுச்சுமை தாங்கிநின்றேன் - உடல்
விழ்கின்ற போதினிலும் தாலிதந்தோன்
விருப்பறிந்து பணிசெய்தேன் அடிமையானேன்!

அதிகாரத் தோரணைகள் அடிஉதைகள் - நிதம்
அநியாயப் பழிசுமத்தல் தரும்வதைகள்
கதியற்றே கிடக்கின்ற மடந்தையெந்தன் -ரத்தக்
கண்ணீரில் குளிக்கிறதே! விதியை வெல்வேன்!

■ கவிஞர் ஏ.ஆர்.நாகூர், திருமலை.

## பெண்தொழிலாளி

''குருவிக்குலம் வாழ்த்திசைக்கும்; வீறு குன்றி
கும்மிருட்டுத் திரையகலும்; கரையுங் காகம்
அருவிசுனை இடுக்குகளில் சிரிக்கும்; சேவல்
அடுத்தடுத்து சிறகடித்துக் கூவும்; வண்டு
பருகித்தேன் பூக்காட்டில் பாடும்; ஏறும்
பரிதிமெல்ல புன்னகைக்கும்; ஒளிக்க ரங்கள்
பெருவரையின் உச்சியினைத் தழுவும்; தோட்டப்
பெருமக்கள் கலகலப்பு; விழிப்புத் தோட்டம்!

அதிகாலை ஆறரைக்கு சங்கு ஊதும்
ஆயத்த மாவதற்கு எச்ச ரிக்கை
எதிர்க்கோடி குழாயடிக்குப் போனால், ஆங்கு
ஏராள பெருங்குடங்கள்; வாளிக் கூட்டம்!
நதிபாயும் மலையகத்தில் இலையா தண்ணீர்?
விநியோகச் சீர்கேடு! குழாயா? என்ன?
குதித்தோடி முதலிரவில் கொணர்ந்த தண்ணீர்
கைகொடுக்கும்; சமைத்திடுவேன்; வேண்டாஞ் சண்டை!

பரிமாற்றம் உணவுந்தான்; குடும்பத் தோடு
புசித்திடுவேன்; பள்ளிக்குக் கிளம்பும் பிள்ளை
அரிவரிகள் தெளிவில்லை; ஆனால் என்ன
அடைந்துள்ளான் தரமூன்று; பெருமை தானே?
எரிச்சலின்றி பொருள்களையும் ஒதுக்கி வைத்து
ஏகுதற்கு வேலைக்கு முயல்வேன்; காலைச்
சரியாக ஏழரைக்குச் சங்கு ஊதும்
சலிப்பின்றி வரும்பெண்கள் குழுவில் சேர்வேன்!

முக்காடு! அழுத்தாது கூடைப் பட்டி
முதுகின்மேல் அக்கூடை; மட்டக் கம்பை
அக்காகப் பிடித்திருப்பேன்; நடையில் வேகம்
அவரவர்க்குத் தனிக்கூடை; மற்றா ரோடு
எக்காடும் நிரைபிடிக்கச் செல்லல் வேண்டும்
ஏறுகின்றேன் குன்றுகுலம்; மலைகள் தோறும்
திக்கெல்லாம் கங்காணி ஏச்சுப் பேச்சு
எதிரொலிக்கும் பிசகென்றால் வேலை தன்னில்!

(தொடரும்)

■ கவிஞர் வி.எஸ்.காந்தி

## சுடர்ப்பூக்கள்

மழை பெய்யவில்லை
நான் நனைந்தேன்
நீ
பார்த்தபோது !

இரவையும்
பகலையும்
நான்
ஒன்றாகப் பார்த்தது
உன்னிடந்தான் !

நீ
வேரில் முத்தமிடு
இலைகள்
கிளைகள்
பூப்பதற்கு !

உதிர்ந்த இலைகளை
உன் பாதங்கள்
முத்தமிட்ட போது
அவை
மீண்டும்
கிளைகளுக்குத் திரும்பின
பூக்களாக !

பகல் வேளை
புல் நிலத்தில்
நீ நடந்தாய்
புற்கள் வேர்த்தன
பனித்துளிகளால் !

அத்தனை
மூங்கில்களும்
புல்லாங்குழல்களாகின
பேசிக்கொண்டிருந்தாய்
மூங்கில் காட்டில்
நீ !

நீ
மழையில் நனையாதே
வானம்
உனக்குச் செய்கின்ற
ஈர முத்தங்கள்
அவை !

மலர்ந்து
சிரித்தன
மொட்டுக்களிடம்
உன் பெயர்
சொன்ன போது !

உன் பெயரை
ஆற்று நீரில் எழுதினேன்
வாசித்தன
அழகிய மீன்கள் !

உன் பெயர்
சொன்னேன்
கூவத் தொடங்கியது
காகங்கூட !

தமிழ் மொழியே
கவிதையானது
உனக்கு
பெயர் வைத்தபோது !

கரித்துண்டு
கரும்பாக இனித்தது
உன் பெயர்
எழுதியதால் !

(தொடரும்)

■ கவிஞர் ஏ.சி.றாஹில்.

## பேரவலம்

முடமாகியது அப்பாவின் கால்
முற்றத்தில் வீழ்ந்த ஷெல்லினால்
பெரியண்ணன் மறைந்தது ஓரிரவில்
வெள்ளைவானின் மர்மக் கடத்தலினால்

முறைப்பாடு செய்தோம் மேலிடம்
முயற்சிக்குப் பலனோ சவமாய் கிடைத்தது
விழிகளின் இடத்தில் இருந்தன குழிகள்
வித்துடல் விளக்கிற்று வதைபதைகளை

சின்னண்ணன் சிங்களச் சிறையில்
சித்திரவதைகளால் சுருண்டுள்ளான் சருகாய்
துள்ளித் திரிந்த தங்கையின் தூய்மையை
தூர்த்தனர் துன்மார்க்கர் - துச்சமாய்!

இஞ்சினியராகிவிடும் இலட்சியத்துடன் இளையதம்பி
இங்கில்லை கற்றலுக்கு களநிலை

அளம்பிலில் நடந்ததோர் கலக்கம்
உலங்குவானூர்தியில் கிடந்ததோர் கலிபரால்

விளையாட்டுத் திடலின் மத்தியில் வேட்டுகள்
வரிசையாய் வீழ்ந்தன
தம்பியும் தோழர்கள் அறுவரும்
தும்பியால் துளைபட்டழிந்தனர்

மிஞ்சிய நான் வாங்கினேன் ஓட்டோ
பஞ்சத்தில் உழைத்திட விரும்பியே!
ஓட்டோவில் கிளைமோர் என்ற சாட்டுடன்
இருக்கிறேன் யாழ்ப்பாண சிறைதனில்!

சிறையிலோ தமிழர்தாம் ஊழியர்
குறைவின்றித் தந்தனர் ஊறுகள்
மொழிகளில் இல்லை மூர்க்கம்
வெறியர்தான் தருவது அவலம்

■ ஜெராட், யாழ்.சிறைக்கூடம்.

# தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்

உலகத்திலே நாகரிகம் பெற்ற மக்கள் எல்லோரும் அழகுக் கலைகளை வளர்த்திருக்கிறார்கள். மிகப் பழைய காலந்தொட்டு நாகரிகம் பெற்று வாழ்ந்து வருகிற தமிழரும் தமக்கென்று அழகுக் கலைகளை உண்டாக்கிப் போற்றி வளர்த்து வருகிறார்கள். தமிழர் நாகரிகம் மிகப் பழைமையானது என்பதைச் சரித்திரம் அறிந்த அறிஞர்கள் எல்லோரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

தற்காலத்துத் தமிழ்ச் சமுதாயம் தமது பழைய அழகுக் கலைச் செல்வங்களை மறந்து விட்டது. கலை, கலை என்று இப்போது கூறப்படுகிறது எல்லாம் சினிமாக்கலை, இசைக் கலைகள் பற்றியே, இலக்கியக்கலை கூட அதிகமாகப் பேசப்படுகிறதில்லை. ஏனைய அழகுக் கலைகளைப் பற்றி அறவே மறந்துவிட்டனர் இக்காலத்துத் தமிழர். மறக்கப்பட்ட அழகுக் கலைகள் மறைந்து கொண்டே இருக்கின்றன. அழகுக் கலைகள் ஒவ்வொன்றும் கடல் போன்று விரிந்து ஆழமானவை. கவலையற்ற நிம்மதியான வாழ்க்கை வாய்க்கப் பெற்றவரும் கூட அழகுக் கலைகளை ஆழமாகவும் நுட்பமாகவும் அறிய முடிகிறதில்லை.

அழகுக் கலைகளைப்பற்றி முழுவதும் தெரிந்து கொள்ளாவிட்டாலும், அவற்றைப் பற்றிய மேல்வாரியான பொதுச் செய்திகளையாவது அறிந்திருக்க வேண்டுவது நாகரிகம் படைத்த மக்களின் கடமையாகும். அழகுக் கலைகளை உண்டாக்கி, உயரிய நிலையில் வளர்த்துப் போற்றிப் பாதுகாத்து வந்த தமிழ்ச் சமூகத்தின் பரம்பரையினர், இக்காலத்தில் அவற்றை மறந்து வாழ்வது நாகரிகச் செயலாகாது.

மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்று கூறலாம். உளவு, வாணிபம், நெசவு, மருத்துவம் முதலிய தொழில்கள் யாவும் கலைகளே. பண்டைக் காலத்திலே அறுபத்து நான்கு கலைகள் என்று மணிமேகலை முதலிய நூல்கள் கூறுகின்றன. சிலப்பதிகாரமும் ஆடற்கலையை எடுத்துக் கூறியுள்ளது. மனிதனுக்கு இன்பத்தைத் தருபவை அழகுக் கலைகளே. அழகுக் கலைகளின் வாயிலாக மனிதன் நிறைமனம் அடைகிறான்.

அழகுக்கலைகளை நோக்கும்போது அவற்றை கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக் கலை, இசைக் கலை, காவியக் கலை என ஐந்தாக வகுக்கலாம். பண்டைக்காலத்தில் கட்டடக் கலையையும் சிற்பக்கலையையும் ஒரே பெயரால் சிற்பக்கலை என்று வழங்கினார்கள். ஆனால், கட்டடக் கலைவேறு, சிற்பக் கலை வேறு. காவியத்துடன் நாடகம் அடங்கும். அழகுக் கலைகளில் இசைக்கலை, காவியக்கலை இரண்டையும் பண்டையத் தமிழர் இயல், இசை, நாடகம் என்று மூன்றாகப் பிரித்து முத்தமிழ் என்று அழைத்தார்கள். செய்யுள் நடையிலும் வசன நடையிலும் காவியம் அமைவது இயற்றமிழ் எனப்பட்டது. செய்யுளை இசையோடு பாடுவது இசைத்தமிழானது. இயலும் இசையும் கலந்து ஏதேனும் கருத்தையோ கதையையோ தழுவி வருவது நாடகத்தமிழ் எனப்பட்டது. நாடகத் தமிழில் நடனம், நாட்டியம், கூத்து என்பனவும் அடங்கும். எனவே, அழகுக் கலைகள் ஐந்தையும் விரித்துக் கூறுமிடத்து கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை, இசைக் கலை, கூத்துக்கலை (நடனம், நாட்டியம்), காவியக்கலை, நாடகக் கலை என ஏழாகக் கூற முடியும்.

மேற்கூறிய கலைகள் எல்லாவற்றிலும் காவியக்கலை மிக நுட்பமுடையது. ஏனென்றால், காவியக் கலையைக் கண்ணால் கண்டு இன்புறமுடியாது. காதினால் கேட்கக் கூடுமாயினும், கேட்பதனாலே மட்டும் மகிழ முடியாது. காவியக் கலையை துய்ப்பதற்கு மனவுணர்வு மிக முக்கியமானது. மனதினால் உணர்ந்து அறிவினால் இன்புறத்தக்கது. ஆகையினால் காவியக்கலை கலைகளில் சிறந்த நுண்கலை என்று கூறப்படுகிறது. இசைக்கலையோடு தொடர்புடைய நடனம், நாட்டியம், கூத்து என்பனவும், காவியக் கலையுடன் தொடர்புடைய நாடகமும் கண்ணால் கண்டும் காதால் கேட்டும் மகிழத்தக்கன.




முத்தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. விபுலானந்த அடிகளார், தமது யாழ் நூலிலே அழகுக் கலைகளின் பொதுவான சில இலக்கணங்களைக் கூறியுள்ளதை எடுத்துக் காட்டுவது சிறப்புடையதாக இருக்கும்.

"அகரமுதல் னகர வீறுவாகிய முப்பதும், சார்ந்து வரன் மரபினவாகிய மூன்றும் என்னும் முப்பத்து மூன்று எழுத்துக்களைத் தொழிற்படுத்துதலினாலே இயற்றமிழானது, பொருள் பொதிந்த சொற்களை ஆக்கி, அவை கருவியாகப் பாரகாவியங்களையும், நீதி நூல்களையும் வகுத்து, இம்மை மறுமைப் பயனளிக்கின்றது."

"ச ரி க ம ப த நி என்னும் ஏழு ஓசைக் கருவியாக இசைத் தமிழானது ஏழ்பெரும் பாலைகளை வகுத்து. அவை தமது விரிவாகப் பதினோராயிரத்து தொண்ணூற்றொன்று என்னும் தொகையினவாகிய ஆதியிசைகளையமைத்து, இம்மை இன்பமும், தேவர்ப்பரவுதலானெய்தும் மறுமையின்பமும் பெறுமாறு செய்கின்றது."

"நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் மெய்ப்பாடுகளை நிலைக்களமாகக் கொண்டு, உள்ளத்துணர்வினாலும், உடலுறுப்பினாலும், மொழித்திறனாலும், நடையுடையினாலும், அவை தம்மைத் தொழிற்படுத்தி, இருவகைக்கூத்து, பத்துவகை நாடகம் என்னுமிவற்றைத் தோற்றுவித்து, நாடகத் தமிழ் உள்ளத்திற்கு உவகை அளிக்கின்றது."

"கண்ணினாலும் செவியினாலும் உள்ளத்தினாலும் உணர்ந்து இன்புறற் பாலவாய அழகுக்கலை உருக்களெல்லாம் ஒரு சில மூலவுருக்கள் காரணமாகத் தோன்றி நின்றனவென்பது தெளிவாகின்றது."

"உருக்களை ஆக்கிக் கொள்ளும் முறையினைக் கூறும் நூல்கள் பொது இயல்புகளை வகுத்துக் காட்டுவன. புலவன், இசையோன், கூத்தன், ஓவியம் என்று இன்னோர், தமது சொந்த ஆற்றலினாலே, நுண்ணிய விகற்பங்களைத் தோற்றுவித்துச் செம்மை நலஞ்சான்ற உருக்களைப் பெருக்குதலினாலே அழகுக் கலைகள் விருத்தியடைகின்றன."

இவ்வாறு சுவாமி விபுலானந்தர் அழகுக் கலைகளின் பொது இலக்கணத்தை விளக்கிக் கூறினார். ✱

# மன அமைதி

உங்கள் மன அமைதியைப் பெருக்கிக் கொண்டே போக முயலுங்கள். இடையில் தயங்கவேண்டாம். மேலும், மேலான நிலைக்குப் போக முடியும். தயங்கி நின்றால்தான் மோசமானது. ஏனெனில் அது சில சமயங்களில் நிலைமையை மோசமாக்கி விடும். உங்கள் அக வாழ்க்கையின் தரத்தை உயர்த்துங்கள். அகத்தேயுள்ள மனநிறைவே உண்மையான செழிப்பாகும். உங்கள் செல்வம் உள்ளே உருவாக்கப்படட்டும். உங்கள் குழந்தைகளின் செல்வம் அகத்தே உருவாக்கப்படட்டும். இது நிச்சயம் புறவாழ்விலும் செல்வத்தைக் கொணர்ந்து விடும். ஒரு மனிதனை அவனது செயலால் தீர்மானிக்காது, அவன் எப்படி இருக்கின்றான் என்பதைக் கொண்டு தீர்மானிக்கவேண்டும் என்று வல்லாளர்கள் சொல்கிறார்கள். எல்லாச் சிறிய ஆசைகள் மற்றும் ஆவல்களை இந்த ஓர் இலட்சியத்தால் இடப்பெயர்ச்சி செய்யுங்கள். ஒரு முறையான இலட்சியத்தை உங்கள் முன் வைத்துக் கொண்டால், அதன்பின் உங்களுக்கு நீங்களே உண்மையாக இருக்க ஆரம்பியுங்கள், உங்கள் சிந்தனை, சொல், செயலுக்கிடையே மேலும் மேலும் ஒற்றுமையைக் கொண்டு வாருங்கள். நீங்கள் சொல்வதைச் செய்யுங்கள். எல்லாப் போலித்தனங்களையும் விடுங்கள். உங்கள் வாழ்விலிருந்து எல்லாப் போலித்தனங்களையும் அகற்றுங்கள். மன அமைதியின் முக்கிய பகைவன் போலித்தனமேயாகும். ஒரு சில நம்பகரமான நண்பர்களிடம் மட்டுமே பழகுங்கள். பழக்கத்தைப் பெருக்க வேண்டாம். எவருடனும் அதிகமாக நெருங்கிப் பழகவேண்டாம். அதிக நெருக்கம் அலட்சியத்தை



உருவாக்கி உணர்ச்சிகளை உருகுலைத்து, மன அமைதியைக் கெடுக்கிறது.

காரணத்துடன் மட்டும் பேசுங்கள். எல்லாவிதமான தேவையற்ற பேச்சையும் தவிர்த்து அளந்தே பேசுங்கள். களங்கமற்ற, நல் நோக்கம் கொண்ட வார்த்தைகளே சில வேளைகளில் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு பிரிவை உண்டாக்குகின்றன. எதிலும் எவருக்கும் புத்திமதி சொல்லப் போகாதீர்கள். நீங்கள் கேட்கப்பட்டாலன்றி, நாம் நமது வேலையைப் பார்த்துக்கொண்டு மன அமைதியுடன் வாழப் பழகிக்கொள்வோம். மன அமைதியே மன நிம்மதியைக் கொடுக்கும். ✱

# மார்க்சிய இலக்கியக் கொள்கை

மார்க்சிய இலக்கியக் கொள்கை பற்றி பல கருத்துக்கள் நிலவுகின்றபோதிலும், மார்க்சிய இலக்கியக்கோட்பாடு என்பது மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் உருவாக்கிய அடிப்படைகளைக் கொண்டதாகத்தான் அமைந்துள்ளது என்பதை மனதில் கொள்ளவேண்டும். மார்க்சியம் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட தத்துவம். மார்க்ஸ் அவருடைய கொள்கையை உருவாக்கும்போது ஓர் இயங்கியல் பொருள் முதல் வாதியாகத்தான் உருவாக்கினார். பொருள்தான் உலகில் அடிப்படையானது, கருத்துக்கள் வழிநிலையானவை என்ற தத்துவ நோக்கினை மார்க்ஸ் ஏற்றுக்கொண்டார். அந்தப் பொருள் நிலைத்து இருப்பதில்லை. ஒன்றுடன் ஒன்று உறவுகொண்டு, மாறியும் தோன்றியும் வருவது அதன் தன்மை என்பதையும் அவர் வலியுறுத்தினார். மார்க்ஸ் இந்த அடிப்படையான இயங்கியல் பொருள் முதல்வாதத்தினைத் தான் வரலாறு, பொருளாதாரம், சமூகம், கலை, இலக்கியம் ஆகிய எல்லாவற்றையும் விளக்கப்பயன்படுத்தினார். அவரின் மிகச் சிறந்த படைப்பான 'மூல தனம்' இந்தக் கொள்கையைப் பின்பற்றி எழுதப்பட்டதாகும். இந்தக் கோணத்தில் இருந்து மார்க்ஸ் சமூகத்தினைக் காண்கிறார். சமூகம் என்பது மாறிக் கொண்டே இருக்கிறது என்று அவர் கூறுகிறார். ஆதிகாலம் தொட்டு இன்றுவரை மனித சமூகம் மாறுதல் அடைந்து பல்வேறு வகையினதாகப் பரிணாமம் பெற்று இன்றைய வடிவத்தைப் பெற்றுள்ளது என்று மார்க்ஸ் கூறியுள்ளார்.

எந்த ஒன்றும் மாறுதல் அடைந்து வளர்வதற்கு மார்க்ஸ் கூறும்காரணம் முரண்படும் சக்திகளுக்கு இடையே உள்ள போராட்டங்கள் - இந்தப் போராட்டங்கள் காரணமாக ஒன்று தோன்றி நிலைபெற்று மறுபடியும் மாறுதலடைகிறது. இதைச் சமூகத்திற்குப் பொருத்தி விளக்கிக் காட்டியதுதான் மார்க்ஸ் உலகசிந்தனை வரலாற்றுக்கு அளித்த நன்கொடையாகும். ✱

# நூலாக்கத்துறையின் சாதனையாளர்



முனைவர் சபா ஜெயராசா

பேராசிரியர் முனைவர் சபா ஜெயராசா தமிழில் பல நூல்களைத் தந்து, நூலாக்கத்துறையின் சாதனையாளராக முகிழ்ந்து நிற்கிறார். மார்க்ஸியம் சார்ந்து உளவியல், மானிடவியல், கல்வியியல், கலையியல் கருத்துக்களை முன்நிறுத்தி பல நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். ஈழத்துப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இவரது இறுக்கமான பல கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பேச்சு வன்மையும், மதிநுட்பமும் எழுத்தாற்றலும் வாய்ந்த பேரறிஞர். தனது ஆளுமைக்குச் சான்றாக பல்துறை சார்ந்த பல நூல்களை அவர் வெளிக் கொணர்ந்துள்ளார். கல்வியியல் துறை சார்ந்த நூல்கள் பல எழுதி அத்துறை சார் விருத்தியில் முதன்மையான பங்குகொண்டு செயலாற்றி வருபவர். உளவியல் துறையில் தனக்கு இருக்கும் ஈடுபாடு காரணமாக இத்துறைசார் நூல்கள் பலவற்றை அவர் தந்துள்ளார். பிஞ்சு உள்ளங்களுக்கு மன ஆற்றல் ஏற்படும்வகையில் குழந்தை இலக்கியங்களையும் படைத்துள்ளார். கலை இலக்கியம் சார்ந்த இலக்கியங்கள் ஈறாக மொத்தமாக அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். கடந்த ஆறு மாதத்திற்குள் பல நூல்களை எழுதிச் சாதனை கண்ட அவரின் நூல்களை சேம மடு பொத்தகசாலையினர் வெளியிட்டுள்ளனர்.

'கல்விக்கோட்பாடுகளும் மாற்றுச் சிந்தனைகளும்', 'கற்றல் உளவியல்', 'கல்விச் சமூகவியல்', 'இலங்கையின் கல்வி வரலாறு', 'உளவியல் முகங்கள்', 'இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள்', 'மொழிக் காலனித்துவமும் பரதநாட்டியமும்', 'கல்வியியலும் கணிப்பீட்டியலும்' ஆகிய எட்டு நூல்களையும் மிகவும் குறுகியகாலத்தில் எழுதித் தமிழ்நூல்களின் நூலாக்கத்துறைக்குப் பெருமை சேர்த்துள்ளார். எழுத்தும் வாசிப்பும், தேடலும் அவர் சொத்துக்கள். மொழி பெயர்ப்புத் துறையில் வல்லாளர். பல புதிய சொற்களைத் தமிழுக்குத் தந்துள்ளார். இவர் மொழி பெயர்த்த 'மார்ட்டின் விக்கிரமசிங்கவின் கதைகள்' வெகுவிரைவில் வெளிவரவிருக்கின்றது. அவர் பணி சிறப்புற நாமும் வாழ்த்துவோம். ✱

# ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும்



கொழும்பில் 'அறிவாளர் சங்கம்' என்ற ஒன்று இருக்கின்றது. அச்சங்கத்தில் அங்கத்துவம் பெறுவது மிகவும் கஷ்டம். இருந்தும் அச்சங்கத்தில் பல அறிவாளிகளும் ஒரு சில அறிவுடையோரும் இருக்கிறார்கள். அந்த அறிவாளர் சங்கத் (வெங்காயச் சங்கமல்ல) தேர்தலில் அறிவாளர்களும் ஒருசில அறிவுடையோரும் போட்டி போடுகின்றனர். தன்னை ஒரு பேரறிஞர் என்று சொல்லிக் கொண்டு ஒருமொழி தன்னும் சரியாக எழுதத்தெரியாத அறிவாளர் முக்கிய பதவிக்குப் போட்டியிடுகின்றார் என்ற செய்தியை அறிந்து என் நண்பராகிய சட்டத்தரணியிடம் இதன் தாற்பரியத்தை வினவினேன். அவர் சொன்ன மறுமொழி என்னைத் தூக்கி வாரிப்போட்டது. "இப்படியானவை இருந்தால்தான் மச்சான் நாங்கள் பயறு அவிக்கலாம். அதற்கென்ன ஆசைக்கு இருந்துவிட்டுப் போகட்டுமே" என்றார். இவருக்கும் அந்த அறிவாளர் (வெங்காயச் சங்கமல்ல) சங்கத்தின் வளர்ச்சியில் எள்ளளவும் அக்கறையில்லை என்று தெரிந்துகொண்டேன். படித்த ஒரு பண்பாளன் என்னைச் சந்தித்து, "ஏன் தம்பி வேறு ஒருவரும் கிடைக்கவில்லையா? உந்தப் பதவிக்கு நான் பொருத்தமானவனா என்று எண்ணிப்பார்க்கும் அறிவு கூட அவருக்கு இல்லையா? அவரைப் பிரேரித்து ஆமோதித்தவர்களுக்குக் கூட அவரின் தராதரம் தெரியவில்லையா?" என்று மிகவும் கவலையாக வினவினார். நான் மௌனமானேன். ஓர் இலக்கியவாதி என்னைச் சந்தித்து, "அண்ணை உவன்ரை குணம் எல்லோருக்கும் தெரியும் தானே. அவன் வராவிட்டால் செத்துப் போவான்" என்று சொன்னதும் ஏங்கிப் போய்விட்டேன். தந்தை செல்வநாயகம் சொன்னமாதிரி கடவுள்தான் இந்த அறிவாளர் சங்கத்தைக் காப்பாற்ற வேண்டும். ஆண்டவனுக்குத்தான் பொறுக்குமா? அதனால் போலும் அறிவாளர் சங்கத்தைக் காப்பாற்ற ஒரு வாத்தியார் புதிய அவதாரம் எடுத்துள்ளார் என்று பரவலாகப் பேசிக்கொள்கிறார்கள். ✱



**எர்ஷாத்,**
**மஹரகம.**

**கேள்வி:** நல்ல கணவனாக இருக்க வழி...?

**பதில்:** கனவானாக இருத்தல்.

**குமரசிறி,**
**மடுல்சீமை.**



**கேள்வி:** வீதிகளில் பெண்களுக்குப் பின்னால் நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டு அலையும் பேய்களின் எண்ணிக்கை குறைந்து விட்டமை ஏனோ பித்தரே...!

**பதில்:** Cost of living உயர்ந்து விட்டதால் living ghost குறைந்துவிட்டது போலும்.

**வி.ராஜா,**
**வத்தளை.**

**கேள்வி:** என் தோழனே எனக்கு வில்லனாக மாறிவிடுவானோ என்று அச்சமாக இருக்கின்றது. என்ன செய்யலாம்?

**பதில்:** 'பனம் காயையும் பங்காளியையும் பதம்பார்த்து வெட்டவேண்டும்' என்பார்கள். தருணம் பார்த்து 'கட்' பண்ணி விடுங்கள்.

**குமார்,**
**வவுனியா.**

**கேள்வி:** சம்சாரம் - மின்சாரம் ஒப்பிடுக?



**பதில்:** ஆம் இரண்டுமே பிழையாகக் கையாண்டால் 'ஷொக்' அடிக்கும். ஒன்று ஒளி கொடுக்கும். மற்றையது வம்சாவளி கொடுக்கும்.

**கேள்வி:** கன்னி - கண்ணி. ஒப்பிடுக?

**பதில்:** இதுவும் அப்படியே. பிழையாகக் கையாண்டால் ஆள் 'அவுட்'!.

**கேள்வி:** கன்னி - கலண்டர். ஒப்பிடுக?

**பதில்:** காலம் கடந்தால் இரண்டின் மதிப்பும் குறைந்துவிடும்.



**நாகூர்ஜான்,**
**காத்தான்குடி.**



**கேள்வி:** என் காதலி என்னை மறந்து இன்னொருவனைக் கட்டிக்கொண்டு வெளிநாட்டுக்குக் கம்பிநீட்டி விட்டாளே...!


**பதில்:** அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது. மனதைத் தேற்றிக்கொள்ளும்.

**சாயா,**
**கொழும்பு.**

**கேள்வி:** எனக்குத் திருமணம் பேசுகிறார்கள். பட்டம் பெற்றவரா, பத்தாம் வகுப்புப் படித்தவரா பண்பில் உயர்ந்தவர்...?

**பதில்:** பட்டத்தால் வருவதல்ல பண்பு. பட்டதாரியாகிக் கெட்டவர்களும் இருக்கிறார்கள். பத்தாம் வகுப்பு வரை படித்த பண்பாளர்களும் இருக்கிறார்கள்.

**நீரஜா,**
**யாழ்ப்பாணம்.**



**கேள்வி:** ஹீரோ ஹொண்டாக்களில் அலைவோர் எல்லோரும் ஹீரோக்களா?

**பதில்:** பலர் ஸீரோக்கள். எமகண்டர்கள்.

**சிவஞானம்,**
**திருமலை.**

**கேள்வி:** மாமியும் மருமகளும் கிணற்றில் விழுந்தால் முதலில் யாரைத் தூக்குவது [illegible]தரே...?

**பதில்:** கேள்வியே தவறு. எங்காவது மாமியும் மருமகளும் ஒற்றுமையாக ஒன்று செல்வார்களா?

**சீலன்,**
**கட்டானை.**

**கேள்வி:** தன் மகனுக்கு மருமகள் மருந்துபோட்டுவிட்டாள் எனப் பக்கத்து வீட்டு மாமி திட்டிக்கொண்டிருக்கிறாளே...?

**பதில்:** அது மருந்து அல்ல. பல்சுவை விருந்து.

**நிருபன்,**
**காலி.**



**கேள்வி:** 'லவ்' பற்றி உங்கள் கருத்து என்னவோ....?

**பதில்:** காதல் கிளிகளுக்கு அதுஇலவு. கட்டி முடிந்தவர்களுக்கு அது இழவு.

**மிதுலா,**
**தென்னக்கும்புர.**

**கேள்வி:** எனக்கு மிதப்புப் பல். என்றாலும் என் பல் வைத்தியர் சீதனமின்றி என்னை மணக்கச் சம்மதித்து விட்டாரே...!

**பதில்:** 'பல்'லாண்டு வாழ்க!

**ஷாஜகான்,**
**ஏப்பாவெடி.**



**கேள்வி:** பக்கத்து வீட்டுக்கனி கண்ணைக் குத்துகிறது பித்தரே. தட்டிப் பறித்துச் சுவைக்கலாமா?

**பதில்:** கவனம். கனிக்குக் காவலாக மரத்தில் குளவிகள் இருக்கும். கொட்டிக் கலைக்கும்.

**சங்கர்,**
**கன்னியா.**

**கேள்வி:** ஆசை எப்போது ஆறும்?

**பதில்:** கட்டையில் ஏறும்போதும், நீறாகும் போதும் கூட ஆறுமோ தெரியவில்லை.

**சுந்தர்,**
**வவுனியா.**

**கேள்வி:** 'விரலுக்கு ஏற்ற வீக்கம்' என்கிறார்களே. அது என்ன...?

**பதில்:** 'உரலுக்கு ஏற்ற உலக்கை' என்பது தான்.

**மீனா,**
**விசுவமடு.**

**கேள்வி:** பித்தரே! வீட்டில் என் கணவருடன் சண்டை. இப்போது யுத்தநிறுத்தம் செய்ய விரும்புகிறேன். முதல் நடவடிக்கை என்னவோ...!



**பதில்:** முதலில் முத்த நிறுத்தத்தை வாபஸ் வாங்கும்.

**சஞ்சீவன்,**
**பாண்டிருப்பு.**

**கேள்வி:** பக்கத்துவீட்டுப் பாப்பாவும் இப்போது முத்தம் தர மறுக்கிறதே பித்தரே ஏன்?

**பதில்:** 'நித்தம் போனால் முத்தம் சலிக்கும்' என்பது இதைத்தானோ?

**ஜெகன்,**
**அநுராதபுரம்.**

**கேள்வி:** என் நண்பனுக்குப் பெண் பார்க்கிறார்கள். அவன் பெண்ணின் இலட்சணங்களை மட்டுமல்ல அவள் மூலம் கிடைக்கும் இலட்சங்களையும் பற்றியுமல்லவா சிந்திக்கிறான்...!

**பதில்:** இலட்சியவாதி போலும்!

**ரூபன்,**
**நீர்கொழும்பு.**



**கேள்வி:** பக்கத்து வீட்டுப்பேதையைக் கண்டால் எனக்குப் போதை வருகிறதே...?

**பதில்:** அது உமது பேதைமை.

**சிவம்,**
**தலவாக்கலை.**

**கேள்வி:** வாழ்வில் மேலிடம் யாருக்கு? கணவனுக்கா? மனைவிக்கா?

**பதில்:** ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும்; வண்டியும் ஒருநாள் ஓடத்தில் ஏறும்.

**முக்தார்,**
**பேருவளை.**

**கேள்வி:** கவலையே படாதவர்கள் யார்?

**பதில்:** ஞானியும் குழந்தையும். எல்லாம் தெரிந்ததால் ஞானிக்குக் கவலையில்லை. எதுவுமே தெரியாததால் குழந்தைக்குக் கவலையில்லை.



**என்.நீதன்,**
**தெஹிவளை.**

**கேள்வி:** பித்தரே! உங்கள் குடும்பம் ஒரு கோயிலா?

**பதில்:** ஆம்.மனைவி ஐந்து நேர அர்ச்சனை செய்கிறாள். நான் தவறாமல் அட்டாங்க நமஸ்காரம் செய்கிறேன். அப்படியானால் கோயில்தானே...!

**ரி.ராகுல்,**
**தலங்கம்.**



**கேள்வி:** ஆண்களை ஆடுகளுககு ஒப்பிடலாமோ...!

**பதில்:** ஏன் எங்கும் எந்நேரமும் மேய்ந்து கொண்டிருப்பதால் இந்த ஒப்பீடோ...!

**சுஜாதா,**
**இரத்தினபுரி.**

**கேள்வி:** தவறுக்கு யார் காரணம்? காதலனா? காதலியா?

**பதில்:** ஒரு கைதட்டி எங்கேனும் ஓசை வருமா...?

**ஹூஸைன்,**
**கிராண்ட்பாஸ்.**

**கேள்வி:** பிடிவாதம் பிடிக்கும் பெண் குடும்பத்துக்கு உதவுவாளா?

**பதில்:** 'பிடிவாதம் குலநாசம்!'

**அரவிந்த்,**
**மாத்தளை.**

**கேள்வி:** என்ன பித்தரே! உமக்கு வைப்பாட்டிதான் இல்லாளாமே...! உண்மையா?

**பதில்:** உண்மைதான். எனக்கு இல்லாத ஆள் வைப்பாட்டிதான்! அதைத்தான் நான் இன்னும் - என்றும் - வைத்துக்கொள்ளவில்லை.

**அன்வர்,**
**சாய்ந்தமருது.**

**கேள்வி:** வயது வந்த மகளைப் பற்றிக் கவலைப்படும் பெற்றோர், வயது வந்த மகன் குறித்து அலட்டிக்கொள்வதில்லையே ஏன்...?

**பதில்:** ஏரால் உழுதால் அடையாளம் நிலத்தில்தான். ஏரில் இல்லை என்பதால்.

---

## பி.ஜே.பியுடன் ...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாஜ்பாய்க்கும் இனிவரப்போகும் பிரதமர் அத்வானிக்கும் இடையே ஒருவேறுபாடு உள்ளது. வாஜ்பாய் ஜெயலலிதாவை வெறுத்த ஒரு தலைவராவார். மாறாக அத்வானி அம்மாவின் நெருங்கிய நண்பர். எனவே, அத்வானி எப்படியாவது அம்மாவை வளைதது்ப் பிடித்துவிடுவார் என்று பி.ஜே.பியினர் நம்புகிறார்கள். பி.ஜே.பியைப் பொறுத்தவரை அம்மாவின் உறவு இல்லாவிடிலும் தேசிய அளவில் எப்படியும் வெல்லும் வாய்ப்பு உள்ளது. ஆனால், தமிழகத்தில் கணிசமான இடங்களை வெல்லவேண்டும் எனில், அம்மாவின் தயவுவேண்டும். அம்மா பி.ஜே.பியுடன் கூட்டணியை இன்னும் அறிவிக்காது இருக்க மற்றொரு காரணம் மூன்றாவது அணி பற்றிய கனவாகும். பி.ஜே.பியும் அல்லாத காங்கிரஸும் அல்லாத மூன்றாவது அணி அமைப்போம் என கம்யூனிஸ்ட்கள் கோஷம் எழுப்பி வருகிறார்கள். அந்த அணியில் இணைந்தாலென்ன என்ற நப்பாசையும் அம்மாவிடம் துளிர்விட்டுள்ளது. அப்படி தேசிய அளவிலும் மாநில அளவிலும் 3ஆவது அணி அமைப்பதாயின், அதற்குள் பா.ம.க., ம.தி.மு.க. ஆகிய கட்சிகளையும் சேர்த்துக்கொள்ள அம்மா விரும்புகிறார். ஆனால், பி.ஜே.பி. - அ.தி.மு.க. இரண்டும் கொண்ட அணியில் சேரவே பா.ம.க விரும்புகிறது. இரண்டு தரப்பையும் சேர்த்துவைக்கும் மத்தியஸ்தராக இருக்கவும் பா.ம.க. தயார்.

பா.ம.க.வைப் பொறுத்தவரை மத்தியில் பி.ஜே.பி. ஆட்சியைப் பிடிக்கும் என்பதால் மத்திய அரசில் அமைச்சுப் பதவிகளை பெற அது துடியாய் துடிக்கிறது. ஏற்கனவே, ராமதாஸின் மகன் அன்புமணி காங்கிரஸ் அரசில் சுகாதார அமைச்சராக உள்ளார். பி.ஜே.பி. ஆட்சியிலும் அதே பதவியில் அவர் தொடரவேண்டும் என்பது ராமதாஸின் பிரதான நிபந்தனை. எனவே, 3 ஆவது அணியில் சேர பா.ம.க. தயாரில்லை. 3ஆவது அணியால் ஆட்சியைப் பிடிக்கமுடியாது என்பது ராமதாஸுக்கு தெளிவாகத் தெரியும். பி.ஜே.பி. அணியிலோ காங்கிரஸ் அணியிலோ உள்ள கட்டுக்கோப்பு 3ஆவது அணியில் இருக்காது என்பதும் தெரிந்த விஷயம். காரணம் காங்கிரஸ், பி.ஜே.பி. போல அங்கு பிரதான தலைமைக்கட்சி ஒன்று கிடையாது. பிரதான பாத்திரம் வகிக்கும் திறமை கம்யூனிஸ்ட் கட்சிக்கு இல்லை. 3ஆவது அணியில் உள்ளவை பெரும்பாலும் மாநிலக்கட்சிகளே. இவற்றின் தலைவர்கள் ஒவ்வொரு[illegible]ரும் தாமே 3ஆவது அணியின் பிரதம வேட்பாளர் என்று கூறிக்கொள்கின்றனர். சமீபத்தில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் உத்தரப் பிரதேச முதல்வர் மாயாவதியுடன் கரம்கோத்துக்கொண்ட இடதுசாரிகள் அவரைப் பிரதமராக்குவோம் என்று கூறியிருந்தனர். இது ஜெயலலிதாவுக்கு ஏற்கத் தகுந்த விஷயமல்ல. ஜெயலலிதா ஏற்கனவே பிரதமர் கனவில் மிதந்துவருகிறார். அவர் 60 வயதைத் தாண்டிவிட்டார். அப்படியிருக்க 50 வயதே ஆன மாயாவதியை பிரதமராக்குவோம் என திடீரென கம்யூனிஸ்ட்கள் சொல்வதை அம்மாவால் ஏற்கமுடியாதுள்ளது. மாயாவதிக்கு முன்பே ஜெயலலிதா பிரதமர் பதவிக்கான போட்டியில் இறங்கிவிட்டார். எனவே, அ.தி.மு.க. 3ஆவது அணியில் இடம்பெற்றால் மாயாவதி பிரதமர் வேட்பாளர் என்பதை அம்மா அங்கீகரிப்பாரா என்பது கேள்வியே. உண்மையில் 3ஆவது அணியின் பிரதமர் வேட்பாளர் பிரதமராக வாய்ப்பு மிகக்குறைவே. இப்படி இருக்க கிடைக்காத பிரதமர் பதவிக்காக மாயாவதியும் ஜெயலலிதாவும் திரைமறைவில் மோதிவருகின்றனர்.

ஒருவேளை பி.ஜே.பியானது அம்மாவின் நியந்தனைக்கு இணங்காவிட்டால் அவர் 3ஆவது அணியில் சேரக்கூடும். அப்போது பா.ம.கவும், ம.தி.மு.கவும் அவருடன் வராமல் பி.ஜே.பியுடன் செல்லவே வாய்ப்புண்டு. அப்படி நடந்தால் விஜயகாந்தை 3ஆவது அணியில் சேர்க்க அம்மா விரும்புவதாக தெரிகிறது. பா.ம.க. உள்ள அணியில் விஜயகாந்த் சேரமாட்டார் என்பது தெரிந்ததே. நிலைமை இவ்வாறு இருப்பதால் கூட்டணி பற்றி இப்போதைக்கு எதுவும் சொல்லமுடியாது எனக்கூறி ஜெயலலிதா காலம் கடத்தி வருகிறார். பேரம்பேசலில் உச்சக்கட்ட பலனை அவர் எதிர்பார்த்து காய்நகர்த்துவது தெளிவாகியுள்ளது. பி.ஜே.பி. உடனடியாக கூட்டணி அமைப்பதற்கு அம்மாவின் சமிக்ஞையை எதிர்பார்த்து காத்துள்ளது.

விஜயகாந்தும் அம்மா போலவே கூட்டணி பற்றி தீர்க்கமாக எதுவும் கூறமறுத்து வருகிறார். பி.ஜே.பியானது இவருடன் கூட்டணி வைக்க விரும்பியது. ஆனால், தேர்தல் செலவாக பெருந்தொகை பணத்தை கேட்டதாக கூறப்படுகிறது. காங்கிரஸும் விஜயகாந்தை வலைவீசிப்பிடிக்க முயன்றுவருகின்றது. ஆனால், விஜயகாந்த் - தி.மு.க. மோதல் இதற்குத் தடையாகவுள்ளது. தி.மு.க., அ.தி.மு.க., கம்யூனிஸ்ட், பா.ம.க. எனப் பல தரப்பினரையும் விஜயகாந்த் கண்டித்து பேசுவதால் அவருடன் கூட்டணி வைத்துக் கொள்வதற்கு பி.ஜே.பிக்கோ காங்கிரஸுக்கோ இயலாதுள்ளது. தமிழக அரசியலில் காங்கிரஸும் பி.ஜே.பியும் ஓர் அணியில் சேராது; தி.மு.கவும் அ.தி.மு.கவும் ஓர் அணியில் இணையாது. மற்றப்படி எந்தக் கட்சியும் எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைத்துக்கொள்ளும். பதவி சுகமே ஒரே குறியாகும். ஆனால், விதிவிலக்காக விஜயகாந்த் மட்டும் இன்னும் தான் வசைபாடிய எந்த ஒரு கட்சியுடனும் அணி சேரவில்லை. இதே தனித்துவத்தை அவர் அடுத்த லோக்சபா தேர்தலிலும் கடைப்பிடிப்பாரா அல்லது கொள்கையை காற்றில் பறக்கவிடும் பழக்கத்துக்கு அவரும் இரையாவாரா என்பது இன்னும் சிலமாதங்களில் தெரிந்துவிடும்.




## முன்கதைச் சுருக்கம்

சிக்காக்கோ நகரின் ஒதுக்குப் புறமான ஓரிடத்தில் நியூமூன் வைத்தியசாலை அமைந்திருக்கிறது. கொஞ்சம் தொலைவில் நர்சுகளின் விடுதி இருக்கிறது. மர்ம மனிதனொருவன் நள்ளிரவில் இந்த விடுதிக்குள் நுழைகிறான். பல திகில் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. நர்சுகள் உட்பட ஒரு ரோந்து பொலிஸ்காரன், பிரதேச பொலிஸ் அதிகாரி எனப் பலர் அவனால் கொலை செய்யப்படுகின்றனர்.

ஏன்? என்ன காரணம்?

சிறைச்சாலை அதிகாரியின் அழகிய இளம் மனைவியுடன் றோபோ என அழைக்கப்படும் மர்மமனிதன் உறவுகொள்வதை அதிகாரி கண்டுவிடுகிறான். ஆத்திரமடைந்த அவன் ரகசியமாக தன் மனைவியை கொன்று விடுகிறான். பிணத்தை பெட்டியில் அடைத்து சிறைக்கைதியான றோபோவையே கொண்டுசெல்ல வைக்கிறான். குற்றத்தை றோபோ மீதே சுமத்த வைக்கிறான். பொலிஸாரினால் கடுமையாகத் தாக்கப்பட்ட றோபோ வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்படுகிறான்.

அங்கே என்ன நடைபெறுகின்றது...? இனி...

அமுராவின் கண்கள் -

கதவின் சாவித்துவாரம் வழியாக அறைக்குள் ஊடுருவின.

அங்கே -

திருமதி கிளின்டன் கட்டிலில் கிடந்தாள். கண்களை மூடி ஆழ்ந்த நித்திரையில் கிடந்த அவள் உடலில் சிறு துண்டேனும் இல்லை.

அவளுடைய கால்களுக்கிடையே, பருப்பமான தொடைப் பாகங்களின் ஊடாக தலை உயர்த்தி நிமிர்ந்து நின்று கொண்டிருந்த அந்த விஷ சர்ப்பம் 'சளு சளு'வென நாவை நீட்டுவதும், இரு ஈட்டிகளாக கண்களை நிலைக்குத்தாக்கி அவள் முகத்தை 'உர்ர்'ரென வெறித்தவாறே தலையை முன்னும் பின்னும் அசைத்துக் கொண்டிருக்கிறது.

கிளின்டனும், டாக்டர் வில்லியமும் இந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந் தார்கள். இந்த கிளின்டன் எத்தகையதொரு கீழ்த்தரமானதொரு ஜந்து. அங்கே படுக்கையில் கிடப்பது அவன் மனைவி என்று நினைத்துப் பார்க்கும் மனவுணர்வு இந்த கீழ்ச்சாதி மிருகத்திற்கு துளிக்கூட இருப்பதாகத் தெரியவில்லை.

டாக்டராகவிருந்தாலும், அந்த சலன புத்தி படைத்த, பணத்தாசைப் பிடித்த டாக்டர் வில்லியம் வாயில் எச்சில் ஒழுக அவ்வுடலையும், அந்த நடுங்கச் செய்யும் காட்சியையும் இரசித்துக்கொண்டிருந்தார்.

அமுராவின் கண்ணிமைகள் அசையவில்லை. கண்மணிகளில் திகிலின் சிறகுகள் படபடத்தன.

'ஜீசஸ்!' என்று அவள் மனம் கதறியது.

அறைக்குள் -

பாம்பு -

சட்'டென அடிவயிற்றில் கொத்தியது. சதையை பிடுங்கியது. இழுத்தது.

'ஜீசஸ்!'

அமுரா வாய்விட்டுக் கத்தினாள். தலை கிர்ர்'ரென சுழல நினைவிழந்து விழுந்து விட்டாள்.

இதையொன்றும் அறியாது ஏதோ யோசனையில் ஆழ்ந்துவிட்டிருந்த ஜீனா திகிலடைந்தாள். பரபரப்புடன் அமுராவின் அருகில் அமர்ந்து 'என்னடி? என்னடி?' என்று கத்தினாள். அவள் பற்கள் இறுகி மயக்கநிலை. உடனே சாவித் துவாரத்தின் வழியாக கண்களைப் பதித்து என்னதான் அறைக்குள் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது என்பதை பார்க்கவேண்டும் என்று நினைக்காத அவள் 'இதென்ன இவளுக்கு நடந்துவிட்டது?' என்பதை அவதானிப்பது என்பதிலே கவனம் செலுத்த வாரம்பித்தாள்.

நல்ல காலம்! கையில் நீர் போத்தல் இருந்தது. அதைத் திறந்து 'சளசள'வென முகத்தில் தெளித் தாள். கண்விழித்த அமுரா, மலங்க மலங்க அவளை பார்த்துக்கொண்டே எழுந்து உட்கார்ந் தாள்.

''என்னடி? ஏன் இப்படி திடுதிப் புன்னு மயங்கி விழுந்துட்டே. உண்டாகியிருக்கியா''- எனக் கிண்டலாகக் கேட்டாள்.

''உம்ஹூம்! ஊரு எரியகுள்ளே நீரோ மன்னன் பிடில் வாசிச்சா னாம். அப்படி இருக்கு உன் கேள்வி. சாவித்துவாரம் வழியாக பார்க்கல்லியா? அப்ப பாரு. உண்டாகப் போவுதா? இல்லே ரெண்டாகப் போவுதான்னு?'' அமுரா படபடப்புடன் சொன்னாள்.

என்ன சொல்றாள்? அப்படி என்னதான் அதிசயம் நடக்குதுன்னு' முணுமுணுத்துக் கொண்டு ஜீனாவும் சாவிதுவாரத்தில் கண்ணைப் பதித்தாள். பார்வை உள்ளே ஊடுருவியது.


அங்கே!

அனைத்தும் முடிந்துவிட்டிருந்தன. பாம்பையும் காணவில்லை. ஒன்றையும் காணவில்லை.

படுக்கையில் -

திருமதி கிளின்டனின் சடலம் போர்த்தப்பட்ட நிலையில் கிடந்தது. கிளின்டனும் டாக்டர் வில்லியமும் வைன் அருந்திக் கொண்டிருந்தார்கள்.

ஜீனா களுக்'கென சிரித்தாள். ''என்னடி இதைப் பார்த்தா மயங்கி விழுந்தாய்? இதென்ன நமக்கு புதுசா? இந்த ரெண்டுபேரும் அப்படித்தானே. ஏதாவது ஒபரேஷன் கிபரெஷன்னு நடுச்சாமமுன்னு




செய்வாங்க. அப்புறம் ஒன்னா இருந்து வைன் அடிப்பாங்க. இதை எத்தினையோ முறை பார்த்திட்டோமே இதுக்குப்போய்...?' கிண்டலாகச் சொன்ன அவள் தலையிலடித்துக் கொண்டாள்.

அவளையே கண்களை அசைக்காமல் பார்த்த அமுரா, ஜீனா சொன்னது காதில் விழுந்ததும் வாரிசுருட்டிக்கொண்டு எழுந் தாள். ஒரே எட்டில் தாவிச்சென்று கதவில் கண் பதித்து உள்ளே பார்த்தாள்.

கிளின்டனும் டாக்டர் வில்லியமும் சிரித்து பேசியபடி வைன் அருந்திக் கொண்டிருந் தார்கள். திருமதி கிளின்டன் தலையிலிருந்து கால்வரை போர்த்தப்பட்ட நிலையில் கட்டிலில் கிடந்தாள்.

திருமதி கிளின்டன் பரலோகம் அனுப்பப் பட்டுவிட்டாள் என்பதை உணர அமுரா விற்கு வெகுநேரம் செல்லவில்லை.

'கொலைகார பாவிகள்!' என்று அவள் உதடுகள் முணுமுணுத்துக்கொண்டன.



''யாரைடி சொல்கிறாய்?''

ஜீனா கேட்டாள்.

''அவர்கள்தான். பாம்பு கடித்துவிட்டதாகச் சொல்லி திருமதி கிளின்டனை கொண்டு வந்ததெல்லாம் வெறும் நாடகம். அந்த அம்மாவை ஸ்லீபிங் டப்லெட் கொடுத்து தூங்கப் பண்ணி இங்கே கொண்டு வந்தார்கள். இங்கே கொண்டுவந்ததன் பின்னர்தான் அந்த கொடூரமான பாம்பை அவள் உடலில் கொத்த வைத்தார்கள்.''

அமுராவின் குரல் இரகசியமாக ஒலித்தது.

''என்னது?''

''உம், பொய் இல்லை. நான் உளறவில்லை. இந்த சாவித்துவாரத்தின் வழியாக பார்த்த போது என் கண்களால் கண்டேன். அந்தப் பெண்மணியை நிர்வாணமாக படுக்கையில் கிடத்தி அவருடைய மர்ம உறுப்புலே பாம்பை கொண்டு கொத்திவிக்கச் செய்தார்கள்.''

''ஆ!''

''ஆமாம் ஜீனா! இந்த நீசமனிதர்கள் பணத்திற்காக எதையும் செய்வார்கள்.''

''என்ன சொல்கிறாய் நீ?''

''ஆமாம் ஜீனா. பாவம் திருமதி கிளின்டன். சுயமாகவே சம்பாரித்து ரெஸ்டோரண்ட் நடத்தி பணக்காரி ஆனவள். கிளின்டன் எப்படியோ அவளை வளைத்துப் போட்டுக் கொண்டான். அநேகமாக அவளுடைய சொத்தையெல்லாம் இப்போது தனக்குரியதாக்கிக் கொண்டிருப்பான். வேறு யாராவது ஒரு சீமாட்டியை சொந்தமாக்கிக் கொள்ள இந்த அம்மாவை தந்திரமாக முடித்துவிட்டான்.''

ஜீனா வாயை திறந்து கேட்டுக்கொண்டிருந்தாள்.

அப்போது -

கதவு திறந்தது.

''என்னடி கண்மணிகளே, என்னதான் அப்படி தலைபோகிற பேச்சு வேண்டிக்கிடக்கு? பாவம் திருமதி கிளின்டன். உங்களுடைய முதல் சிகிச்சைக்காக காத்துக்கொண்டிருக்க பொறுமையில்லாமல் அந்த அம்மா போய் சேர்ந்துவிட்டாள். உங்களை எல்லாம் வைத்துக்கொண்டு வைத்தியத்தொழில் செய்வது எப்படி என்றுதான் புரியவில்லை? சரி சரி. உள்ளே வாருங்கள். செய்யவேண்டியவற்றை யாவது செய்வோம்.''

'டாக்டர் நல்ல நடிகன். மார்லன் பிராண்டாவோவையும் மிஞ்சிவிடுவான் போலிருக்கிறது. வெறுப்பு, விரக்தி அனைத்தையும் ஒன்றாக இணைத்து குரலில் அவையெல்லாம் பொருத்தி பேசுகிறான்.' என்று மனதிற்குள் புறுபுறுத்துக்கொண்டே அறைக்குள் அமுரா நுழைந்தாள். ஜீனாவும் அவளை தொடர்ந்தாள். திடீரென ஜீனா வீலென அலறுவது கேட்டது. திடுக்கிட்டு திரும்பிய அமுரா ஜீனாவின் காலருகில் அந்த பாம்பு நெளிந்து வளைந்து செல்வதைக் கண்டாள்.

(தொடரும்)

## மூச்சிலே வந்த ஓசையா?

இமை விரிந்தது! விழி மலர்ந்தது!
இதய வாசலும் திறந்தது.
தமை மறந்தனர் தனிமை யேகினர்
தாமரைக் குள மடைந்தனர்.
அமைதி யாகவே இயற்கை யென்பவள்
ஆடினா ளிசை பாடினாள்.
இவை நடந்தது யார றிந்தனர்
இனிமையே யங்கு தனிமையே!

முகை யவிழ்ந்தது! மலர் மணந்தது!
முழுநிலா மெல்லத் தவழ்ந்தது!
சிகை யவிழ்ந்தது! சேர்த் தெடுத்தனன்!
சிறுசிறு ஓசை செய்தனன்
நகை யவிழ்ந்தது! கொடி வளைந்தது!
நாணமே யுடை யானது
பகை யிறந்தது! பழம் கனிந்தது!
பருகினா ரிருவர் பருகினார்.

விழி சிவந்தது விரல் நலிந்தது
விலகினா ளவள் விலகினாள்.
மொழி பிறந்தது இதழ் திறந்தது
முத்தமிழ் என ஆனது.

துளி ரசைந் தது! தோள் நெளிந்தது!
தேன் துளிர்த்தது வாயிடை
பழி கிடந்தது பருவ மென்பது!
பருகினார் விழி நாள்கினால்!

இடை துவண்டது! திர் விழுந்தது!
ஏந்தினா னவன் ஏந்தினான்.
படை விழுந்தது! பல மிழந்தது!
பதுமையா யவள் பாவையாய்,
தடை கடந்தனள்! தனை மறந்தனள்!
தன்னையே யவள் தந்தனள்.
விடை கொடுத்தனள்! நடை பயின்றனள்!
வாலிபன் அவன் மார்பிலே!

முக மலர்ந்தது! அக மகிழ்ந்தது!
மங்கையவள் மது வாகினாள்.
முத் தெடுத்தனர்! சரம் தொடுத்தனர்!
முத்தமிழ் தனைக் கற்றனர்.
பித்தராகினர்! பிள்ளை யாகினர்!
பேச்சையே அவர் மறந்தனர்.
முத்தமா யிமைச் சத்தமா அது?
மூச்சிலே வந்த ஓசையா?

- ஈழத்து இரத்தினம் -




# குதிரை தோஷம் நீங்கியது

குருவும் சீடர்களும் அன்று மாலையில் மங்கலம்பட்டி என்ற கிராமத்திற்கு வந்தனர். "இருட்டிவிடும். இனி இரவில் பிரயாணம் செய்ய முடியாது. இந்த ஊரிலேயே தங்கி விட்டுக் காலையில் எழுந்து போவோம்." என்று குரு சொன்னவுடன் சீடர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். கிராமச் சாவடியில் சென்று படுத்துக்கொண்டார்கள். குதிரையை அவர்கள் கட்டி வைக்கவில்லை. நடந்து வந்த களைப்பால் குதிரை படுத்துவிட்டது.

விடிந்ததும் குதிரையைத் தேடினார்கள். அதைக் காணவில்லை. தேடிக்கொண்டே வந்த மடையன் ஒரு வீட்டின் முன் குதிரை கட்டிக் கிடப்பதைக் கண்டு பெருமகிழ்ச்சியடைந்தான். வீட்டு வாசலில் ஒருவர் பல் தேய்த்தபடி நின்றுக்கொண்டிருந்தார். அவர் முன் ஓடிய மடையன்:

"ஐயா பெரியவரே, நீங்களா இந்தக் குதிரையைக் கட்டிப்போட்டீர்கள்?

"ஆம். நான்தான்."

"மிக்க நன்றி ஐயா, காலையிலிருந்து இதைத் தேடி காலெல்லாம் ஓய்ந்துவிட்டது." என்றவாறே அதை அவிழ்க்கப் போனான்.

"தம்பி, இது உங்கள் குதிரையா?"

"ஆம், எங்கள் குதிரைதான்."

"அப்படியென்றால் பத்துப் பணத்தை எடுத்து வைத்துவிட்டு குதிரையை அவிழ்த்துக் கொண்டு போ."

"குதிரையைக் கட்டிப்போட்டதற்குப் பத்துப் பணமா?"

"இல்லையப்பனே, என் தோட்டப் பயிர்களை எல்லாம் நாசம் செய்து விட்டது.

"வாயில்லா ஜீவன். அதிகம் பசித்திருக்கிறது. அதனால்தான் அப்படிப் பண்ணிவிட்டது. இதைப் பெரிதுபடுத்த வேண்டாம். குதிரையை விட்டுவிடுங்கள். நாங்கள் வெளியூர் போக வேண்டும் எங்கள் குரு காத்துக்கொண்டிருப்பார்."

"நீ என்ன சொன்னாலும் விடமாட்டேன். பயிர் அழிவுக்கு நஷ்டஈடாகப் பத்துப் பணம் கட்டாவிட்டால் குதிரையை விடமாட்டேன்."

"யாராக இருந்தாலும் சரி, பணம் தரமுடியாது."

"இதோ ஒரு நொடியில் எங்கள் ஆட்களுடன் வருகிறேன் பார்."

"அந்த மிரட்டல்களுக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன். அதற்கு வேறு ஆளைப் பார்த்துக் கொள்."

மடையன் குருவிடம் சென்று முறையிட்டான்.

அதைக்கேட்ட குரு "உள்ளூர்க்காரனிடம் நாம் சென்று சண்டையிடக் கூடாது" என்று சொல்லிவிட்டு அந்த ஊர் நாட்டாண்மைக்காரனின் வீட்டைத் தேடிச் சென்றார். சீடர்களும் அவர் பின்னாலேயே சென்றனர்.

நாட்டாண்மைக்காரனிடம் விவரத்தைக் கூறினார் குரு.

நாட்டாண்மைக்காரன் குதிரையைக் கட்டியவனைக் கூட்டி வரும்படி கட்டளையிட்டான். அவன் வந்தான்.

"குருசாமி, இவர்கள் குதிரையை ஏன் கட்டி வைத்திருக்கிறாய்?"

"ஐயா, இந்த அநியாயத்தை எப்படி கூறுவேன்? நான் பாதுகாத்து வளர்த்த பயிரையெல்லாம் இந்த குதிரை இரவு முழுவதும் மேய்ந்து நாசப்படுத்திவிட்டது. நீங்களே வந்து பாருங்கள். என் வயிறு பற்றி எரிகிறது."

"ஐயா நாட்டாண்மைக்காரரே, அந்தக் குதிரை எங்களுக்கு வேண்டிய ஒருவர் தானமாகத் தந்தது. அது வந்ததிலிருந்தே எங்களுக்குச் செலவு அதிகம். இந்த ஒரு தடவை மன்னித்து குதிரையை அவிழ்த்துவிடும்படி கூறுங்கள்."

"தவற்றுக்கு தண்டனை உண்டு. இன்று இவருக்கு நான் நஷ்டஈடு வழங்கும்படி சொல்லாவிட்டால், நாளை எவருக்கும் சொல்ல முடியாது. வாருங்கள். தோட்டத்துக்குச் சென்று பார்ப்போம்."

நாட்டாண்மைக்காரர் குதிரையைக் கட்டியவருடைய தோட்டத்தைச் சென்று பார்த்தார். அவர் சொல்லியபடி தோட்டம் நாசமாகியிருந்தது.

"ஐயா பரமார்த்த குருவே, இதற்கு உண்மையில் நஷ்டக்கணக்குப் போட்டுப் பார்த்தால் பத்துப் பணத்திற்கு மேல் வரும். நீங்கள் வெளியூர்க்காரர்கள் என்பதால் எட்டுப் பணத்தைக் கொடுத்து விட்டு குதிரையை அவிழ்த்துச் செல்லுங்கள்." - என்றார்.

மறுத்துப் பேசினால் வம்பு வரும் என்று நினைத்த பரமார்த்தகுரு வாய்ப்பேசாமல் வேட்டியில் முடிந்து வைத்திருந்த பணத்திலிருந்து எட்டுப் பணத்தை எடுத்துக் கொடுத்து விட்டு நடையைக் கட்டினர்.

இப்போது பரமார்த்த குரு குதிரையில் வீற்றிருக்க சிஷ்யர்கள் அவரைப் புடை சூழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் குதிரையை ஏசத் தொடங்கினார்கள்.

"ஏய் அறிவில்லாத முண்டமே! இன்னொருத்தன் தோட்டத்தில் போய் பயிரை மேயலாமா?"

"மேய்ந்தது சரி. அவன் கிட்ட வரும்போது எட்டி உதைக்க வேண்டியதுதானே?"

"அட, எட்டி உதைக்க வேண்டாம்பா. பிடி கொடுக்காமல் ஓடி வந்துவிட வேண்டியதுதானே?"

"புல்லும் கொள்ளும் போட்டோமே? பின் ஏன் உனக்கு இந்தத் திருட்டுப் புத்தி?"

"இந்நாட்டிற்கும் நமக்கும் ஞானத்தை வழங்கும் அதிவிவேக பரமார்த்த குருவின் வாகனம் என்று உன்னைச் சொல்லிக்கொள்வதில் வெட்கம் அடைகிறோம்."

இப்படி ஆளுக்கு ஆள் குதிரையைத் திட்டிக் கொண்டு வந்ததைக் குடுகுடுப்பைக்காரன் ஒருவன் அவர்கள் பின்னால் கேட்டுக் கொண்டு வந்தான்.

'இவர்கள் சரியான ஏமாளிகள் மட்டுமல்ல. முட்டாள்களாகவும் இருப்பார்கள் போலும்' என்று மனதில் கணக்கு போட்ட அவன், "ஐயா, ஐயா! கொஞ்சம் குதிரையை நிறுத்துங்கள்" என்றான். குரல் கேட்ட அவர்கள் குதிரையை நிறுத்தினார்கள்.

அவன் குதிரையைத் தட்டிப் பார்த்தான். முகர்ந்து பார்த்தான்.

பின், "ஐயா பெரியவர்களே! குதிரையைப் பற்றி ஒன்று சொன்னால் கோபித்துக்கொள்ள மாட்டீர்களே?"

"ஒண்ணு என்ன? ஒன்பது சொன்னாலும் கோபித்துக் கொள்ள மாட்டோம்."

"இந்தக் குதிரைக்கு தோஷம் பிடித்திருக்கிறது."

"ஜலதோஷமா? ஒருதரம் கூடத் தும்மவில்லையே?" என்றான் முட்டாள்.

"போடா மண்டு. செவ்வாய் தோஷமா இருக்கும்." என்றான் மிலேச்சன்.

"சும்மா இருங்கடா முந்திரிக் கொட்டைகளா, அவர் சொல்லட்டும்" என்றார் குரு.

அவன் தன் குடுகுடுப்பையை எடுத்து ஜோராக அடித்து ராகம் போட்டுப் பாடி, "காளி, கருப்பா, காத்தவராயா, கறுவாயா, சக்கம்மா, சண்டாளி, சாமுண்டீஸ்வரி, சுடுகாட்டு மூளி" என்று இருக்கும் சாமிகளையும், இல்லாத சாமிகளையும் கூவி அழைத்து,

"குரு சீக்கிரம் செத்துப்போவார்" என்று பட்டென்று சொன்னான். சீடர்கள் குய்யோ முறையோவென்று அழ ஆரம்பித்தார்கள்.

"குறையும் கேளுங்கள் சிஷ்யகோடிகளே, இந்த தோஷம் உள்ள குதிரையில் தொடர்ந்து சவாரி செய்தால் உயிருக்கு ஆபத்து இருக்கிறது. சக்கம்மா உதவியால் ஆபத்தை நீக்கித் தாரேன்."

"சரி சரி, நீக்கிவிடுங்க."

"தட்சணை வைக்காட்டி மந்திரம் பலிக்காதுப்பா."

"தட்சணை எவ்வளவு?"

"பத்துப் பணம்."

"அடேயப்பா, பத்துப் பணமா?"

"அந்த பணத்துக்கும் பண்ணலாம். பாதி ஆபத்துதான் போகும்."

"அப்படியின்னா?"

"உயிர் போகாது. கால், கை முடமாகும்."


"ஐயய்யோ வேண்டாம். முழு ஆபத்தையும் விலக்கிடு. இந்தா பிடி பத்துப் பணம்."

"ஐயா! குதிரையைப் பிடித்திருந்த ஏழரை நாட்டுச் சனியில் பாதி மூணே முக்கால் சனி ஒரு காதை மூளியாக்கிவிட்டதால் போய்விட்டது. மீதி மூணே முக்கால் இந்தக் காதில் இருக்கிறது. இதையும் மூளியாக்கினால்தான் அந்தச் சனியும் போகும்."

"சொல்லாதே, செய்."

தன் பையிலிருந்த மடக்குக் கத்தியை எடுத்து குதிரையின் காதை சொரக், சொரக்கென்று வெட்டினான். குதிரை கத்தியது. வெட்டிய காதை எடுத்து மண் மேட்டில் புதைத்து அங்கே ஒரு கல்லையும் ஞாபகச் சின்மாக நாட்டி விட்டு, குருவும் சிஷ்யர்களும் 'இனி பயமில்லை' என்று எண்ணியபடி பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

(தொடரும்)



## அழகாக நிறம் தீட்டுங்கள் 62



தம்பி, தங்கைகளே! அருகே உள்ள படத்துக்கு அழகாக நிறம் தீட்டி எமது முகவரிக்கு அனுப்பி வையுங்கள். மிகச் சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்டு தெரிவுசெய்யப்படும் படம், உங்கள் பெயர், தரம், பாடசாலை போன்ற விவரங்களுடன் பிரசுரமாகும். எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த முறையில் நிறம் தீட்டப்பட்ட படம்

அழகாக நிறம் தீட்டுங்கள் 59




ஆர்.எம். விநோத், தரம் - 03, சென் தோமஸ் கல்லூரி, கல்கிசை.


### பாராட்டுப் பெறுவோர்...

1. எஸ்.எம். மெறின் அர்வினா, தரம் - 3 சி, வ/இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்.
2. ஜி.அஸ்காபானு, தரம் - 5 சி கொ/ கைரியா முஸ்லிம் மகளிர் வித்தியாலயம், கொழும்பு - 09.
3. எம். சுபேக்தாஸ், 111/19, விவேகானந்தா மேடு, கொழும்பு - 13.
4. றஹ்மதுன் நஜ்லா, களு - ஜீலான் நவோதய கல்லூரி, ஹேனமுல்ல, பாணந்துறை.


# சிறுவர் கைவண்ணம்



வை. சஜீவன், மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.



ஜி. பத்மேஸ்வரன், கிளி/ வட்டக்கச்சி மகா வித்தியாலயம்.



ம. ரெஜிசியா, கிளி/[illegible] மகா வித்தியாலயம்.



கிஷோர், இஸ்லிங்டன் சர்வதேசக் கல்லூரி, வெள்ளவத்தை, கொழும்பு - 06.


# போர்க்கள அமைதியில் கச்சதீவு!



**தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மீனவர்களுடன் குமுதம் சஞ்சிகையில் செய்தியாளர்கள் சிலர் மீனவர் வேடத்தில் சமீபத்தில் கச்சதீவு சென்று திரும்பினர். அவர்களது பார்வையில் கச்சதீவு இப்பொழுது எப்படி இருக்கிறது என்பதை இச் சிறுகட்டுரை விளங்குகிறது.**

தூரத்தில் இருந்து பார்த்தபொழுது 'ஆற்றில் குளிக்கும்போது அவிழ்ந்து போன பச்சைநிறக் கோவணம் மிதப்பது மாதிரி' தெரிந்தது கச்சத் தீவு. படகை ஒதுக்கி, தீவின் கரையில் காலடி வைத்ததுமே பயமெல்லாம் பறந்துபோக, இழந்த ஒரு தேசத்தை மீட்டெடுத்த உற்சாகம்...

தீவின் மொத்தப் பரப்பளவே சுமார் முந்நூறு ஏக்கர்தான்... இன்று தமிழ்நாட்டில் பல அரசியல்வாதிகளுக்கு இதைவிட சொத்து பலமடங்கு அதிகமாக இருக்கலாம்... தீவு முழுக்க சின்னச் சின்ன மரங்கள், முட்புதர்கள், பனை மரங்கள்...இப்படித்தான். கட்டடம் என்று சொல்ல ஒரேயொரு தேவாலயம்... புனித அந்தோனியார் ஆலயம். நாற்பதுக்கு



இருபது அளவில் ஒரு ஓட்டுக்கட்டடம் தான். கண்ணாம்பு காரை பெயர்ந்த நிலையிலும் அந்தக் கோயில் சுனாமிகளையும் புயல்களையும் கடந்து நிற்பது ஆச்சரியம்தான்.

அந்தோனியாரைப் போலவே ஆட்களே இல்லாத தீவில் நாமும் தனியாக நிற்கிறோம் என்பதை நினைத்த போதே மனதுக்குள் ஒரு வெறுமை நிறைந்தது...தீவு முழுக்க முடிந்தவரை அலைந்து பார்த்தோம்.

அன்னைக்காலத்தில் மக்கள் பெரிய அளவில் வந்து போனதற்கான தடயமே இல்லை.

"அந்தோனியார் கோயில் திருவிழாவுக்குக் கூட எவரும் இப்பொழுது வருவதில்லை" என்றார் எம்முடன் வந்த மீனவர் ஒருவர்.

"தீவைப் போராடிப்பெற்ற இலங்கையும் கடந்த இருபத்து நான்கு ஆண்டுகால ஆதிக்கத்தில் ஆக்கபூர்வமாகவோ, இருநாட்டு மீனவர்களுக்கும் உபயோகமாக இருக்கும்படியோ ஒரு துரும்பைக்கூட நகர்த்தவில்லை.

தமிழ்நாட்டு மீனவர்களை எல்லைப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி போட்டுத்தள்ளும் கொலைக்களமாக மட்டுமே இலங்கை அரசு கச்சதீவைப் பயன்படுத்தி வந்துள்ளது...

"இலங்கை வசம் இந்தத் தீவு இருக்கும் வரையில் மீனவர்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை."

தன் ஆற்றாமையை எம்மிடம் இறக்கி வைத்தார் உடன் வந்த மற்றொரு மீனவர்.

தீவுக்கு வந்து இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக ஆனது. இனி இலங்கை ரோந்துப் படகுகள் திரும்பிவந்து எமது படகைப் பார்ப்பதற்குள் புறப்பட்டுவிடவேண்டும் என்ற அவசரத்துடன் கிளம்பத் தயாரானோம். அதற்குமுன் கச்சதீவின் காவல்தெய்வம் புனித அந்தோனியாரை வழிபட்டு வரலாம் என்று கோயிலுக்குள் நுழைந்தோம்.

கருணையே வடிவான காத்தர்... யுத்தகளத்தில் தனிமையில்... இதயத்தில் எமக்கு இரத்தம் கசிந்தது. ஏற்றி வழிபட ஒரு மெழுகுவர்த்தி வாங்காமல் வந்துவிட்டோமே என்ற குற்ற உணர்வு நம்மை குடைந்தெடுத்தது. அப்பொழுதுதான் எம் கண்ணில் பட்டது, பட்டப் பகலில் எரிந்து கொண்டிருக்கும் அந்த அரிக்கேன் விளக்கு. துருப்பிடித்திருந்தாலும் சிம்னி துடைக்கப்பட்டு, சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்த அந்த விளக்கை ஏற்றியவர் யார்?

"கச்சதீவின் பக்கம் படகில் யார் வந்தாலும் அந்தோனியார் ஆலயத்துக்கு வந்து இந்த விளக்கை ஏற்றிவிட்டு கோயிலைப் பெருக்கி சுத்தம் செய்துவிட்டுச் செல்வது வழக்கம். அப்படிச் செய்தால் காவலுக்கு அந்தோனியார் உடன் வருவார், உயிர் பயம் தேவையில்லை என்பது நம்பிக்கை. அப்படித்தான் யாரோ நாம் வருவதற்கு சற்றுமுன் வந்து சென்றிருக்க வேண்டும்" என்றனர் எம்முடன் வந்த மீனவர்கள்.

'போகிற உயிர் போகட்டும், கச்சதீவின் இருளை விரட்ட எமது பங்குக்கு ஒரு சுடரை ஏற்றுவோம்' என்ற இந்த அப்பாவி மீனவ மக்களின் முயற்சி தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது...

# JAZZ இசை ஓர் அறிமுகம்



மேலைநாட்டு இசை வகைகளுள் ஒன்று ஜேஸ்(Jazz). இது அமெரிக்கா விலுள்ள நியூஓர் லின்ஸ் நகரத்தில் பிறந்தது என்கிறார்கள். ஆயினும், இது அமெரிக்காவுக்கு மட்டும் உரித்தான இசையல்ல. உலக நாடுகளிலும் பிரபல்யம் பெற்று பயன்படுத்தப்படுகிறது. உலகப் பொதுமை கொண்டது.


**கே.எஸ்.சிவகுமாரன்**

அமெரிக்க இசை வடிவங்களுள் Rag-time என்பதும் ஒரு வகை. இதனை இலத்தீன் - அமெரிக்க இசை வகுதிகளுக்குள் பெரும்பாலும் அடக்குவர். ஆயினும், Ragtime என்கின்ற இசைவகைதான் விரிவடைந்து ஜேஸ் ஆக உருவாகியது என அமெரிக்க இசை வல்லுநர் ஒருவர் தமது நூல் ஒன்றில் விவரிக்கிறார்.

ஜேஸ்ஸின் முக்கிய அம்சங்களில் ஒன்று காதைத் துளைக்கும் விறுவிறுப்பான வாத்திய இசை ஆகும். அதாவது வாய்ப்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் வாத்தியக் கருவிகளின் பலவிதமான ஒலிகளுக்கு பெருமதிப்புக் கொடுப்பதாகும்.

இந்தச் சங்கீதத்தில் விசேஷமாக உபயோகிக்கப்படும் இசைக்கருவிகள் ட்ரம்பட் (Trumpet), கிளாரினெட் (Clarionet), ட்ரொம்போன் (Trombone), ஸ்னேர் (Snare), பேஸ் (Bass), பியானோ (Piano) போன்றவை.

ஜேஸ் உலகில் பெயர் பெற்ற இசை விற்பன்னர்களுள் Louis Armstrong, Duke Ellington, Gene Kuruppa, Glen Miller, Fats Waller, Erl Garner, Earthakitt ஆகியோர் அடங்குகின்றனர்..


உங்கள் கம்பியூட்டிங்கில் கொஞ்சம் வேகத்தை சேர்த்திடுங்கள். வேகமான இயக்கத்தை என்னிடம் விட்டுவிடுங்கள் அந்த பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திடுங்கள்

INTEL® CORE™2 DUO PROCESSOR தொழில்நுட்பம்
சிறந்த கம்பியூட்டிங் துவங்குவது Intel Inside உடன்.

INTRODUCING THE ALL NEW EX2
From Sri Lanka's No.1 Personal Computer Brand

intel Channel Partner Premier
PC HOUSE PRIVATE LIMITED
PC HOUSE (PVT) LTD
451, Galle Road, Colombo 3.
Email info@pchouse.lk
Phone 11 472 42 42
077 302 89 38
077 340 35 88
Fax 11 472 43 43
URL www.pchouse.lk

panora®

PC Partner (Pvt) Ltd - 2 50 50 50

Panora® Ex2 Rs. 60,500.00
- Intel® Core™2 Duo E6550 (4M L2 cache 2.33 GHz 1333 MHz FSB)
- Intel® G31 Chipset
- 160 GB SATA HDD
- 1GB DDRII 667MHz
- DVD ROM
- 15" CRT Monitor
- Panora® Optical Scroll Mouse & Full Size Keyboard
- Three Years Warranty

*Available through 36 PC House Branches island-wide





# கோயிற்புறாக்கள்

சிறுகதை

கந்தர்மடம் - தி. மயூரன்

''எவ்வளவு காலம்தான் நாங்கள் இப்பிடியே சுகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஒருக்காலாவது வந்து பார்த்திட்டுப் போவன்ரா! எனக்கும் முந்தின மாதிரி ஓடியாடித் திரியேலாமல் கிடக்கு. அம்மாவுக்கும் இளைப்புக் களைப்புக் கூடிட்டுது...!'' சுந்தரலிங்கம் தொலைபேசியில் அழாக்குறையாகக் கேட்க. எதிர் முனையில் சுரேஸுக்கு என்னவோ போலிருந்தது.

''ஏன்... அம்மா இப்பதானே கனடா போயிட்டு வந்தவ...?''

''அதுதான் கனடா குளிர் ஒத்துவரவில்லை. இருந்த வருத்தமெல்லாம் கூடிட்டுது. மனிசி இரவிரவாய் முழிச்சிருந்து அழுது கொண்டிருக்கு... மூன்று பிள்ளைகளிலிருந்தும் ஒன்றும் பக்கத்திலில்லையே. நாங்களிருந்து என்ன பிரயோசனம்...?''

''அதுக்குத்தானே எத்தினைதரம் கேட்டிட்டம், வந்து எங்களோட இருங்கோவென்று...!''

''இந்த ஊரை விட்டுட்டு என்னால எங்கயும் வரேலாது. என்ன விட்டுட்டு மனிசியும் எங்கையும் வராது...!''

''அப்ப என்ன செய்யிறது சொல்லுங்கோ...!''

இடையிடையேயாவது வந்து பாருங்கோவன்றா, இருக்கிறமா செத்திட்டமா என்று... நீ போனதுக்கு எப்பவாவது வந்தனீங்களா? உன்ர பிள்ளை பிறந்து நாங்கள் பார்த்தனாங்களா? பிள்ளையின்ர முதலாவது பிறந்த நாளை இங்கதான் நீ... கொண்டாடவேணும்...!'' சுந்தரலிங்கம் பிடிவாதமாய் சொல்லிவிட்டார்.

''அடிக்கடி வந்து பார்க்க இதென்ன எங்கட நாடே... நாங்கள் செய்யிற தொழிலும் அப்படியும் இப்படியும்...லீவு எடுத்தா வேலையால நிப்பாட்டிடுவாங்கள். அதோட உங்க எந்த நாளும் சண்டை, செல்லடி, ஓட்டம்! அப்ப உதுக்குள்ள யாருக்கு மனம் வரும்...?''

''எனக்குத் தெரியாது. இந்த முறை நீ வந்து பிறந்த நாள் கொண்டாடுறாய் அவ்வளவுதான். ஊருக்கே ஆடடிச்சுப் சாப்பாடு. சும்மா அமர்க்களப்படுத்தப் போறன். ஒரு லட்சம் செலவழிக்கப் போறன். நீ வந்து சும்மா இருந்தாக்காணும். சும்மா காசை சேர்த்து வைச்சு என்னத்துக்கு...'என்ர பேர்த்தியின்ற பிறந்த நாளை ஊர் மறக்கவே கூடாது!''

சுரேஸ் மனைவி விமலாவைக் கேட்க, அவளும் சம்மதித்துக் கொண்டாள். அவளின் பெற்றோரும் கொழும்பில் இருந்தனர். அவர்களை பார்ப்பதற்கு அவளுக்கும் ஆர்வமாயிருந்தது. சித்திவிநாயகர் ஆலய திருவிழாவும் அந்த நாட்களில்தான் வருவதினால், சுரேஸும் விமலாவும் அவுஸ்திரேலியாவிலிருந்து புறப்பட்டார்கள்.

* * *

விடிந்து நீண்ட நேரமாகியும் வீதியில் சனநடமாட்டத்தைக் காணவில்லை. வெறிச்சிருந்தது. சுரேஸ் வெளிவிறாந்தையில் அமர்ந்திருந்தான். அம்மா புழுதிபறக்க, மூச்சு வாங்கியபடி கூட்டிக்கொண்டிருந்தாள். அவர்களின் வருகை அவளுக்கு புது உற்சாகத்தை அளித்திருக்க வேண்டும். களைப்பையும் மறந்து கூட்டிக்கொண்டிருந்தாள்.

''மாமி என்ன சொல்லியும் கேட்காமல் கூட்டுறா... வருத்தம் கூடினா என்ன செய்யப் போறாவோ தெரியேல்லை...?'' விமலா மெதுவாய் சொல்லிக் கொண்டே தேநீரைக் கொடுத்தாள். சுரேஸ் தேநீரை ஒரு மடக்கு உறிஞ்சிவிட்டு சொன்னான்,

''எதுக்கம்மா இப்ப நீ... வீணாய் கஸ்டப்படுறாய்... வா காணும், யாரையும் கூட்டுறதுக்குக் கூலிக்குப் பிடிக்கலாம்... வா!''

''கூலிக்குப் பிடிக்கப் போறியோ... யாரை...?'' அம்மா நக்கலாய் கேட்டாள். உதட்டில் கேலிப்புன்னகை.

''ஏன் முந்தின் சரசு... மணியெல்லாம்.... எங்க...?''

''அவளவை ஏன் கூட்ட வாறாளவை... அவளவையின்ற பிள்ளைகுட்டியெல்லாம் வெளியில் போனவுடன் காசில் மிதக்கிறாளவை இப்ப. எந்தப் பெரிய கல்வீடு கட்டியிருக்கிறாங்கள் தெரியுமே! போடுற நகையைப் பார்த்தா எங்கட ஆட்களெல்லாம் தலை குனிய வேணும். நாங்கள் தான் இனி இவளவை வீட்ட கூட்டப் போக வேணும்..!'' அம்மா பெருமூச்சுடன் சொன்னாள்.

ஊர் நிறைய மாறியிருந்தது. வறிய மக்களும் முன்னேறி விட்டிருந்தார்கள். சுரேஸ் கவனித்திருந்தான்.

''அப்ப ஒருத்தரும் கூலி வேலைக்குப் போறதில்லையா...?''

''இப்ப ஒரு நாளைக்கு கூலி எவ்வளவு தெரியுமே? முந்நூற்றம்பது ரூபா. பொம்பிளயளுக்கு! அதோட ஒரு நாள் சாப்பாடு... ரீ... என்ன செலவு தெரியுமா...?''

''செலவென்ன செலவு... வாம்மா... வந்திரு... காணும்...!''

''எங்கடயாட்கள் உப்பிடி செலவழிச்சுத்தான் அழிஞ்சு போட்டினம். அவங்கள் முன்னேறீட்டாங்கள். முந்தி இங்க சீவின கிட்டினன் சீவுற தொழிலை விட்டுட்டான். ஏதோ பழைய நன்றியை மறக்காம இடையிடையே வருவான்... அவனின்ற பேரன் ஐஞ்சாம் வகுப்பு ஸ்கொலஸிப்பும் பாஸ் பண்ணீட்டான்...!''

''ஸ்கொலஷிப்பா...!?'' சுரேஸ் வியந்துபோய்க் கேட்டான். கிட்டினன் பாடசாலைப் பக்கமே போனதில்லை.

''ஓமடா... எங்கட சிறியின்ற பெடியனே ஸ்கொலஷிப் பாஸ் பண்ணேலாமல் கிடக்கு. கிட்டினனின்ற பேரன் பாஸ் பண்ணுறான்... எங்கடயாட்கள் எல்லாத்திலயும் கீழே போயிட்டாங்கள்...!'' அம்மாவிற்கு மூச்சு வாங்கியது.

''ஏன் அவங்கள் படிக்கக்கூடாதே... படிக்கட்டுமன்... நல்லதுதானே?''

''படிக்கட்டும்.... படிக்கட்டும் இண்டைக்கு அவங்களுக்கு படிப்புமிருக்கு, காசுமிருக்கு... பிறகென்னன்று எங்களை மதிக்கப் போறாங்கள். எல்லாத்திலயும் பங்கு கேட்கிறாங்கள் தெரியுமோ?''

''மரியாதையை குடுத்தா மரியாதை தானாய் வரும். அதுசரி என்னத்தில பங்கு கேட்கிறாங்கள்...?''

''எங்கட சித்திவிநாயகர் கோயில் திருவிழாவில ஒருதிருவிழா தங்களுக்கும் தரவேணுமாம்...!''

''ஊரில இருக்கிறது ஒரு பிள்ளையார் கோவில்... எல்லாரும் திருவிழா செய்யிறதுதானே நியாயம்... சிறப்பு...!'' சுரேஸ் சொல்லிக்கொண்டிருக்க சுந்தரலிங்கம் தலையை துவட்டிக்கொண்டு அருகிலமர்ந்தார். சுரேஸை ஆத்திரத்துடன் பார்த்தார்.

''நீங்கள் வெளிநாடு போனதோட எல்லாத்தையும் மறந்திட்டியள். இந்தக் கோயில் எங்கட பரம்பரைக் கோயில்... எங்கட சில குடும்பங்களின்ர பராமரிப்பில்தான் நடக்குது... வேற ஒருத்தரும் இதில் தலையிட ஏலாது...!''

''கடவுள் எல்லாருக்கும் பொது. சித்திவிநாயகர் ஏதோ... உங்கட சொத்தென்று சொல்லுறது பிழை... எனக்கிதில உடன்பாடில்லை... சரியுமில்லை...!''

''போடா போ... அந்தக்காலத்தில் அறுபத்தைஞ்சாம் வருஷமோ... எழுபதாம் வருஷமோ தெரியாது. பாட்டிதான் கோயிலுக்கு தேர் கட்டிக்குடுத்தவ... முதல் முதல் தேரில சாமியேற்றி தேரிழுக்கத் தொடங்க மற்ற சாதிக்காரர் தாங்களும் வடம் பிடிக்கவேணுமென்று வர எங்கடயாட்கள் மறுக்க பெரிய அல்லோல கல்லோலம்... பழைய எம்.பி ஒருத்தர் பிரச்சினையை தீர்க்க வந்தவர். எங்கடயாட்களும் பிடிவாதமாய் மறுக்க அவங்களும் இழுத்தே தீருவமென்று நிற்க... ஒன்றும் செய்யேலாமல் எம்.பி சொல்லீட்டார், தேர் யார் கட்டிக் குடுத்ததோ அவவே முடிவெடுக்கட்டுமென்று...!''

''பிறகு...?'' சுரேஸ் ஆர்வம் தாங்க முடியாமல் கேட்டான்.

''பிறகென்ன... என்ர பாட்டி மயிர விட்டாள்... தேர் இழுக்க... சொன்னாளே ஒரு சொல்லு... 'எல்லோரும் வடம் பிடிக்கலாம் நான் செத்தாப்பிறகென்று...!' பதினொரு மணி, பண்ரெண்டு மணியாகியும் தேரிழுக்கேலலை. சாமியை இறக்கிக் கொண்டு போனாங்கள் கோவிலுக்குள்ளே...!'' சுந்தரலிங்கம் பெருமை பொங்க சொன்னார்.

''கேவலம்...! இதெல்லாம் ஒரு பெருமை, கௌரவமென்று சொல்லிக்கொண்டு...! இதெல்லாம் அந்த காலத்தோட சரி.. இனி உந்த கதையெல்லாம் மறந்திட்டு அவங்களையும் திருவிழாவில சேர்க்க வேணும்! அதுதான் முறை...!''

''உனக்கு விளங்கேல்லை இன்னமும். எங்கட சாதிக்காரனுக்கே திருவிழாவில் பங்கில்லை. கோயிலை கும்பிடலாம், போகலாம் அவ்வளவுதான். இது எங்கட சில குடும்பங்களின்ற சொத்து இந்தக் கோயில். இவ்வளவு காலத்தில் எத்தினை தரம் இந்த சண்டையில சேதமடைந்திருக்கு.. ஒரு நாளும் அரசாங்கத்திட்டயோ, வெளியாட்களிட்டயோ ஒரு சதம் காசு வேண்டினதில்லை... கையேந்தினதில்லை. எங்கட குடும்பாட்களே எல்லாம் செலவழிக்கிறம்... அதனால்தான் எங்கட பிள்ளை குட்டி இன்றைக்கு நல்லாயிருக்கு.. விநாயகனின்ற பரிபூரண அருள் கிடைக்குது...!'' சுந்தரலிங்கம் கோயிலை நோக்கி கையெடுத்துக் கும்பிட்டார்.

''எங்கடயாட்களும்... ஏன் ஊரில் சனமே குறைஞ்சு கொண்டு வருகுது. உங்களுக்குப் பிறகு யார் கோயிலை பராமரிக்கிறது.? அறங்காவலர் சபையை தெரிவுசெய்து எல்லாரையும் அதுக்குள்ள சேர்க்கிறது நல்லது...!''

''போடா... நீயும் உன்ர கதையும். கோயில் நிர்வாக சபையெல்லாம் எங்கட குடும்பாட்கள் மட்டும்தான். வேற ஒருத்தனும் உள்ள வரேலாது. அபிப்பிராயமோ, தீர்மானமோ எங்களுக்கு மட்டும்தான். எல்லாரையும் உள்ள விட்டா பிறகென்ன எங்களுக்கு மரியாதை? இப்ப கந்தசாமி கோயில் பிரச்சினையைப் பார்க்கிறாய் தானே...?''

''ஏன் ,என்ன பிரச்சினை?''

''அங்க அவங்களுக்கும் சில திருவிழாக்கள் குடுத்தாச்சு... எங்கடயாட்களின்ற ஒரு திருவிழாவில அன்னதானம் நடக்க... மற்ற சாதிக்காரங்கள் தாங்களும் சபை நடத்தப் போறமென்று கறிச்சட்டிகளைத் தூக்கீட்டாங்கள். எங்கடயாட்களும் விடவில்லை. பெரிய களோபரம்... பிறகென்ன அன்னதானம் நடக்காமல் சோறு கறியெல்லாம் வெட்டித் தாட்டது. இன்னும் அந்தப் பிரச்சினை முடியேல்லை...!'' சுந்தரலிங்கம் சொல்லச் சொல்ல சுரேஸுக்கு உதடுதுடித்தது.

''கோயில் நடத்திறீங்களா இல்ல சினிமா தியேட்டர் நடத்திறீங்களா என்று விளங்கேல்லை. கோயில் புனிதமான இடம். அங்க போறவனெல்லாம் அடியவன். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்... ஒரு பக்கம் சிங்களவன் அழிக்கிறான், இன்னொரு பக்கம் நாங்களாவே அழியுறம்... எல்லாம் எவ்வளவு காலத்துக்குப் பார்ப்பம்.. !'' சொல்லிவிட்டு சுரேஸ் வெளியே நடந்தான். காலாற நடந்துக்கொண்டேயிருந்தான். எப்படி கலகலவெனயிருந்த ஊர்... பச்சை விரித்த வயல்... தோட்டங்கள்... எல்லாம் மாறி... வறண்டுபோய் நிசப்தமாய்...

வெயில் உச்சிக்கு ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. பாடசாலை முன் வாகை மர நிழலில் அமர்ந்து கொண்டான். பாடசாலை மணியொலிக்க... சிறார்கள். குதூகல இரைச்சலுடன் வெளியேறினார்கள்...

(24ஆம் பக்கம் பார்க்க)



ஒவ்வொரு துளியிலும் சேமிப்பு
NO.1
SUZUKI MARUTI
2003 - 2007
சுசுகி மாருதி
2008 ஆகஸ்ட் 25ம் திகதி
M 800 மற்றும் அல்ரோ ஸ்போர்ட்ஸ்
ஆகியவற்றிற்கு புதுப்பொலிவூட்டும் புதிய ஆரம்பம்.
பரீட்சார்த்த ஓட்டத்திற்காக எமது பிரதான காட்சியறைக்கு அனைவரையும் நாம்
அன்புக்கரம் நீட்டி அழைக்கின்றோம்.
முதல் வரும் 20 வாடிக்கையாளருக்கு விசேட கழிவுகள்
முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.
குருநாகல்
நெடு நேர ஓட்டம் – உயரிய சொகுசு
077 2 614560
கண்டி
மலைகளிலும், குறுகிய பள்ளத்தாக்குகளிலும் சுகமாகச் செல்லும்
077 3 956840
கொழும்பு
மாநகரத்துக்கு மாபெரும் தெரிவு
077 9158418
இரத்தினபுரி
இரத்தின நகருக்கு இரத்தினமான தெரிவு
077 3 958390
மாத்தறை
தெற்கின் கடின உழைப்பிற்கு மேன்மையான திறனை
077 3 442156
நீர்கொழும்பு
குட்டி ரோமுக்கு சிறியதோர் வண்டி
077 3 442157
ZEN
ALTO
wagonR
MARUTI 800
50,000 கி.மீ / இரு வருட உத்தரவாதம்
10,000 இற்கு மேல் சேமிப்பு
இலவசம் : பதிவு, இலக்கத்தகடு இன்னும் பல....
For Specialized Leasing, call now
CAPITAL LEASING Hot Line : 0773 958386, 0773 863971, 0773 427324
* Condition Apply
www.cpm.lk
SUZUKI MARUTI
Count on us
இலங்கையில் கூடிய விற்பனையுள்ள குறியீடு
2003 இலிருந்து புது வாகனங்கள்
AMW
அசோசியேட் மோட்டர்வேய்ஸ் PLC
சுசுக்கி மாருதி காட்சியறைகள்
கொழும்பு : - Tel: 011 2690099 இரத்தினபுரி - Tel: 045 5677677
குருநாகல் : - Tel: 037 5677677 நீர்கொழும்பு - Tel: 031 5677677
மாத்தறை : - Tel: 041 5677677 கண்டி - Tel: 081 5677677

## சொற்சிலம்பம் போட்டி இல. 328

சொற்சிலம்பம் 328 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித்தினம் ஓகஸ்ட் 30 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றிபெற்றவர்களின் பெயர்கள் செப்.06 ஆம் திகதி சுடர்ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.326இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும்,மூன்றாவது பரிசாக 100ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல்மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

## சொற்சிலம்பம் போட்டி இல.328

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | ■ | 11 | | | |
| | ■ | 12 | 13 | | ■ | | ■ |
| ■ | 14 | | | ■ | 15 | | 16 |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | 21 | |
| 22 | | | | | ■ | 23 | |

## சொற்சிலம்பம் போட்டி இல.326

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | ம் | 2 ம | 3 தி | ■ | 4 ம | 5 த | கு |
| ம் | ■ | 6 த | ரி | 7 ச | ன | ம் | ■ |
| 8 பா | 9 க | ம் | ■ | 10 க | ன | ■ | 11 வ |
| 12 தி | ண் | ■ | 13 அ | லை | ம் | 14 ப | ல் |
| ■ | 15 கா | 16 மு | க | ன் | ■ | 17 கு | லை |
| 18 வி | ட் | டி | ல் | ■ | 19 ச | ர் | வ |
| 20 மா | சி | ■ | 21 த | 22 வி | ர | ■ | ன் |
| னி | ■ | 23 ப | ல் | லா | ண் | டு | ■ |

## சொற்சிலம்பம் போட்டி இல. 328

### இடமிருந்து வலம்

1. இலங்கையின் புனித தலம்.
6. மரம்.
7. இரும்பில் பிடிப்பது.
7. பெறுமதி/ புகழ்.
8. பிழை அல்ல.
9. சிறிது என்றாலும் காரம் பெரிது.
11. அபிப்பிராயம்/அர்த்தம்/ கருப்பொருள்/ உட்கிடை.
12. புதல்வன்.
14. ஒரு மிருகம்.
15. இப்படி நட. நம்பி நடவாதே.
17. கடவுள்/சிவன்.
18. இறக்க.
19. வலிமை.
20. வருமானம்.
22. மணிக்கூடு.
23. தலைமயிர்க் கொத்து/ முடி.

### மேலிருந்து கீழ்

1. ஒரு நடன வகை.
2. களவெடு.
3. செவி.
4. மருமகன்.
5. (கிடைத்தற்கு) அருமையானது.
8. ஒலி.
10. முருகன்/இளைஞன்.
13. வாயால் கவ்வு.
14. அகப்பை வகை.
15. விரலில் வளருவது.
16. கொண்டாட்ட நாள்.
17. கூட
18. சேரும்.
20. போக அல்ல.
21. இது வந்திடப் பத்தும் பறந்திடும்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 326

1. திருமதி புஷ்பராணி சுந்தரலிங்கம், 84/10, பாரதி வீதி, திருகோணமலை.
2. எஸ்.ஜீவா, 11-5/1, சென்.லோரன்ஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6.
3. எம்.பீ.முகைடீன், 351, மதரசா வீதி, பெரிய நீலாவணை, கல்முனை.

1. தாமோதரம் வடிவேல், செங்கலடி.
2. ஆர்.யோகராசா, திருகோணமலை.
3. என்.ரோகனகுமார், களுத்துறை தெற்கு.
4. செல்வி பிரகாசியம்மாள், கண்டி.
5. கே.அருள்சீலி, மன்னார்.
6. திருமதி ராஜினி புண்ணியமூர்த்தி, மட்டக்களப்பு.
7. நா.சிவலிங்கம், கல்முனை.
8. திருமதி ச.சிவப்பிரகாசம், மொரட்டுவை.
9. ஏ.உதுமாலெவ்வை, புத்தளம்.
10. நஸ்லான் ஹாரிஸ், பேருவளை.
11. க.சகீலாபேகம், ஏறாவூர்-2.
12. ஆர்.குழந்தைவேலு, திருகோணமலை.
13. பொ.பாலசுப்பிரமணியம், தம்பிலுவில்.
14. கே.அருள்சீலி, மன்னார்.
15. ஜோசப் டொரிங்டன் ஸ்பெக், மட்டக்களப்பு.

## கோயிற் புறாக்கள்....

(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடமுக்கற்ற மகிழ்ச்சி அவர்களின் முகங்களில் தெரிந்தது. கவலை மறந்து சுரேஷும் மகிழ்வானான். திடீரென முன்னால் சைக்கிள் நிற்க திடுக்கிட்டு நிமிர்ந்தான். ஆசிரியர் அருணாசலம் சிரித்தபடி நின்றிருந்தார்.

"மாஸ்டர் வாங்கோ. நேற்று உங்கட வீட்டை வந்தனான். நீங்களில்லை...!" அவன் சொல்ல சைக்கிளை நிறுத்தி விட்டு அருகிலமர்ந்து அவன் தோல் மேல் கைபோட்டுக் கொண்டார். அருணாசலத்திற்கு அவன் மேல் அளவு கடந்த பாசம்...

"நீ வந்தது தெரியும. உன்னைப் பார்க்க நானே வந்திருப்பன் தெரியாதே கோயில் பிரச்சினையால கொப்பரோட சின்ன மனஸ்தாபம். ஏன் வீண் பிரச்சினையென்று வரயில்லை...!"

"இல்லை மாஸ்டர்... கோயில் விசயம் எனக்கும் அறவே பிடிக்கவில்லை... பிள்ளையாரும் தாங்கள் சொல்லுறதைத்தான் செய்வாரேன்ர மாதிரி நிற்கிறார்...!"

"உண்மைதான்... அதுதான் பிரச்சினை... உங்கட சில குருக்களின்ர பரம்பரைச்சொத்துத்தான் கோயில். அதை ஒருத்தரும் மறுக்கேல்லை. ஊரிலே இருக்கிறது ஒரே பிள்ளையார் கோயில். அதை எல்லாரும் சேர்ந்து செய்யிறது தானே சிறப்பு... அதுதான ரெண்டு மூன்று திருவிழாக்களை மற்றாக்களுக்கும் குடுத்தால் நல்லதென்றது தான் பிரச்சினை. தங்கட குடும்பங்கள் மட்டும் தான் திருவிழா செய்வமென்று பிடிவாதம். பிரச்சினை...!"

பிள்ளைகள ஓஷோவென்ற இரைச்சலுடன் ஓடியும் நடந்தும் போய்க் கொண்டிருந்தனர்.

"பள்ளிக்கூடம் எப்பிடி மாஸ்டர்...?"

"பாரடா... நாலைஞ்சு கிராமங்களுக்கு இது ஒரு பள்ளிக்கூடம்... நானூறு, நானூற்றம்பது பிள்ளைகள் படிக்குதுகள். எப்படிப் பாழடைந்து கிடக்குதென்றுபார். ஒருத்தருக்கும் அக்கறையில்லை. நல்ல தளபாடங்களில்லை. விளையாட்டுப் போட்டி நடந்து ரெண்டு வருஷமாயிட்டுது. செய்யிறதென்றா குறைஞ்சது ஐம்பதாயிரம் வேணும். யார் உதவி செய்யிறது...? வா மணி ரெண்டாயாச்சு...!" அருணசலம் எழுந்து சைக்கிளை உருட்ட சுரேஸ் பின் தொடர்ந்தான்.

"மாஸ்டர் உங்கட பிள்ளையளெல்லாம்...?"

"வேறெங்க வெளிநாடுதான். மூத்தவள் லண்டன். சின்னவளும், பொடியனும் கனடா... பிள்ளையளிட்ட காசு வேண்டித்தான் கடைசி விளையாட்டுப் போட்டி நடத்தி கொஞ்சம் தளபாடங்களும் செய்து குடுத்தனான். ஏதோ என்னால முடிஞ்ச உதவியிது!"

"நீங்கள் பென்சனெடுத்திட்டியள் தானே...?"

"ஓம் தம்பி! எடுத்து எட்டு வருஷமாயிட்டுது. இப்பத்த அதிபர் பழக்கம். கணித வாத்தியாரில்லை. கொஞ்சம் ஹெல்ப் பண்ணச் சொன்னார். சரியென்று சம்பளமில்லாத வேலை பார்க்கிறன்!"

"அப்ப உங்கட வைப்..."

"அவா கனடா போயிட்டா. டிசம்பரில தான் வருவா நானும் கூடப்போய் ஒரு மாதத்திலேயே திரும்பீட்டன்... டிசம்பரில இந்தபிள்ளையளுக்கு ஓ. எல் சோதினை! கொஞ்சமாவது படிப்பிக்க வேணுமே. அதுதான் வந்திட்டன். என்னால அங்க சும்மா குந்திக் கொண்டிருக்க ஏலாது. எங்கயிருந்தாலும் எங்களால ஏதாவது பிரயோசனம் இருக்க வேணும். இல்லாட்டி உயிரோட இருக்கிறது வீண்...! பயனில்லை...!" உற்சாகமாய் சைக்கிளை உருட்டிக கொண்டே சொன்னார். சுரேஸுக்கு அவர் மீதிருந்த அன்பும், மதிப்பும் இன்னும் உயர்ந்திருந்தது.

"சாப்பாடெல்லாம் என்ன மாதிரி...?"

"நான் தான் சமையல்... காலையில் பாண். மத்தியானமும் இரவும் சோறும் இரண்டு கறியும்... போதும்...!"

"சாமியாராய் மாறீட்டியள். பிள்ளையளுக்கு சம்மதமா...?"

"பிள்ளையளுக்கு கொஞ்சம் கோபம்தான். என்ன செய்யிறது. எனக்கு இப்பிடியிருக்கிறது தான் சந்தோஷம், திருப்தியெல்லாம்...! வந்தனி வா... ரீயொன்று குடிச்சிட்டுப் போகலாம்."

"இல்லை... மாஸ்டர் ஆறுதலாய் வாறான்...!"

"மகளின்ர 'பேர்த்டே' பெரிசாய் செய்யப் போறாயென்று கேள்விப்பட்டன். அப்பர் பெரிசாய் அமர்க்களப்படுத்துறார். ஊரிலே 'வந்து செய்ய வேணுமெண்டு நினைச்சியே அதுவே பெரிய விசயம்... சுரேஸ்... எனக்கு சந்தோஷமாயிருக்கு...!"

"உங்களுக்கு இன்னுமொரு சந்தோஷமான செய்தி மாஸ்டர்"

சுரேஸ் சொல்ல வியப்புடன் திரும்பினார் அருணாசலம்.

"உங்களோட கதைச்சப்பிறகு இப்ப எடுத்த முடிவு. பிறந்த நாளை ஒரு அளவாய்ச் செய்ய போறன். இரண்டு வீடியோசொக்கட்டான் பந்தல் என்று அப்பா பெரிசாய் செய்ய நினைக்கிறதெல்லாம் குறைச்சு, கொஞ்ச காசும் சேர்த்து உங்களிட்ட தாறன்... நீங்கள் பள்ளிக்கூடத்துக்கு என்ன தேவையோ அதுகளை செய்துகுடுங்கோ... வருஷம் வருஷம் என் ...லானதை நான் அனுப்புறன்...!" சுரேஸ் சொல்ல சொல்ல அருணாசலம் அவனைப் பெருமையுடன் பார்த்தார்.

தூரத்தில் சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து கோயிற் புறாக்கள் வட்டமடித்துப் பறந்து கொண்டிருந்தன.

(முற்றும்)



# 'ரெடி டு ஈட்' இன்றைய பெண்களின் இனிய தோழி!



இன்றைய பரபரப்பான, நிமிஷத்துக்கு நிமிஷம் மாறும் அவசரகதியான சூழலுக்கு ஏற்ப மக்கள் மட்டும் மாறவில்லை; அவர்களின் உணவுப் பழக்கங்களும் மிகவும் மாறிவிட்டன.

சமையலறையிலும் ஒரு புதிய புரட்சி உருவாகி வருகிறது. சாப்பாட்டு முறையில் போதிய மாற்றங்கள் வந்துவிட்டன. ஒருபுறம் காஸ் அடுப்பு, குக்கர், மிக்ஸி, ஃபுட் ப்ராசசர், பிரிட்ஜ் மற்றும் மைக்ரோவேவ் என்று பல மணி நேர வேலையை கண் இமைக்கும் நொடியில் இல்லத்தரசிகளால் செய்ய முடிகிறது. மற்றொரு புறம் 'ரெடி டூ ஈட்' அதாவது சாப்பிடத் தயாராக உள்ள உணவுப் பொருட்களால் சமையல் வேலை மேலும் எளிதாகி விடுகிறது.

'ரெடி டூ ஈட்...' என்ற பெயரைக் கேட்டதுமே அது 'சாப்பிடத் தயாராக உள்ள உணவுப் பொருள்' என்று தெரிந்துவிடும். தற்போது பெரும்பாலான நாடுகளில் உணவைப் பாக்கெட்டில் அடைத்து விற்கும் கம்பெனிகள் பெரும் லாபத்தில் இயங்குகின்றன.

# பைப்ராய்ட் பிரச்சினை இருந்தால் கருத்தரிக்க முடியாதா?



கருப்பையின் மிருதுவான சதை வீங்கினால் அதை பைப்ராய்ட் என்பார்கள். அதை அபாயம் இல்லாத புண் எனலாம். இந்த பைப்ராய்ட் மரபுக் கூறுகளில் இருந்து உருவாகிறது.

அதிகபட்சமான பைப்ராய்ட் பாதிப்புகளுக்கு அறிகுறிகள் எதுவும் இருக்காது. அவற்றுக்கு சிகிச்சையும் தேவைப்படாது. குறிப்பான அறிகுறிகளில் ஒன்று, மாதவிலக்கின்போது அதிகமான இரத்தப்போக்கு. பைப்ராய்ட் பெரிதாக இருந்தால், 'பெல்விஸ்' என்ற அடிவயிற்று எலும்புப் பகுதியில் ஏதோ நிரம்பி அடைத்துக்கொண்ட மாதிரி ஓர் அழுத்தம் உண்டாகும்.

கருத்தரிப்பை பைப்ராய்ட் பாதிக்கும். கருப்பையின் உட்பகுதிச் சுவரை அது அழுத்தும்போது அதன் வடிவம் மாறி, விந்து அணுக்கள் சென்று கரு முட்டையை உருவாக்குவதோ, சினை முட்டை செல்வதோ தடைப்படும். தேவையில்லாத சமயங்களில் கருப்பையை அடிக்கடி சுருங்கச் செய்யும்போது, கருத்தரிப்பு பாதிக்கப்படும்.

அப்படியானால் பைப்ராய்ட் அகற்றப்படத்தான் வேண்டுமா என்ற கேள்வி எழலாம். எல்லாச் சமயங்களிலும் அகற்றத் தேவையில்லை. கருப்பையின் உட்பகுதியில் ஏற்படும் 'சப்மியூகோசல்' அடைப்புகள், கருத்தரிப்புக்குத் தடையாக இருக்கும் என்பதால், ஹிஸ்டரோஸ்கோபி மூலம் அதை அகற்ற வேண்டும். அதிலும் குறிப்பாக, பைப்ராய்ட் வீக்கம் நான்கு சென்டிமீட்டர் அளவுக்கு மேல் இருந்தால் அகற்றியே ஆக வேண்டும்.

பைப்ராய்ட் பிரச்சினையைப் போக்க மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சையை 'மயோமெக்டமி' என்பார்கள். இதை சாதாரண அறுவைசிகிச்சையாலோ, லேபரோஸ்கோபியாலோ செய்யலாம்.

வேறு வகை சிகிச்சைகளும் இருக்கின்றன. அவை பைப்ராய்ட் எம்பொலைசேஷன், லேபரோஸ்கோபிக் மயோலைஸிஸ் மற்றும் எம்.ஆர்.ஐ ஸ்கேன் உதவியுடன் செய்துகொள்ளப்படும் அல்ட்ராசவுண்ட் முறை. பாதுகாப்பு பயம் காரணமாக, கருத்தரிப்பு வாய்ப்பை இழக்க விரும்பாத பெண்கள், இவ்வகை சிகிச்சை முறைகளிலிருந்து விலகி இருப்பது நல்லது.

பைப்ராய்ட் அகற்றப்பட்டு விட்டால் கருத்தரிக்கும் வாய்ப்பு இருக்கிறதா என்ற கேள்வி எழலாம். மயோமெக்டமி செய்து கொண்ட பிறகு, கருத்தரிக்கும் வாய்ப்பு 45 - 57% வரை இருப்பதாக சர்வதேச ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதே சதவிகிதம்தான் எண்டோஸ்கோபி மூலம் செய்யப்படும் அறுவை சிகிச்சையிலும் கிடைக்கும்.

அதிகபட்சமான பைப்ராய்ட் பாதிப்புகளும், அறிகுறி ஏதும் இல்லாதவை. எனவே, அவற்றுக்கு அறுவைச் சிகிச்சை தேவை இல்லை. ஆனால், அதிகமான இரத்தப்போக்கு இருந்து, அதனால் இரத்த சோகை ஏற்பட்டு அல்லது பைப்ராய்ட் பெரிதாகி, அதனால் அடிவயிற்றுப் பகுதியில் அழுத்தம் உண்டானால், ஹிஸ்ட்ரோஸ்கோபி தேவைதான். பைப்ராய்ட் சிறியதாக இருந்து, பிரச்சினைகள் ஏதுமில்லை என்றால், ஹிஸ்ட்ரோஸ்கோபி தேவை இல்லை.

# குழந்தையின் முதல் மொழி



பிறந்த முதல் நாளிலிருந்தே குழந்தை எம்முடன் தொடர்பு கொள்ளத் தயாராகிறது. அழுகைதான் குழந்தையின் முதல் மொழி.

பசி, களைப்பு, தூக்கம், பயம், வலி எல்லாவற்றையுமே குழந்தை அழுகை மூலம்தான் உணர்த்த முடியும். ஆறு மாதம் வரை இந்த நிலை தொடருகிறது. அதன் தேவையை ஊகித்து உடனே கவனித்து விட்டால் அழுகை அடங்கி விடும்.

பிறந்த நான்கு முதல் ஏழு வாரங்களில் குழந்தை முகம் பார்த்துச் சிரிக்கும். அப்போது நாம் புன்னகைத்தோ தன்னை எடுத்து அணைத்து முத்தமிட்டோ எமது மகிழ்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் என்று அது எதிர்பார்க்கும்.

நாம் பேசும் வார்த்தைகள், செய்யும் சத்தங்கள், பரிவுகாட்டும் விதம், எடுத்து அரவணைக்கும் முறை, இதமான இசை என்பவற்றை எல்லாம் அதோடு நாம் தொடர்பு கொள்ளும் முறைகள்.

தினமும் நாம் வீட்டில் எந்த மொழியில் பேசுகிறோமோ அதுதான் கருவில் இருக்கும் குழந்தையின் மூளையில் பதிகிறது என்றும் கூறப்படுகின்றது.

கருவுற்ற பெண்கள் நல்ல விஷயங்களைப் பேச வேண்டும். இனிய இசைகளையும், சுலோகங்களையும் கேட்க வேண்டும். மனம் தடுமாறாமல் இருக்க, பய உணர்ச்சியும் வெறுப்பும் ஏற்படாத விஷயங்களைப் படிக்க வேண்டும். என்றெல்லாம் வீட்டுப் பெரியவர்கள் சொல்லுவது இதற்காகத்தான்.

தாயின் வயிற்றில் இருக்கும்போதே குழந்தை தன் பெற்றோர்களின் குரல்களை மனதில் பதிவு செய்து கொண்டு விடுமாம். அதிலும் தாயின் குரலுக்குத்தான் குழந்தை அதிக முக்கியத்துவம் கொடுக்கும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

வீட்டிலுள்ள மற்றவர்களைவிட குழந்தையின் தாய்க்குதான் அதோடு பேச அதிக வாய்ப்பு கிடைக்கிறது. உடை மாற்றும் போதும், எண்ணெய் தடவி குளிப்பாட்டி சட்டை அணிவிக்கும் போதும், பால் புகட்டும் போதும் தாய்க்குக் குழந்தையோடு கொஞ்சலாகப் பேச சந்தர்ப்பங்கள் கிடைக்கும். எப்போதுமே குரலை உயர்த்திப் பேசுவதோ, அதிக சத்தமுள்ள இடங்களுக்குக் குழந்தையைக் கொண்டு போவதோ கூடாது. அது குழந்தையின் செவி நரம்புகளை பலவீனப்படுத்தலாம்.

குழந்தை நடைபயிலும் நேரத்தில் முற்காலத்தில் தண்டைகளையும், கொலுசுகளையும் அணிவிப்பார்கள். 'ஜல் ஜல்' என்று இவற்றின் ஓசை குழந்தையின் மூளை நரம்புகளை சுறுசுறுப்பாக்குமாம். இப்போது நாகரிகமான சப்பாத்துக்கள் வந்துவிட்டன. அவற்றைக கால்களில் அணிவித்தால் குழந்தை நடக்கும்போது 'ஸ்க்வீக்' என்கிற சப்தமும், பளிச்சிடும் வெளிச்சமும் அழகாக இருக்கிறது.

குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு இப்படி படிப்படியாக உதவினால் அவை ஆரோக்கியமும், உற்சாகமும், சுறுசுறுப்பும், புத்திசாலித்தனமும் உள்ளவர்களாக வளர வழிவகுக்கும்.

பெண்

# டிப்ஸ்



★ சமையல் சோடாவில் இரண்டு சொட்டு எலுமிச்சைச்சாறு, கடுகு எண்ணெய் சேர்த்து பல்லை தேய்த்துக் கழுவினால் பற்கள் பளபளக்கும்.

★ குழந்தைகளுக்குச் சளி, இருமல் இருந்தால் ஓமவல்லி, தூதுவளை, துளசி மூன்றையும் சம அளவு எடுத்துச் சாறு பிழிந்து கொடுத்தால் குழந்தைகள் குணம் அடைவர்.

★ மாதுளம் விதைகளை தனியாக எடுத்து மைபோல் அரைத்து வாரத்திற்கு ஒருமுறை தலையில் பூசி வந்தால் பேன் மறையும்.

★ மஞ்சள் கரிசலாங்கண்ணிக் கீரையை அரைத்துச் சாறு பிழிந்து சம அளவு நல்லெண்ணெய் சேர்த்து அடுப்பிலிட்டு காய்ச்சி அடிப்பகுதி கண்டி மெழுகின் பதத்திற்கு வந்தபின் இறக்கி விட வேண்டும். ஒரு டீஸ்பூன் காலை வேளையில் தலைக்குத் தடவ நரை மாறி விடும்.

★ துளசி இலையை நன்றாக இடித்துச் சாறு எடுத்து அதனுடன் சிறிதளவு பச்சைக் கற்பூரம் கலந்து பல்வலி இருக்கும் இடத்தில் தேய்த்து வர பல்வலி குணமாகும்.

★ இதயநோய் உள்ளவர்கள் ஒரு பிடி துளசியுடன் ஒரு தேக்கரண்டி தேன் சேர்த்துச் சாப்பிட்டு வர நல்ல குணம் தெரியும். அதே போல் ஓம இலையையும் சம அளவு எடுத்து ஒன்று சேர்த்து ரசம் போல் காய்ச்சி அருந்தி வந்தால் மேனி பளபளப்பாகும்.

# சமைப்போம் சுவைப்போம்

## இறால் வதக்கல்

***தேவையான பொருட்கள்:***

இறால் - 200 கிராம் (தலை, வால் இல்லாதது),
நல்லெண்ணெய் - 2 பெரிய தேக்கரண்டி
சோயா சோஸ் - 1/2 சிறிய தேக்கரண்டி
தக்காளி விழுது - 1/2 கப்
வினிகர் - 1/2 சிறிய தேக்கரண்டி
வெங்காயம் - 100 கிராம்
குடைமிளகாய் - 1
சிட்டிகை உப்பு.



***செய்முறை:***

வெங்காயம் மற்றும் குடைமிளகாயைத் துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். பிறகு சோயா சோஸ், எண்ணெய், வினிகர், தக்காளி விழுது மற்றும் இறாலைச் சேர்த்து 10 நிமிடங்கள் அப்படியே ஊற வைக்கவும். ஊற வைத்த இறாலை நொன்ஸ்டிக் வாணலியில் மிதமான வெப்பத்தில் வேக வைக்கவும். இறால் மற்றும் காய்கறிகள் நன்கு வெந்த பிறகு சாதம் மற்றும் நூடுல்ஸுடன் பரிமாறவும்.


5 குடும்பங்களுக்கு சொகுசு கப்பலில் விநோத சவாரி
600 குடும்பங்களுக்கு லெஷர் வேர்ல்ட் சவாரி
செலிங்கோ லைஃப்
குடும்ப சவாரி 2
இந்த அதிர்ஷ்டம் யாருக்கு?
தற்போதுள்ள மற்றும் புதிய செலிங்கோ லை∴ப் ஆயுள் காப்புறுதி உரிமையாளர்களுக்கு.
நீங்கள் செலிங்கோ லை∴ப் காப்புறுதியாளரா?
மேலதிக விபரங்களை செலிங்கோ லை∴பின் விற்பனை ஆலோசகர் அல்லது கிளை காரியாலயங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
அல்லது அழையுங்கள் 011 - 2 461 461.
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
செலிங்கோ லை∴ப்
செலிங்கோ இன்சுவரன்ஸ் பிஎல்சி
சிறியதோ பெரியதோ எதையுமே காப்பது - செலிங்கோ

# இ-மெயில் மோசடி...



சென்னையைச் சேர்ந்தவர் ஸ்ரீநிவாசன். அவரது வீட்டுக்கதவுகள் மூடிக்கிடக்கின்றன. அடித்துக்கொண்டேயிருக்கும் தொலைபேசியை வெறித்துப் பார்த்துக்கொண்டே இருக்கிறார். விடாது ஒலித்ததால் வெறுத்துப்போய் எடுத்து, "எதுவுமே கேட்காதீங்க... நொந்து வெந்து போயிருக்கேன்...என்னை விட்டுடுங்க..." என்கிறார். குரல் கம்மப் பேசிவிட்டு தொடர்பைத் துண்டிக்கிறார்.

கண்ணிமைக்கும் நேரத்தில் 21 லட்சம் ரூபாயை இழந்துவிட்டு நின்றால் யாரால் தான் பேசமுடியும்.கம்ப்யூட்டரின் மெயின் இணைப்புவரை எல்லாவற்றையும் துண்டித்து விட்டார். அந்த வழியாகத்தானே கொள்ளையர்கள் அவருடைய பணத்தை அள்ளிச் சென்றுவிட்டார்கள்.

''உங்கள் வங்கிக் கணக்கை 'அப்டேட்' செய்யவேண்டும்... இந்த பட்டனை 'க்ளிக்' செய்யுங்கள்'' என்று ஒற்றைவரி இ-மெயிலாக வந்த தகவலை அடுத்து, ஸ்ரீநிவாசன் அந்த பட்டனை 'கிளிக்' செய்ய அவருடைய வங்கிக்கணக்கு பற்றிய மொத்தத் தகவல்களும் களவாடப்பட்டுவிட்டன.

தன்னுடைய வங்கிக்கணக்கை 'செக்' பண்ணுவதற்கு அவர் முயற்சித்தபோது பாஸ்வேர்ட் தவறு என்ற தகவலே தொடர்ந்து வந்திருக்கிறது. வங்கியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோதுதான் அவருடைய வங்கிக் கணக்கில் இருந்த 21லட்சம் ரூபாய் மும்பையில் உள்ள வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுவிட்ட விபரீதம் தெரியவந்தது. ஸ்ரீநிவாசன் பொலிஸில் புகார் கொடுக்க விசாரணை ஆரம்பமாகி உள்ளது. மும்பையில் உள்ள வங்கிக் கணக்கு ஒரு பெண்ணின் பெயரில் இருக்கிறது. கடந்த சில நாட்களாகவே அந்தப் பெண் தொடர்ந்து வங்கிக்கு வந்து ''ஒரு நிலம் வாங்குவதற்காக சென்னையில் இருந்து பெரிய தொகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். கிரெடிட் ஆகிவிட்டதா?'' என்று கேட்டுக்கொண்டே இருந்திருக்கிறார். அதனால், கிரடிட் ஆனவுடன் அவர் பணத்தை எடுத்துச்சென்றது வங்கி அதிகாரிகளுக்கு சந்தேகம் அளிக்கவில்லை.

''அவர் கணக்கு வைச்சிருக்கிறது 'பஞ்சாப் நஷனல் வங்கி'யில். அந்த வில்லங்கமான மெயில் வந்தது அட்மின் அட் ஐ.சி.ஐ.சி.ஐ.பாங் காம் (admin@ICICIbank.com) என்கிற மெயில் ஐ.டியில் இருந்து. நம்முடைய வங்கிக் கணக்கை எதற்காக இன்னொரு வங்கி நிர்வாகம் கேட்கிறது என்று ஒருகணம் யோசிச்சிருந்தால் அது போலியான இ-மெயில் என்று புரிந்திருக்கும். அவசரத்தில் பலர் இதையெல்லாம் கவனிக்கிறதில்லை'' என்கின்றனர் பொலிஸார்.

''பொதுவாக இ-மெயில் மோசடிக்காரர்கள் எந்த ஒரு தனிநபரையும் குறிவைத்துச் செயல்படுவதில்லை. முதல்கட்டமாக ஆயிரக்கணக்கான இ-மெயில் முகவரிகளுக்கு ஒரு கடிதத்தை அனுப்புகிறார்கள். அதில் எந்த மீன் பதில் போட்டு சிக்குகிறதோ அதை வலையில் வீழ்த்தி விடுவார்கள். இதுதான் டெக்னிக். அதனால் நாம் இதுபோன்ற இ-மெயில்களுக்கு பதில் போடாமல் 'டிலீட்' செய்தாலே சிக்கலைத் தவிர்த்து விடலாம்.

''முதலில் அடுத்தடுத்து கேள்விகள் கேட்டு கடைசியாக பாஸ்வேட் போன்ற முக்கியமான தகவலையும் கேட்டுப் பெற்று விடுவார்கள். இப்போது விஞ்ஞான வளர்ச்சியைப் பயன்படுத்தி ஒரே க்ளிக்கில் அத்தனை தகவல்களையும் சுருட்டி விடுகிறார்கள். இதைப் பயன்படுத்துபவர்கள் படித்தவர்கள் தான் என்றாலும் ஏமாற்றுவேலை மும்முரமாக நடக்கிறது'' என்றும் பொலிஸார் கூறுகின்றனர். ✦

---

## நான் கண்ட பாரதி...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பை இங்கே இணைக்கின்றேன்: சுவாமி விபுலாநந்தரின் மாணவரான திரு.ஆலாலசுந்தரம் கூறுகிறார்:-

''.........................................................................

*தேசியப் புலவர் சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களைப் படிப்பதில் விபுலாநந்த அடிகளுக்கு மிக்க மகிழ்ச்சியுண்டு.*

*1932 ஆம் ஆண்டில் அடிகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பாரதியார் கழகம் (Bharathi Study Circle) என்ற ஓர் அமைப்பைத் தோற்றுவித்தார்.*

*அப்புலவரின் பாக்களைக் குறித்து அடிகளின் தலைமையில் மாணவர் வாரத்துக்கு இருமுறை சொற்பொழிவுகள் ஆற்றுவதுண்டு.*

*இக்கழகத்தின் சார்பில் 2-2-1932 இல் அடிகள் தலைமையில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் பிரபல தேசப்பக்தரும் சிறந்த மேடைப் பேச்சாளருமான திரு.எஸ்.சத்தியமூர்த்தி பி.ஏ., பி.எல். அவர்கள் பாரதியாரின் திருவுருவப் படத்தினை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திரை நீக்கம் செய்து வைத்துச் சொற்பொழிவாற்றினார்.*

*விபுலாநந்த அடிகள் தாம் எழுதிய ஆங்கிலக் கட்டுரை ஒன்றில் தேசியக் கவி பாரதியார் காட்டிய சமரச வழியினை நாம் பின்பற்ற வேண்டும் என்று எழுதியுள்ளார். அதில் சில வரிகளை மட்டும் ஈண்டு குறிப்பிடுகின்றேன்.*

*"The charm of Bharathi's lyrics, and the dignified tone of his patriotic songs have endeared him to his people. The healthy outlook on life underlying his poems has a universal appeal. May the Tamil people, the inheritors of a glorious civilisation, view the world with the eyes of Bharathi, their latest poet, and rising above narrow sectarianism and petty social conventions march on the path that will lead them to the Divine Spirit, which is the source of all goodness, beauty and truth."*

*(Extract from Swami Vipulananda's article on "The development of Tamilian Religious Thought" published in the Annamalai University Journal Vol. 1 No.2 - as reproduced in the Elamani of January, 1948)*

*மேற்கண்டவாறு சுவாமி விபுலாநந்தர் பாரதியாரைப் பற்றி எழுதியிருக்கிறார்.*

திரு.ஆலாலசுந்தரம் செட்டியார் தரும் விவரங்களிலிருந்து விபுலாநந்தர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ''பாரதி படிவட்டம்'' அமைத்தமை, பாரதி படத்திரை நீக்க விழா நடத்தியமை பற்றியெல்லாம் அறிந்து நாம் பெருமைப்படத்தக்கதாகவிருக்கிறது.

பாரதியாரை மகாகவி என்கிறோம். வரகவி என்கிறோம். புதுமைக் கவி என்கிறோம். வீரக் கவி என்கிறோம். விடுதலைக் கவி என்கிறோம். சுதந்திரக் கவி என்கிறோம். மிக மிக நல்லது.

ஆனால், உண்மையில் பாரதியார் கம்பனை விட, வள்ளுவனை விட, இளங்கோவை விட, வில்லியை விட, சேக்கிழாரை விட, ஜெயங்கொண்டானை விட, புகழேந்தியை விட கவிதா விலாசத்தில் பெரிய கவிஞர் ஆகிவிடுவாரா?

இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டால், இல்லை என்றே பதில் கூறுவேன். கம்பனுடைய கவிதா வின்னியாசத்தின் முன்னால், ''பாரதி சின்னப் பயல்'' தான்.

ஆனால், பாரதியின் தேசாவேசம் இருக்கிறதே, அந்த ஆவேசம்தான் வேறு எந்தக் கவியிடமும் இல்லாத ஒரு தனிச் சிறப்பைப் பாரதிக்குத் தேடித் தந்தது என்பேன்.

பாரத தேசத்தின் கால ஓட்டத்தில் ஒரு சரியான, தேவையான, அவசியமான கட்டத்தில் வாராத மாமணி போல் எப்படியோ வந்து பொருந்திவிட்ட கவிஞர்தான் பாரதியார்.

அந்தப் பொருத்தமே அவரை ஒரு மகாகவியாக உயர்த்தி வைத்தது. அது எப்படி என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

(தொடரும்)

---

# ராசி பலன்

**25-08-2008 முதல் 31-08-2008 வரை**

பொ.சந்திரலிங்கம்

### மேஷம்



அச்சுவினி,பரணி,கார்த்திகை1.

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர்.பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது.

### இடபம்



கார்த்திகை2,3,4.ரோகிணி,மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை.வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளில் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### மிதுனம்



மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா

### கடகம்



புனர்பூசம் 4,பூசம்,ஆயிலியம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற் றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். உதவியை எதிர்பார்ப்பர். தாய் நலம், தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. ஆன்மீக உணர்வு குறையலாம். தொழில்துறை முன்னேற்றம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### சிம்மம்



மகம்,பூரம்,உத்தரம்1

காரியத் தடை இருக்கும். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. ஆன்மீக உணர்வு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை தோன்ற வாய்ப்புண்டு.

### கன்னி



உத்தரம்2,3,4.அத்தம்,சித்திரை 1,2

காரியத்தடை உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாகக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலம், தந்தை நலம் இல்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

### விருச்சிகம்



விசாகம்4,அனுசம்,கேட்டை

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். பெற்றோர் நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவர் நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. ஆன்மீக நாட்டம் உண்டு. தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### தனுசு



மூலம்,பூராடம்,உத்தராடம் 1.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### மகரம்



உத்தராடம்2,3,4.திருவோணம்,அவிட்டம் 1,2

காரியசித்தியுண்டு. பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. நல்ல வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா.

### கும்பம்



அவிட்டம்3,4.சதயம்,பூரட்டாதி 1,2,3

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலம். வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர்.

### மீனம்



பூரட்டாதி4,உத்தரட்டாதி,ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும், பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

# சுசந்திகாவின் எதிர்காலம்...?







மனது இடம் கொடுத்தாலும் வயது இடம்கொடுக்குதில்லை என்ற கதையாக சுசந்திகாவின் இறுதி ஒலிம்பிக் அமைந்துவிட்டது.

தன்னைவிட வயது குறைவான 42 போட்டியாளர்களுடன் ஓடி அரையிறுதிவரை முன்னேறியவர், இலங்கையின் அனைத்துக் கண்களும் பார்த்திருக்க அரையிறுதியில் தோற்றுப் போனார்.

"நான் என்னால் முடியுமட்டும் ஓடினேன். என்னால் முடிந்தளவுக்கு முயற்சி செய்தேன். என்றாலும் எனது கால்கள் நான் விரும்பியபடி ஒத்துழைக்கவில்லை" இவை இலங்கையின் ஒரே கனவாகவும் இறுதிக் கனவாகவும் ஒலிம்பிக்கில் விளங்கிய சுசந்திகா ஜெயசிங்க அரையிறுதியில் தோற்றபின்னர் தெரிவித்த வார்த்தைகள். எனினும், அவர் தான் ஓய்வு பெறுவது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை.

எனினும், இது தனது இறுதி ஒலிம்பிக் என்பதை அவர் சூசகமாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை அமெரிக்காவின் நீச்சல் வீரர் மைக்கல் பெல்ப்ஸிற்கு இது மறக்கமுடியாத ஒலிம்பிககாக அமைந்துள்ளது. எட்டு தங்கப் பதக்கங்களை தொடர்ச்சியாகப் பெற்று பல சாதனைகளை முறியடித்தார்.

பதக்கப்பட்டியலை பொறுத்தவரை சீனாதான் முதலிடம். அமெரிக்கா சீனாவை நெருங்குவதற்கு மிகுந்த சிரமப்பட வேண்டியிருக்கும்.

ஆப்கானிஸ்தானுக்கு ஒரு பதக்கம் கிடைத்திருப்பதும் சீன ஒலிம்பிக்கில் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதேசமயம், பீஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக்கின் ஆரம்பநிகழ்வில் சீனாகள் காட்டிய வேகம், துடிப்பு போன்றவற்றை பீஜிங் ஒலிம்பிக் போட்டிகளிலும் அந்நாட்டு வீர, வீராங்கனைகள் காட்டி வருகின்றனர். அத்துடன் இந்த ஒலிம்பிக் போட்டியில் ஆகக்கூடுதலான ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களையும் இவர்கள் இதுவரையில் பெற்றிருக்கின்றனர்.





சீனர்களைப் பொறுத்தவரையில் அந்நாட்டில் விளையாட்டுத்துறையில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் உடனே அதற்கென தனியான விளையாட்டுக் கழகங்கள் அந்நாட்டு அரசால் உருவாக்கப்பட்டு - அவர்களுக்கு போதியளவு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது வீர, வீராங்கனைகளுக்கு ஒரு சிறந்த பயிற்சியாகவும் ஊக்குவிப்பாகவும் அமைகின்றது.






கொழும்பு, வெள்ளவத்தை தமிழ்ச்சங்கத்தில் கடந்த 10-08-2008 ஞாயிறு அன்று நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவின்போது நகைச்சுவை வேந்து இ.சிறீஸ்கந்தராஜாவால் நகைச்சுவை அமிர்தம் என்ற நூல் வெளியிடப்பட்டது. பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திருவாளர் Dr.ஆர்.கங்காதரன் (சட்டத்தரணி) அவர்களுக்கு பொலிஸ் அத்தியட்சகர் திரு. அாசரத்தினம் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் அத்துடன், நூலின் முதல் பிரதியைப் பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம்.

